குணர்த்தா தகன்றான் மணித்தேரோ னென்றது.

தென்மாத் திசைவசை தீரத் தில்லைச்சிற் றம்பலத்துள்
என்மாத் தலைக்கழல் வைத்தெரி யாடும் இறைதிகழும்
பொன்மாப் புரிசைப் பொழில்திருப் பூவண மன்னபொன்னே
வன்மாக் களிற்றொடு சென்றனர் இன்றுநம் மன்னவரே.

இரவுறுதுயரத்திற் கிரங்கியுரைத்தல்

அயில்தரு கண்ணியைப் பயில்தரு மிரவினுள்
தாங்குவ தரிதெனப் பாங்கி பகர்ந்தது.

ஆழியொன் றீரடி யும்மிலன் பாகன்முக் கண்தில்லையோன்
ஊழியொன் றாதன நான்கும்ஐம் பூதமும் ஆறொடுங்கும்
ஏழியன் றாழ்கட லும்மென் திசையுந் திரிந்திளைத்து
வாழியன் றோஅருக் கன்பெருந் தேர்வந்து வைகுவதே.

இகழ்ச்சி நினைந்தழிதல்

உ ர்த்தாது பிரிந்தாரென - மணித்தாழ் குழலி வாடியது.

பிரியா ரெனஇகழ்ந் தேன்முன் னம்யான்பின்னை எற்பிரியின்
தரியா ளெனஇகழ்ந் தார்மன்னர் தாந்தக்கன் வேள்விமிக்க
எரியா ரெழிலழிக் கும்எழி லம்பலத் தோனெவர்க்கும்
அரியா ருளிலர் போலன்ன என்னை அழிவித்தவே. ௩௪௦

உருவு வெளிப்பட்டு நிற்றல

பொருள்வயிற் பிரிந்த வொளியுறு வேலவன்
ஓங்கழற் கடத்துப் பூங்கொடி ய நினைந்தது.

சேணும் திகழ்மதில் சிற்றம் பலவன்தெண் ணீர்க்கடல்நஞ்
சூணுந் திருத்து மொருவன் திருத்தும் உலகினெல்லாங்
காணுந் திசைதொறுங் கார்க்கய லுஞ்செங் கனியொடுபைம்
பூணும்புணர்முலையுங்கொண்டு தோன்றுமொர்பூங்கொடியே.

நெஞ்சொடு நோ ல

வல்லழற்கடத் து மெல்லியலை நினைந்து
வெஞ்சுடர் வேலோன் நெஞ்சொடு நொந்தது.

பொன்அணி யீட்டியஓட்டரும் நெஞ்சமிப் பொங்குவெங்கா
னின்நணி நிற்குமி தென்னென்ப தேஇமை யோரிறைஞ்சும்
மன்னணி தில்லை வளநக ரன்னஅன் னந டையாள்
மின்னணி நுண்ணிடைக் கோ பொருட்கோநீவிரைகின்றதே

நெஞ்சொடு புலத்தல

அழற் டத் தழுக்கமிக்கு - நிழற்கதிர் வேலோன் நடுவாடியது.

ாய்வயி னுள்ள குணமுமில் லேனைநல் தொண்டுகொண்ட
தீவயின் மேனியன் சிற்றம் பலமன்ன சின்மொழி யைப்
பேய்வயி னும்மரி தாகும் பிரிவெளி தாக்குவித்துச்
செய்வயிற் போந்தநெஞ் சேயஞ்சத் தக்கதுன் சிக்கனவே.

நெஞ்சொ   றுத்த

நீணெறிசென்ற நாறிணர்த் தாரோன்
சேணெறியஞ்சி மீணெறி சென்றது.

தீமே வியநிருத் தன்திருச் சிற்றம் பலம்அனைய [ன்
பூமே வியபொன்னை விட்டுப்பொன்தேடியிப்போ குவெ ா
நாமே நடக்க வொழிந்தனம் யாம்நெஞ்சம் வஞ்சியன்ன [தே
வாமேகலை யைவிட் டோபொருள் தேர்ந்தெம் மவாழ்விப்ப

ந ளோணணி வருந்தல

சென்ற ர் திறத்து நி றுநனி வாடுஞ்
சூழிருங் கூந்தற்குத் தோழிநனி வாடியது.

தெ ணீ ரணிசி ன் சிற்றம் பலஞ்சிந்தி யாத ரின்
ப ணீர் மொழியிவ ளைப்பையுள் எய்தப் பனித்தட கண்

னுள்நீர் உகவொளி வாடிட நீடுசென் றார்சென்றநாள்
எண்ணீர் மையின்நில னுங்குழி யும்விர லிட்டறவே. ௩௪௫

ஏறுவரவுகண் டிரங்கியுரைத்தல

நீடியபொன்னின் னெஞ்சம் நெகிழ்ந்து
வாடியவன் வரவுற்றது.

சுற்றம் பலமின்மை காட்டித்தன் தொல்கழல் தந்த தொல்லோன்
சிற்றம் பலமனை யாள்பர மன்றுதிண் கோட்டின் வண்ணப்
புற்றங் குதர்ந்துநன் றேகொடும் பொன்னார் மணிபுலம்பக்
கொற்றம் மருவுகொல் லேறுசெல் லாநின்ற கூர்ஞ்செக்கரே.

பருவங்கண்டிரங்கல்

மன்னியபருவ முன்னிய செலவின்
இன்னலெய்தி மன்ன னேகியது.

கண்ணுழை யாதுவிண் மேகங் கலந்து கணமயில்தொக்
கெண்ணுழை யாத்தழை கோலிநின் றாலும் இனமலர்வாய்
மண்ணுழை யாவும் அறிந்திலை மன்னனை நின்அருள்போல்
பண்ணுழை யாமொழி யாளென்ன னாங்கொல்மன் பாவியற்கே.

முகிலொடு கூறல

எனைப்பல துயரமோ டேகாநின்றவன்
துனைக்காரதற்குத் துணிந்து சொல்லியது.

அற்படு காட்டில்நின் றாடிசிற் றம்பலத் தான்மிடற்றின்
முற்படு நீள்முகி லென்னின்முன் னேல்முது வோர்குழுமி
விற்படு வாள்நுத லாள்செல்லல் தீர்ப்பான் விரைமலர்தூய்
நெல்படு வான்பலி செய்தய ராநிற்கும் நீள்நகர்க்கே. ௩௪௮

தேர்வரவு கூறல

வேந்தன் பொருளொடு விரும்பி வருமென
ஏந்திழைப்பாங்கி யினிதியம்பியது.

பாவியை வெல்லும் பரிசில்லை யேமுகில் பாவையஞ்சீர்
ஆவியை வெல்லக் கறுக்கின்ற போழ்தத்தி னம்பலத்துக்
காவியை வெல்லும் மிடற்றோ னருளிற் கதுமெனப்போய்
மேவிய மாநிதி யோடன்பர் தேர்வந்து மேவினதே. ௩௪௯

இளையரெதிர் கோடல்

செறிகழலவன் றிருநகர் புகுதர
எறிவேல்இளைஞர் எதிர்கொண்டது.

யாழின் மொழிமங்கை பங்கன் சிற்றம்பலத் தானமைத்த
ஊழின் வலியதொன் றென்னை யொளிமே கலைகளும்
வீழும் வரிவளை மெல்லியல் ஆவிசெல் லாதமுன்னே
சூழுந் தொகுநிதி யோடன்பர் தேர்வந்து தோன்றியதே.

உளமகிழ்ந்துரைத்தல

பெருநிதியோடு திருமனை புகுந்தவன்
வளமனைக் கிழத்தியோ டுளமகிழ்ந் துரைத்தது.

மயில்மன்னு சாயலிம் மானைப் பிரிந்து பொருள்வளர்ப்
பான் வெயில்மன்னு வெஞ்சுரஞ் சென்றதெல் லாம்விடை
யோன்புலியூர்க் குயில்மன்னு சொல்லிமென் கொங்கை
யென் அங்கத் திடைக்குளிப்பத் துயில்மன்னு பூவணை
மேலணை யாமுன் துவளுற்றதே ௨௫௧

௨௫ பரத்தையிற் பிரிவு

கண்டவர் கூறல்

ஊரற்கு வேலோன் பரத்தையிற் பிரியத்
திண்டேர் வீதியிற் கண்டோர் கூறியது.

உடுத்தணி வாளர வன்தில்லை யூரன் வரவொருங்கே
எடுத்தணி கையே(று) இனவளை யார்ப்ப இளமயிலேர்
கடுத்தணி காமர் கரும்புருவச்சிலை கண்மலரம்
படுத்தரி வாளிணை யோர்சுற்றும் பற்றினர் மாதிரமே. ௨௫௨

பொறையுவந்துரைத்தல

கள்ளவிழ் கோதையைக் காதற்றோழி
உள்ளவிழ் பொறையுண் டென்றுரைத்தது.

கரும்புறு கொன்றையன் தொல்புலியூர்ச்சுருங் கும்மருங்குல்
பெரும்பொறை யாட்டியை யென்இன்று பேசுவ பேரொலிநீர்க்
கரும்பு [illegible] யூரன் கலந்தகன் றானென்று [illegible] மணியும்
அரும்பொறை யாகுமென் னாவியுந் தேய்வுற் றழிகின்றதே

பொதுப்படக்கூறி யழுங்கல

பொற்றி ழூரவன் மற்றிகழ் தில்லைப்
பிரிந்தவூரனோ டிருந்து வாடியது.

அப்புற்ற சென்னியன் தில்லை யுறாரி னவர்உறுநோய்
ஒப்புற் றெழில்நல மூரன் கவர உள் ளும்புறம்பும்
வெப்புற்று வெய்துயிர்ப் புற்றுத்தம் மெல்லணை யேதுணையாச்
செப்புற்ற கொங்கையர் யாவர்கொ லாருயிர் தேய்பவரே.

கனவிழந் துரைத்தல

சினவிற் றடக்கைத் தீம்புன லூரனைக்
கனவிற் கண்ட காரிகை யுரைத்தது.

தேவா சுரரிறைஞ் சுங்கழ லோன்தில்லை சேரலர்போல்
ஆவா கனவும் இழந்தேன் நனவென் றமளியின்மேல்
பூவார் அகலம்வந் தூரன் தரப்புலம் பாய்நலம்பாய்
பாவாய் தழுவிற்றி லேன்விழித் தேனரும் பாவியனே. ௩௫௫

விளக்கொடு வெறுத்தல

பஞ்சணைத் துயின்ற பஞ்சின் மெல்லடி
அன்பனோ டூங்கிச் செஞ்சுடர்க் குரைத்தது.

செம்முகம் நீலம் மலர்தில்லைச் சிற்றம் பலத்தரற்குக்
கைம்முகங் கூம்பக் கழல்பணி யாரிற் கலந்தவர்க்குப்
பொய்ம்முகங் காட்டிக்கரத்தல் பொருத்தமன் றேயிறையே
நெய்ம்முகம் மாந்தி இருள்முகங் கீழும்நெடுஞ்சுடரே. ௩௫௬

வாரம் பகர்ந்து வாயின் மறுத்துரைத்தல

வார்புனலூரனேர் திகழ் தோள்வயிற்
கார்புரை குழலி வாரம் பகர்ந்தது.

பூங்குவளைப்பொலி மாலையும் ஊரன்பொற் றோளிணையும்
ஆங்குவளைத்துவைத்(து)ஆரேனுங் கொள்கநள்ளார்அரணந்
தீங்கு வளைத்தவில் லோன்தில்லைச் சிற்றம் பலத்தயல்வாய்
ஓங்கு வளைக்கரத் தார்க்கடுத் தோமன் றுறவரையே. ௩௫௭

பள்ளியிடத் தூடல

படிவர்கற்பிற் றொடிவர்கோதை
ஆடவன்றன்னோ டூடியுரைத்தது.

தவஞ்செய் திலாதவெந் தீவினையேம் புன்மைத்தன்மைக்கெள்ளா
தெவஞ்செய்துநின்றினியின்றுனை நோவதென் அத்தன்முத்தன்

சி ன்செய்த சீரரு ளார்தில்லை யூரநின் சேயிழையார்
நலஞ்செய்த புல்லங்கள் மாட்டேம் தொடல்விடு நற் லையே.

சேவ ணி விடு க விலலே ர் கூறல

பாற்செலு மொழியார் மேற்செலவிரும்பல்
பொல்லாதென்ன வில்லோர் புகன்றது.

தணியுறப் பொ ' குமிக் கொங்கை கள்தாங்கித் தளர்மருங்குல்
பிணியுறப் பேதைசென் றின்றெய்துமால் அரவும்பிறையும்
அணியுறக்கொ ண்டவன் தில்லைத்தொல்லாயநல்லார்கண்முன்னே
பணியுறத் தோன்றும் நுடங்கிடை யார்கள் பயில்மனைக்கே .

அ லறிவுரைத்த ள அழு மெய் ல

உலகியலறியச் செலவிடலுற்ற
விழுத்தகை மாதர்க் கழுக்கஞ் சென்றது.

இரவணை யும்மதி யோர்நு லார்நுதி ' கோலஞ்செய்து
குர ணை யுங்குழல் இங்கிவ ளால்இக் குறியறிவித்
தரவணை யுஞ்சடை யோன்தில்லை யூரனை யாங்கொருத்தி
தரஅணை யும்பரி சாயின வாறுநம் தன்மைகளே ௩௬௦

சேவவணி கணடவாயில்வர் கூறல

மணிக்குழைபூப்பியல் உணர்த்தவந்த
ஆயிழையைக் கண்ட வாயிலவருரைத்தது.

சிவந்தபொன் மேனி மணிதிருச் சிற்றம் பலமுடையான்
சிவந்தஅம் தாளணி யூரற் குலகிய லாறுரைப்பான்
சிவந்த பம்போதும்அம்செம்மலர்ப்பட்டுங்கட்டார்முலைமேற்
சிவந்தஅம் சாந்தமுந் தோன்றின வந்து திருமனைக்கே .

மனைபுகல கண்ட யில் ர கூறல

டனறிந்தூரன் கடிமனை புகுதர
ரய்ந்த வாயிலவ ராய்ந்துரைத்தது.

குராப்பயில் கூழை யிவளின்மி ' கம்பலத் தான்குழையாம்
அராப்பயில் நுண்ணிடை யாரட ' காரெவ ரேயினிப்ப '
டிராப்பகல் நின்றுணங் கிர் ' கடையித்துணைப்போழ்திற்சென்று
காராப்பயில் பூம்புன லூரன் புகுமி ' கடிமனை 'டே ௩௬௨

முகமலர்ச்சி கூறல

பூம்புனலூரன் புகமுகம்மலர்ந்த
தேம்புனை கோதை திறம்பிறருரைத்தது.

வந்தான் வயலணி யூர னெனச்சின வாள்மலர்க் ண்
செந்தா மரைச்செவ்வி சென்றசிற் றம்பல வன்னருளான்
முந்தா யினவியன் நோக்கெ திர் நோக்க முகமடுவிற்
பைந்தாட் குவளைகள் பூத்திருள் சூழ்ந்து பயின்றனவே.

ால நிகழ்வுரைத் ல

இகழ்வதெவன்கொ னிகழ்வதிவ்வாறெனச்
செழுமலர்க் கோதை புழையருரைத்தது.

வில்லினை ப் போதின் விரும்பா அரும்பா வியர்களன்பிற்
செல்லினைப் போதின் எரியுடையோன் தில்லைஅம்பலஞ்சூழ்
மல்லிகைப் போதின்வெண் ச ' கம்வண் டேவிண் தோய்பி றயோ
டெல்லிகைப் போதியல் வேல்வயலூரற் கெதிர்கொண்டதே.

எய் நலேடுத்துரைத்தல

சீரியலுலகிற் றிகழ்தரக்கூடி - வார்புனலூரன் மகிழ்வுற்றது.

புலவித் திரைபொரச் சீறடிப் பூங்கலஞ் சென் றிஉய்ப்ப '
கலவிக் டலுட்கலிங்கஞ் சென்றெய்தி ' கதிர்கொண்முத்தம்
நிலவி நிறைமது ஆர்ந்தம் பலத்துநின் றோனருள்போன்
றுலவிய லாத்தனஞ் சென்றெய்த லாயின வூரனு ' கே. ௩௬௫

லவிகருதிப் பு தத

மன்னியவுலகில் துன்னியஅன்பொடு-கலவிகருதிப்புலவியெய்தியது.

செவ் ாய் துடிப்பக் கருங்கண் பிறழச்சிற் றம்பலத்தெம்
மொய்வார் சடையோன் அருளின் முயங்கி மயங்குகின்றாள்
வெவ் ா யுயிர்ப்பொ ாடு விம்மிக் கலுழ்ந்து புலந்துநைந்தாள்
இவ் ா றருள்பிறர்க் காகு மெனநினைந் தின்நகையே. ௩ ௬

குறிப்பறிந்து புலந் ம கூறல

குறிப்பினிற் குறிப்பு நெறிப்பட நோக்கி
மலர்நெடுங்கண்ணி புலவியுற்றது.

மலைப் பொருவடி மானுந் தமியள்மன் னன்ஒரு ன்
பலைப் பொறுதென் றிழிந்துநின் றுள்பள்ளி ாமநெய்த

அலரைப் பொருதன் றழல்விழித் தோனம் பலம்வணங்காக்
ல ரப் பொருச்சிறி யாளென்னை ெ ால்லோ · ருதியதே.

ரயில ° ரழுத்தல

தலைமகனது த வுடைமை நிலைதகுவாயில் நின்றோருரைத்தது.

வில்லைப் பொலிநுதல் வேற்பொலி கண்ணி மெலிவறிந்து
வல்லைப் பொலிவொடு வந்தமை யால்நின்று வான்வழுத்துந்
தில்லைப் பொலிசிவன் சிற்றம் பலஞ்சிந்தை செய்பவரின்
மல்லைப் பொலிவய லூரன்மெய் யேதக் வாய்மையனே.

புனல ரவுரைத்தல

புனலாடுகவெனப் புனைந்துகொண்டு
மனைபுகு த னை வயமுரைத்தது.

சூன்முதிர் துள்ளுநடைப் பெடை கில்துணைச்சேவல்செய்வான்
தேன்முதிர் வேழத்தின் மென்பூ குதர் செம்மலூரன் திண்டோள்
மான்முதிர் நோக்கின் ல் லார்மகி ழத்தில்லை யானருளே
போல்முதிர் பொய்கை யிற் பாய்ந்தது வாய்ந்த புதுப்புனலே.

ே ரவரவு கணடு மகிழ்ந்து கூறல

பயின்மணித்தேர்செலப் பரத் தயர்சேரிக்
யன்மணிக்கன்னியர் கட்டுரைத்தது.

சேயே யெனமன்னு தீம்புன லூரன்திண் தோளிணைகள்
தோயீர் பு ர்தவந் தொன்மைசெய் தீர்சுடர் கின்றதெ ாலந்
தீ ே யென மன்னு சிற்றம்பலவர்தில் லைநகர்வாய்
வீயே யெனஅடி யீர்நெடுந் தேர்வந்து மேவினதே. ௩௭௦

பு ல விளைய டடி ப தமழுநு ரத ல

தீம்புனல் வாயிற் சேயிழைவருமெனக்
காம்பணதோளியர் கலந்து கட்டுரைத்தது.

அரமங் கை யரென வந்து விழாப்புகும் அவ்வவர்வான்
அரமங் கை யரென வந்தணு கும்மவ ளன்றுகிராற்
சிரம் யனைச்செற் றோன்தில்லைச் சிற்றம் பலம்வழுத்தாப்
புரமங்கை யரின்னையாதையகாத் தும்நம்பொற்பரையே. ௩௭௧

ஊனை வியந்து ர தல

அரத்தத்துவர்வாய்ப் பரத்தைத்தலைவி
முனிவு தோன்ற நனிபுகன்றது.

கனலூர் கணைதுணை யூர்கெடச் செற்றசிற் றம்பலத்தெம்
அனலூர் சடையோ னருள்பெற் றவரின் அமரப்புல்லும்
மினலூர் நகையவர் தம்பா லருள்விலக் காவிடின்யான்
புனலூ ரனைப்பிரி யும்புனல் ஊர்கண்அப் பூங்கொடியே.

நகைத்துரைத லல

வேந்தன் பிரிய வேந்திழைமடந்தை
பரத்தையை நோக்கி விரித்துரைத்தது.

இறுமாப்பொழியுமன்றேதங்கைதோன்றினெனெங் கஅங்கைச்
சிறுமான் தரித்தசிற் றம்பலத்தான் தில்லையூரன் திண்தோள்
பெறுமாத் தொடுத்தன்ன பேரணுக்குப்பெற்றபெற்றியினே
டிறுமாப் பொழிய இறுமாப் பொழிந்த இணைமுலையே.

நாணுதல கணடு மிகுததுரைத ல

மன்னவன் பிரிய நன்மனைக்கிழத்தி ய
நாணுதல்கண்ட வாணுதலுரைத்தது.

வேயாது செப்பின் அடைத்துத் தமிவைகும் வியினன் ர
தியாடி சிற்றம் பலமனை யாள்தி 'லை யூரனு 'கின்
றேயாப் பழியென நாணியென் ண்இங்ஙனேம றத்தாள்
யாயா மியல்பிவள் கற்புநற் பால இயல்பு ளே ௩௭௪

பா வு ல

இகல்வேலவனகல் வறியாப் பாணனைப்
பூங்குழன் மாதர்க்குப் பாங்கி ப ர்ந்தது.

விறலியும் பாணனும் வே 'தற்குத் தில்லை யிறையமைத்த
திறலியல் யாழ்கொண்டு ந்துநின் றூர்சென்றிராத்திசைபோ '
பரலியல் வாவல் பகலுறை மாமரம் போலுமன்றே
அறலியல் கூழைநல் லாய்தமி யோமை யறிந்திலரே. ௫

தே ழி யியறபழித்தல

தலைம னைத் தகவிலனெனச் - சிலைநுதற்பாங்கி தீ 'குசெப்பியது.

தி 'கின் இலங்குதிண் தோளிறை தில்லைச்சிற் றம்பலத்து '
ெ ாக்கி ' இற , ணிந்துகி ' றுடிசெதன் கூடல '

அ ்கின் ந யிவள் ய அயல்வயின் ல்குதலால்
த ்கின் றிருந்திலன் னின்றசெவ் வேலெம் தனிவள்ளலே.

ழுயரி ற பழித்தல

அரத்தவே லண்ணல் பரத்தையிற்பிரியக்
குழை முகத்தவளுக் குழையருரைத்தது.

அன்புடை நெஞ்சத் திவள்பே துறஅம் பலத்தடியார்
என்பி ட வந்தமிழ் துறநின் ருடி யிருஞ்சுழியல்
த ்பெடை ை யத் தக யழிந் தன்னஞ் சலஞ்சலத்தின்
ன்பெடை மே ் துயி லும்வய லூரன் வரம்பிலனே. ௩௭௭

இ றபட மே ழி ல

ரிசிலையூர ் பரி பழித்த உழையர்கேட்ப எழில் ை யுரைத்தது.

அஞ்சார் புரஞ்செற்ற சிற்றம் பலவர்அந் தண்கயிலை
மஞ்சார் புனத்தன் று மாந்தழை யேந்திவந் தாரவரென்
நெஞ்சார் வில ்கினும் நீ ் ார் நனவு னவுமுண்டேற்
பஞ்சா ரமளிப் பிரிதலுண் டோவெம் பயோதரமே. ௩௭௮

நினை ்து வியந்து ரத்தல

ெ ல்லியற் பரத் தயை விரும்பி மேவினோன்
அல்லிய ் கோதையை யகனமர்ந் துரைத்தது.

தெள்ளம் பு றக ் க தங்குஞ் ச டையன்சிற் றம்பலத்தான்
ள்ளம் புகுெ ஞ்சர ாறு இறையுறை காழியன்னாள்
உள்ளம் புகுமொரு ாற்பிரி யாதுள்ளி ள்ளுதொறும்
பள்ளம் புகும்புனல் போன்ற த் தேவரும் பான்மையளே.

யிலபெற ம றிற நினை ல

பொற்றொடிமாதர் நற் டகுறகி
நீடிய ாயிலின் ாடினன் மொழிந்தது.

தேன் ் டுறைதரு ெ ான்றையன் சிற்றம்பலம் முத்தும்
ான் ் டுறைதரு ாய் மயன் மன்னு குதலை இ ் வா
யா ் ் டு றதரு மாலமு தன்னவன் வந்தணையா ்
ா ் ்டுறைதருெ ா ் யெவ்வாறுெ ா ் ் ணு தே.

வாயிற்கணநின்று தோழிகூறுதல

பெருந்தகைவாயிற் பெருந்துகின்
றருந்தகைப்ப ங்கிக் கறியவுரைத்தது.

கயல்வந்த ணியர் கண்ணிணை யால்மிகு காதரத்தால்
மயல்வந்த ரட ம் அகற்று விரதமென் மாமதியின்
அயல்வந்த ஆடர வாடவைத் தோனம் பலம்நிலவு
புயல்வந்த மாமதிற் றில்லைநன் னாட்டுப் பொலிபவரே. ௩௮௧

ாயிலவே ட தே ழிகூறல

வையே லண்ணல் வாயில்வேண்டப்
பையரவல்குல் பாங்கி ப ர்ந்தது.

கூற்றா யினவின ஆளிவெண் ணீர்கண்கள் ே ாளிழித்தால்
போற்றான் செறியிருட் பொக்கமெண் ணர்கன்றகன்றபுனிற்
றீற்றா வெனநீர் வருவது பண்டின்றெம் ஈசர்தில்லைத்
தேற்றார் கொடிநெடு வீதியிற் போதிர்அத் தேர்மிசையே.

தே ழி வாயிலவேணடல

ாயில் பெறாது மன்னவன்றிறப
ஆயி ழயவட்குத் தோழி சொல்லியது.

வியந்(து)அலைநீர்வையம்மெய்யேயி றஞ்சவிண்தோய்குடை கீழ்
யந்தலை கூர்ந்தொன்றும் வாய்திற வார்வந்த ாளரக் ன்
புயந்தலை நீரப் புலியூர் அரணிருக் கும்பொருப்பிற்
யந்தலை யானை டிந்த விருந்தி ர் கார்மயிலே. ௩அ

னை ா மகிழ ல

கன்னிமாதே கி று நோக்க
மன்னியமனையவர் மகிழ்ந்துரைத்தது.

தேவிஅ கண் தி ழ் மேனியன் சிற்றம் பலத்தெழுதும்
ஓவியங்கண்டன்ன ஒ ணுதலாள் , கோவை யுய்ப்பா
மே(வு)இயங் கண்டனை யோவந் த னென வெய்துயிர்த்துக்
ரவிய க கழு நீர்ச்செவ்வி வெளவுதல் கற்றனவே. அச

யினை த் த ல

மட றற்றோழி வாயில்வேண்ட அடல்வேலவ ளுருளுரைத்தது.

உடைமணி கட்டிச் சிறுதேர் உருட்டி யுலாத்தருமிந்
டமணி யத்தந்த பின் ர்முன் நான்மு ன் மாலறியா

வி டமணிக ' டர்வண் தில்லைமென்றோ யன்றூர் ண்மு ' ம்
டமணி வாள்நகை யாயின்று ண்டனர் காதலரே. ௩அ௫

பாணனொடு ெ துளுதல

மன் ஊியாழ்ப்பாணன் வாயில்வேண்ட
மின்னிடை மடந்தை வெகுண்டுரைத்தது.

மைகொ ' ட ' டர்வயல்ெ ாண்டதில்லைமல்கூரர்நின்வாய்
மெய்கொ ' ட அன்பினரென்பதென்விள்ளாஅருள்பெரியர்
வெ ாண்டலூசிகோல்சேரியின்விற்றெறம்இல்வண்ண வண்ணப்
பொய்ெ ாண்டு நிற்கலுற் றேபுலை ஆத்தின்னி போந்ததுமே .

ப புலந் ல

கருமலர்க் ண்ணி னன்று ட்டுரைப்பப்
புரியாழ்ப்பாணன் புறப்பட்டது.

ெ ால்லா ' டிலங்குமழுப்படை யோன்குளிர் தில்லையன்னாய்
வில்லாண் டில ' கு புருவம் ெ ரியச்செவ் வாய்துடிப்பக்
ல்லாண் டெடேல்கருங் கண்சிவப் பாற்று கறுப்பதுன்று
பல்லாண் ' டியேன் அடிவலங் கொள்வன் பணிமொழியே

விருந்தோடு செல்லத் தணிந்தமை கூறல

பல்வளை பரிசு ண் - டில்லோ ரியம்பியது.

மத்தக் கரிஉரி யோன்தில்லை யூரன் வரவெனலுங்
த, ' தை ' கிளவி மு த்தா மரைத்தழல் வேல்மிளிர்ந்து
முத்தம் பயக்கு ' கழுநீர் விருந்தொடென் றுதமுன்னங்
கித்த ' ருங்குவளைச்செவ்வி யோடிக் கெழுமினவே ௩அஅ

டல ணிவித் ல

தோன்றலைத் துணையொடு தோழி ண்டு
வான்ற க மடந்தையை ருத்தந் தணித்தது.

வல ' கொள்பேய்த்தொ பாய்தரக் ாட்டிடையாட்டு ந்த
த ல ' கி லாச்சிவன் தில்லைஅன் னாய்தழு ிம்முழுவிச்
சு) ' கிரு ' தகம் ே, ான்றல் துணையெனத்தோன்றுத ா '
அ ல ' ளைந்து பணிசெயற் பாலை யரசனு ' ே . ௩அ

அணை வழியூடல

தெளிபு ஊரன் சென்றணைந்தவழி
ஒளிமதிநுதலி யூடியுரைத்தது.

சேல்தான் தி ழ்வயற் சிற்றம் பலவர்தில் லை கர்வாய்
வேல்தான் திகழ்கண் இளையார்வெகுள்வர்மெய்ப்பாலன்செய்த
பால்தான் தி ழும் பரிசினம் மேவும் படிறுவவேம்
கால்தான் தொடல்தொடரேல்விடுதீண்டலெங்கைத்தலமே.

புனல டு வி ம கூறிப் புலததல

ஆங் தனுக் கழுக்கமெய்தி • வீங்குமென் முலை விட்டுரைத்தது

செந்தார் நறுங்கொன்றைச் சிற்றம் பலவர்தி லைந ரோர்
பந்தார் விரலியைப் பாய்புன லாட்டிமன் பாவியெற்கு
வந்தார் பரிசுமன் றுய்நிற்கு மாறென் வளமனையிற்
கொந்தார் தடந்தோள்விடம்கால் அயிற்படைக்கொற்றவரே

கலவி கருதிப் புலத்த ல

கலைவளரல்குல் தலைமகன்றன்னொடு
கலவி ருதிப் புலவி பு ன்றது.

மின்துன் னியசெஞ் சடைவெண் மதியன் விதியுடையோர்
சென்றுன் னியகழற் சிற்றம் பலவன்தென் னம்பொதியில்
நன்றுஞ் சிறியவ ரில்லெம தில்லம் ல் ஊரமன்னோ
இன்றுன் திருவரு ளித்துணை சாலுமன் னை களுக்கே

மிகுத்து த் தூடல

நாடும் ரும் இல்லுஞ்சுட்டி ஆடற்பூங்கொடி யூடியுரைத்தது.

செழுமிய மாளிகை ச் சிற்றம் பலவர்சென் றன்பர்சிந்தை
ழுமிய கூத்தர் கடிபொழி லேழினும் வாழியரோ
விழுமிய ாட்டு விழுமிய நல்லூர் விழுக்குடியீர்
விழுமிய அல்லகொல் லோஇன்னவாறு விரும்புவதே. ௩௯

டலநீட டி யு ததல

வாடா வூடல் நீடா வாடியது.

திருந்தேன் உ(ய்)யநின்ற சிற்றம்பலவர்தென்னம்பொதியி
இரு தேன் உயவந் திணைமலர் ணின் இன்மே ா ருளிப்
பெருந்தேனெனநெஞ்சுகப்பிடித்தா ட ம்பெண் மிழ்தம்
வருந்தே லதுவன் றிதுவோ வருவதொர் ஞ்சனையே. ௩ ச

துனி ொழிந் ததல

தகுதியினூரன் மிகுபத நோக்கிப்
பனிமலர்க் கோதை துனியொழிந்தது.

இயல்மன்னும் அன்புதந் தார்க்கென் நிலையிமை யோரி
றஞ்சுஞ் செயல்மன்னுஞ் சீர்க்கழற் சிற்றம் பல ர்தென்
னம்பொதியிற், புயல்மன்னு குன்றிற் பொருவேல் துணை
யாப்போம் மென்இருள்வாய் அயன்மன்னும் யானை துரந்
தரி தேரும் அதரகத்தே. ௩ ௫

புதல ன மேல வததுப் புலவிதீர்தல

புதல்வனது திறம்புகன்று
மதாரிக் ண்ணி வாட்டந்தவிர்ந்தது.

திர்த்த நகை மன்னுஞ் சிற்றவ்வை மார் ளைக் ண்
பி ழப்பித் தெதிர்த்தெங்கு நின்றெப் பரிசளித் தானிமை
யோரிறைஞ்சும் மதுத்தங் கியகொன்றை ார்ச ட
யீசர்வண் தில்லைநல்லார் பொதுத்தம்ப லங்கொணர்ந்
தோபுதல்வா எம் மப் பூசிப்பதே. ௩௬௬

லவி யிடததூடல

சீறடி 'குடைந்த நாறிணர்த்தாரவன்
தன் ம ண்டு பின்னுந்தளர்ந்தது.

சிலைமலி ரணுத லெங்கை ய தாக மெனச்செழும்பூ '
மலை- லி மார்பி னுதைப்பதந் தான்தலை மன்னர் தில்லை
உலைமலி வேற்ப ட யூரனிற் ள்வரில் எனனவுன்னி '
லைமலி ரிளை ண்முத்த மாலை லுழ்ந்தனவே ௩

ழ நி ழ வு தூடல தீர்த ல

முன்னி ழ்ந்தது நன்னுதற் கு ரத்து
மன்னுபுனலூரன் மகிழ்வுற்றது.

ஆறார் சடைமுடி அம்ப த் தண்டரண் டம்பெறினும்
மாறார் மழவிடை யாய்க ' டிலம்வ ' திரெ துப்பு
நீறார் ொடுெ றி செ 'றிச் செறிமென் முலைநெரு ' ச்
சீறார் ம ரயத ிற்ற 'கு 'குற் சிறுதுயிலே. ௩ அ

பரத த க டமைகூறிப புலத்தல

பரத்தையைக்கண்ட பவளவாய்மாதர்
ஆரத்தெடுவே லண்ணற் குரைத்தது.

ஐயுற வாய்நம் அகன்கடைக் கண்டுவண் தேருருட்டும்
மையுறு வாட்கண் மழலைத் தழுவமற் றுன்மகனே
மெய்யுற வாம்இதுன் இல்லே வருகென வெள்கிச்சென்றாள்
ை யுறு மான்மறி யோன்புலி யூரன்ன காரிகையே. ௩௯௯

ஊதிய மெடு து ரத் தூடல தீர்த்தல

இரும்பரிசி லேற்றவர்க்கருளி
விரும்பினர் மகிழ மேவுதலுரைத்தது.

காரணி கற்பகங் கற்றவர் நற்றுணை பாணரொக்கல்
சீரணி சிந்தா மணியணி தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் தக்கோர் தஞ்சங்க நிதிவிதிசேர்
ஊருணி உற்றவர்க் கூரன்மற் றியாவர்க்கும் ஊதியமே.

திருக்கோவைய ர் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்

திருக்கோவையார் செய்யுள்களில் (*) குறியிடப்பட்ட செய்யுள்களுக்கு இதனடியில் பொழிப்புரை வரையப்பட்டுள்ளது.

க. இச்செய்யுள் தலைம ' தலைம ளை முதலில் கண்டபோது, காதல் ொ ண்டு அவ ' அழகை வியந்து கூறியதை உணர்த்து கின்றது.

(பொழிப்பு) இலக்குமி வசிக்கும் அல்லது கண்டாரால் விரும் பப்படும் தன்மை வாய்ந்த தாமரை மல ரயும் அழகு வளரு ' நீலோற்பல மல ரயும் நடராஜப் பெருமான் வீற்றிருக்கும் தில்லை ந ரின் ண் உண்டாகிய குமிழமரத்து நல்ல நிறம் ாய்ந்த பூவினையும், ே ாங்கு அரும்பினையும் பசிய ாந்தள் மலரினையும் உறுப்பா ' கொண்டு மேம்பட்ட தெய்வ மணம் கமழும் மாலை ஒரு கொடி போலத் துவண்டு, அன்னத்தின் நடைபோல நடை வாய்ந்து, டிவு ளரும் மன்மதனது வெற்றிக் ொடிபோன்று வி ாங்குகின்றது. இது என்ன அதிசயம் .

ங. இச்செய்யுள் தலைவியின் உள்ளக் கருத்தை அறிந்த தலை ன் கூறியதை உணர்த்துகின்றது.

மின்னும் பணியும்......ப டக் ண் ளே பிறழப் பிறழ, அணி யும். ....பிணியும் அதற்கு மருந்தும் (ஆவன) உ ட.

மின் லையும் பாம்பையும் ஒத்த இடையினையும் பெரிய தோளினையும் உ டய ரு டய வேல்போன்ற ண்கள் பிறழுந் தோறும் பிறழுந்தோறும் பொது நோக்கத்தாற் பிணியும், உள் ' கருத்தை வெளிப்படுத்தும் நாணொடு கூடிய நோ ' த்தால் அப் பிணிக்கு மருந்தும் ஆவன. அணியும்......பிணியும் எனக்கு ஆபரண மும் அமுதமும் என் -யிருமாய ன் சி ' தாமணி யப் போன்று தில்லையின் ண் இரு ' து அன்பர் ' கு நினைத்த ற் ற ' ொடுப் போன் தே ர் ள் அறிய த அந்த ன் அ னுடைய திருவடி ளை வாழ்த்தாதவர் அடையும்படியான நோ யப்போன்ற பிணியும் ' கூட்டு . 'இருநோக் கிவளுண் ண் உள்ள தொருநோக்கு ே ாய்

நோக்கொன் றந்நோய் மருந்து" என்னும் திருக்குறளோடு ஒப்பிடுக.

௨௦. இச்செய்யுள் தலைவனுடைய பாங்கன் (தோழன்) தலைவனை எதிர்ப்பட்டபோது அவன் மெலிவுற்றிருப்பதை நோக்கி அவனை வினவியதை உணர்த்துகின்றது.

கரையினுற் சூழப்பட்டுள்ள மிக்க நீரையுடைய தில்லைச் சிற்றம்பலமாகிய (பெருமை பொருந்திய) இடத்தும் என் நெஞ்சமாகிய (அற்பமாகிய) இடத்தும் ஒப்பத் தங்குமவனது உயர்ந்த மதிலையுடைய மதுரையின்கண் ஆராய்ந்த விளக்கம் மிக்க இனிய தமிழின் துறைகளில் த்து மனதைச் செலுத்தினையோ அல்லது எழிசையாகிய சுழலில் அகப்பட்டனையோ? இறைவனே. பெரிய மலையை ஒத்த உன் தோள்கள் மெலிவடையக் காரணம் என்னை?

௨௧. இச்செய்யுள் தலைமகன், தலைவி தோழியாகிய இருவரிடம் சென்று தன் ஆற்றுமை மிகுதியைக் கூறியதைத் தெரிவிக்கின்றது.

தானே வந்து என்னுள்ளத்திற் புகுந்து என்னை ஒரு பொருளாக மதித்து அடிமையாக்கிக் கொண்டு இந்திரன் மால் அயன் இவர்களுக்கு இருளாய் (வெளிப்படாமல் மறைந்து) இருக்கின்ற ஒளி பொருந்திய சிற்றம்பலத்தை ஒத்த சுருள் ள் நிறைந்த கரிய கூந்தலையும் வெண்மையான பற்களையும் சிவந்த வாயினையும் உடுக்கை போன்ற இடையையும் உடைய பெண்களே. நீங்கள் அருளா விட்டால் எனது ஆருயிர் தப்பாமல் அழியும். ஆதலால் அருள வேண்டும்.

"அருளா தொழிந்தால் அடியேனை அஞ்சேலென்பார் ஆர் இங்குப் பொருளா என்னைப் புகுந்தாண்ட பொன்னே பொன்னம் பலக்கூத்தா" திருவாசகம்.

௨௨. தலைவியின் அவயவத்தின் அழகைத் தோழி தலைமகனுக்குக் கூறியதை இச்செய்யுள் உணர்த்துகின்றது.

தலைவியின் மொழிக்கு ஒப்பாக யாழையும் எழுதிப் பற்களாக அழகிய முத்துக்களை எழுதி, இருண்ட (கரிய) கூந்தலில் முடித்த மெல்லிய பூமாலையையும் எழுதி, வாயாகக் கொவ்வைக்கனியையும்

எழுதி என் பழமையான ஏழு பிறவியையும் பிரமன் எழுதாவண்ணம் அழித்தவனாகிய நடராஜப் பெருமானது தில்லையிலுள்ள மாவடுவின் பிளப்பை (கண்களுக்கு ஒப்பாக) எழுதப்பட்ட பூங்கொம்பு ஒன்று இருக்குமாயின் அதனை எடுத்துக்கொண்டு (மடலேற) ஏறும்.

அகூ. இச்செய்யுள் தலைமகள் பெருநாணமுடையவளாய்த் தோழியிடத்து தன் குறையை வெளிப்படையாகக் கூறாது மாயவன் மேல் வைத்து வஞ்சித்துக் கூறுவதை உணர்த்துகின்றது.

முப்புரங்களை அழித்தவனது திருவடிகளைக் காணும் பொருட்டுத் திருமால் நிலத்தைத் தோண்டிச்சென்று அறியமாட்டாமல் பின் 'எந்தையே கருணைகூர்ந்து அருள் புரிவாய்" என்று சிவபெருமானை வேண்ட, தன் இரு திருவடிகளையும் தொழும்பொருட்டு எனக்கு இரண்டு நாட்டங்களைக் கொடுத்தவனாகிய அவன் சிறிது இரங்கி ஒரு திருவடியைத் தூக்கிக்காட்ட, மற்றொன்றையும் காட்டிடல் வேண்டுமென்று திருமால் தில்லையம்பல முற்றத்தின்கண் வரம் வேண்டித் தாழ்ந்து கிடக்கின்றான் போலும். இச்செய்யுளால் பாங்கற்கூட்டம் பெற்ற தலைமகன் தோழியின் கூட்டத்திற்குத் துவளுகின்றான் என்று குறிப்பாகத் தலைமகள் தோழிக்குத் தெரிவிக்கின்றாள்.

கo. இச்செய்யுள் தலைமகன் தலைமகளது கண்களை வியந்து பாராட்டியதைத் தெரிவிக்கின்றது.

அவளுடைய பெரிய கண்கள், ஈசனிடத்து யான் வைத்த அன்பு போல அகன்று, அவனால் வாங்கப்பட்ட எனது பாசம் போலக்கறுத்து தில்லையின் ஒளியைப்போன்று அவன் தோள்களிற் பூசப்பட்ட திருநீற்றினைப் போல வெளுத்து, அவனுடைய பூப்போலும் திருவடிகளை யாம் பேசும் அத்திருவார்த்தைகளைப்போன்று மிகவும் நீண்டிருக்கும்.

கசo. என் நெஞ்சிற் புகுந்திருந்து தன்னை யான் நினையும்படிச் செய்து அம்பலத்தின்கண் தன் திருமேனி காட்டி நின்று யான் தன்னைப் புகழும்படிச் செய்த ஈசனது பொதிய மலைக்கண்ணுள்ள பொருப்பன் (தலைவன்) மீது வைத்த விருப்பினால், தினையை விதைத்து அதனைக் காத்து (அதன் காரணமாக அவனை எதிர்ப்படலாமென்று எண்ணி) மகிழ்ந்து நின்ற எமக்கு அத்தினையைக் காத்த

காவல் போய், தீவினையை விதைத்து அதனைக் காத்து அதன் விளையும் உண்டதாகி முடிந்தது.

உ௦௪ இச்செய்யுளில் தோழி தலைவியைத் தலைவனுடன் செல்லும்படி தூண்டுதல் பொரு'டு, கற்பின் நலனைத் தலைவிக்குக் கூறுகின்றாள்.

ஈங்கோய் மலை என்னும் தலத்திற் சிறப்பாக வீற்றிருந்து சிற்றம்பலத்தின்கண் நடனம் செய்யும் எம்பிரானுடைய வாயினாற் சிறப்பித்துச் சொல்லும்படியான அறிவினாற் சிறந்த சந்திரன் போன்ற நெற்றியை யுடையவளே. மகளிர்க்குப் பழி நீக்கிப் பாதுாத்தலின் நாண் தாயைப்போல் சிறந்தது. அழகமைந்த மூங்கில் போலும் சிறந்த மென்மையான தோள்களையுடை யாய் அத்தன்மையையுடைய நாணும் உறுதியான கற்பினைப் போன்று அவ்வளவு சிறந்ததல்ல.

உ௫க. இது, தோழி தலைமகன் பகலில் வருதற்குத் தலைவி உடன்பட்டாள் போன்று பேசி இரவு வரலாகாதென்றது.

தீயோர்கள் கருதாத தில்லையம்பலத்தானுடைய திருவடிகளுக்கு அன்பில்லாதவர்களுடைய தீவினைபோல இருள் செறிந்து புலராத இரவும், மின்னலை விடுத்து இடியினால் முழங்கிப் பொழிகின்றது போல் தோன்றிப் பொழியாத மழையும் புண்ணில் வேல் நுழைந்தாற்போன்று மிக்க துன்பத்தை விளைவிக்கின்றன. இத்துன்பத்தைப் போக்க வல்ல மருந்து உன் மலைமீது இல்லையோ ?

௩௦எ. இது தோழி தலைமகனும் தலைமகளு' கூடி இன்புற்றிருந்த நிலை 'ண்டு நற்றாய்க்கு அறிவித்தலை உணர்த்துகின்றது.

தலைவன் தலைவியாகிய இருவரால் நுகரப்படும் இன்பமானது ஆனந்த வெள்ளத்தினிடை மூழ்கப் புகும் ஓர் உயிரானது ஒரு உடம்பாற்றுய்த்தல் போதாமையால் இரண்டு உடம்பைக்கொண்டு அவ்வி'ப வெள்ளத்திடை' கிடந்து திளைத்ததனை யொக்கும். அதுவுமன்றி இன்பவெள்ளத்தைச் செய்யும் அம்பலத்தில் நடனம் செய்யும் ஒலிக்கும் வீரக்கழலைத் தரித்த நடராஜப் பெருமானுடைய திருவருளைப் பெற்றவர் இன்பம்போல இவ்வின்ப வெள்ளமும் ஒரு காலத்தும் குறைவு படாது. இவ்வழகிய நலம் முடிவடையாது.

௫௫௨. இச்செய்யுள் பொருளை ஈட்டுதற்குப் பிரியும் தலைம ' தோழிக்குத் தன்னு டய பிரிவினுல் தலைமகளு 'கு உண்டான துன்பத்தைக் கூறியதை உணர்த்துகின்றது.

துறந்தோரும் அரசரும் கருதுவன்வாகிய மறுமை இம்மைப் பயன்களையும் பொருளினுல் அடையலாம் என்று பொது வ கையால் யான் கூற, அக்குறிப்பறிந்து அவள் ண்கள் நீ ரச் சொரிந்தன. அப்பொழுது யான் 'திருச்சிற்றம்பலத்தில் ந னம் செய்யும் பரமனை (இன்பம் தருவதில்) ஒத்தவளே. நீ துன்பம் அ ' வதற்கு ' காரணம் யாது? யான் பிரியே ' என்று சொல்லித் தூய நீ ரத் தெளித்து தலையளி செய்ய "நீர் மிகத் தாழ்த் கூ வரும் நாளிதுவோ' என்று கூறி நன்னுதலாள் வணங்கி நின்றுள், ஆ ை ய ல் இனி ீ உணர்த்துமாற்றுல் உணர்த்துவாயா .

உ

திருச்சிற்றம்பலம்

திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பதின்மர்

அருளிச் செய்த

திருவிசைப்பா

திருப்பல்லாண்டு

௯-வது திருமுறை

அ. சோமசுந்தரம் செட்டியார் M. A. அவர்கள்

எழுதிய

அரும்பொருள் விளக்க உரையுடன்

திருவிசைப்பா

அருளிச்செய்த

ஒன்பது நாயன்மார் திருப்பெயரும் திருப்பதிகவகையும் பண்ணின் வகையுந் தெரியுமடைவு

செம்பொன்மணி யம்பலத்து நிருத்த னார்க்குத்
திருவிசைப்பா உரைத்தவர்தந் திருப்பேர் சொல்லில்
பம்புபுகழ் செறிதிருமா ளிகைமெய்த் தேவர்
பரிவுடைய சேந்தனார் கருவூர்த் தேவர்
நம்பிகா டவர்கோன் கண்டரா தித்தர்
நன்குயர்வே ணாட்டடிகள் திருவாலி யமுதர்
அம்புவியோர் புகழ்புருடோத் தமர்சேதி ராயர்
ஆகவிவ ரொன்பதின்மர் தாமுறை கண்டடைவே. ௧

அடைவுறுமா ளிகைத்தேவர் நான்கு சேந்தர்
அன்புறுபல் லாண்டொன்றோ டிசைப்பா மூன்று
திடமுடைய கருவூரர் பத்து வீறிற்
சிறந்தகா டவரிரண்டு கண்டர் வேணாடர்
படிபுகழொவ் வொன்றுதிரு வாலி நான்கு
பன்னுபுரு டோத்தமனா ரிரண்டுசே திராய
ருடையதிருக் கடைக்காப்பொன் றாகவிரு பத்தொன்
பானேது செய்யுண்முந்நூற் றறுபதினோ டந்தே ௨

ஐந்துடன்நால் வருமுரைத்த திருக்கடைக்காப் பிறபண்
அறையின்மா ளிகைத்தேவர் நான்கிலொன்று காந்தார
முந்துகரு வூரர்பத்தி னிரண்டுபுற நீர்மை
மொழிந்திடுசாந் தாரமொன்று காடவர்கோ னிரண்டின்
நந்தலில்சா ளரபாணி யொன்றுவேணாட் டடிகள்
நவின்றதொன்று புறநீர்மை திருவாலி யமுதர்
பந்தமறச் சொன்னான்கி னொன்றுநட்ட ராகம்
பகர்ந்திடினொன் றிந்தளமற் றனைவையும்பஞ் சமமே ௩

உ

திருச்சிற்றம்பலம்

திருமாளிகைத்தேவர் அருளிய

திருவிசைப்பா

க கோயில்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே உணர் வுசூழ் கடந்ததோ ருணர்வே, தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே சித்தத்துள் தித்திக்குந் தேனே, அளிவள ருள்ளத் தானந்தக் கனியே அம்பலம் ஆடரங் காக வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத் தொண்டனேன் விளம்புமா விளம்பே. க

(கு) ஒளிவளர் விளக்கே ஒளி மிகுகின்ற தீபமே. உலப்பிலா ஒன்றே - அழிவில்லாத ஒப்பற்ற பொருளே. உணர்வு......உணர்வே சுட்டறிவின் எல்லையைக் கடந்து நின்று சிவஞானத்தால் அறியப் படும் பேரறிவே. "உரையுணர் விறந்துநின் றுணர்வதோர் உணர்வே" திருவாசகம். (அரைசனே). வரி 2. பிரகாசம் பொருந்திய பளிங்கின் தோற்றத் தையுடைய உருட்சியான மாணிக்கமலையே. பளிங்கு - திருநீறு பூசப்பட்ட திருமேனிக்கு உவமை. வரி. 3 அன்புபெருகும் மனத்தின்கண் பேரானந்தத்தை விளைவிக்கும் கனி போன்றவனே. அம்பலம் ஆடு அரங்காக - தில்லை வெளியே நடனம் செய்யும் சபையாக. அரங்கு - சபை. வெளிவளர் தெய்வக் கூத்து - சிதாகாயத்தில் ஆடும் ஆதியும் அந்தமும் இல்லாத தெய்வ நடனம். "இந்த வாழ்க்கை யான் ஆடும் ஆனந்த எல்லையில் தனிப் பெருங் கூத்தின் வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து" பெரிய புராணம் (ஐந்து). உகந்தாயை - விரும்பிச் செய்யும் உன்னை.

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள் இருட்பிழம் பறவெறிந் தெழுந்த சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்கும் தூயநற் சோதியுட் சோதீ அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா அயனொடு மாலறி யாமைப் படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத் தொண்டனேன் பணியுமா பணியே. ௨

தற்பரம் பொருளே சசிகண்ட சிகண்டா சாமகண்டா அண்ட வாணா நற்பெரும் பொருளாய் உரைகலந் துன்னை என்னுடை நாவினால் நவில்வான் அற்பனேன் உள்ளத் தளவிலா உன்னைத் தந்தபொன் அம்பலத் தாடி கற்பமாய் உலகாய் அல்லையா னாயைத் தொண்டனேன் கருதுமா கருதே.

விளம்புமா விளம்பே - புகழுமாறு நீ சொல்லுவாயாக (அருள் புரிவாயாக.) இப்பதிகத்தின் ஒவ்வொரு செய்யுளின் ஈற்றடியிலுள்ள "விளம்புமா விளம்பே" 'பணியுமா பணியே" எனவரும் சொற்றொடர்களால் இறைவன் திருவருள் துணையின்றி ஆன்மாவின் செயல் ஒன்றும் நிகழாது என்னும் சைவ சித்தாந்தக் கருத்து வெளிப்படுதல் காண்க.

(௨) இருட்பிழம்பு இருட்கூட்டம் மிக்க இருள்(அஞ்ஞானம்). அடல் விடைப்பாகன் - வலிமைமிக்க இடபத்தை வாகனமாக உடையவன். பணியுமா பணியே - நான் உன்னை வணங்கும் வண்ணம் பட்டளையிடுவாயாக.

(௩) தற்பரம் பொருள் கடவுள். சசிகண்ட சிகண்டா - பிறைச்சந்திரனை அணிந்த சடைமுடியை உடையவனே. கண்டம் துண்டு. சாமகண்டா - கருமையான கண்டத்தை யுடையவனே. வரி 2. நன்மையைத் தரத்தக்க பெரிய பொருளோடு கூடிய சொற்களை கலந்து உன்னை என்னுடைய நாவினாற் பாடும்பொருட்டு. கற்பம் ஊழிக்காலம். உலகாய் அல்லை ஆனாயை எல்லா உலகங்களாயும் அவைகளுக்கு அப்பாற்பட்டும் இருக்கின்ற உன்னை. 'யாவையுமாய் அல்லையுமாம் சோதியனே' திருவாசகம் சிவபுராணம் வரி 71.

பெருமையிற் சிறுமை பெண்ணொடா ணாயென் பிறப் பிறப் பறுத்தபே ரொளியே கருமையின் வெளியே கயற் கணாள் இமவான் மகளுமை யவள்களை கண்ணே அருமை யின் மறைநான் கோலமிட் டரற்றும் அப்பனே அம்பலத் தமுதே ஒருமையிற் பலபுக் குருவினின் றுயைத் தொண்ட னேன் உரைக்குமா றுரையே. ௪

கோலமே மேலை வானவர் கோவே குணங்குறி யிறந்த தோர் குணமே காலமே கங்கை நாயகா எங்கள் கால காலா காமநாசா ஆலமே அமுதுண் டம்பலஞ் செம்பொற் கோயில்கொண் டாடவல் லானே ஞாலமே தமியேன் நற் றவத் தாயைத் தொண்டனேன் நணுகுமா நணுகே. ௫

நீறணி பவளக் குன்றமே நின்ற நெற்றிக்கண் ணுடை யதோர் நெருப்பே, வேறணி புவன போகமே யோக வெள் ளமே மேருவில் வீரா ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா அம்பொன்செய் அம்பலத் தரசே ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத் தொண்டனேன் இசையுமா றிசையே. ௬

---

(௪) கருமையின் வெளியே-கருநிறத்தோடு வெண்ணிறம் பொருந் தியவனே. கருமை நீலகண்டத்தையும், வெண்மை திருநீற்றுக் கோலத்தையும் குறிக்கும். அல்லது கருமையின் வெளியே - கருமை யான இருளில் தோன்றிய (என் அஞ்ஞான இருளைப் போக்கவந்த) அருள் வெளியாயிருப்பவனே. 'திணிந்ததோர் இருளிற் றெளிந்த தூவெளியே.'' திரு கம. (உணர்ந்த). களைகண்ணே ஆதார மானவனே. அருமையின்...அரற்றும் - உன்னை அறிய மாட்டாமை யால் நான்கு வேதங்களும் ஓலமிட்டுக் கூவும். அரற்றும் - கூவும். வரி 4. நீ ஒருவனாக இருந்து, பல பொருள்களிலும் புகுந்துருவிக் கலந்துநின்ற உன்னை அடியனேன் புகழ்ந்து சொல்லும்படி நீ கட்டளையிடு.

(௫) கோலமே அழகிய வடிவமுடையவனே. ஞாலமே - உல மாயிருப்பவனே. நல் தவத்தாயை நல்ல தவ வடிவினனாகிய உன்னை. நணுகுமா நணுகே நான் நெருங்கும் வண்ணம் நீ நெருங்கு.

(௬) வேறு அணி புவன போகமே - வெவ்வேறாகிய அழகிய உலகங்களும் போகப் பொருள்களுமாய் இருப்பவனே. யோக வெள் ளமே - யோக முதிர்ச்சியில் விளையும் இன்பப் பெருக்கே. ஏறு அணி கொடி - இடப வடிவம் எழுதியுள்ள அழகிய கொடியையுடைய. இசையுமாறு - பொருந்தும் வண்ணம். இசையே - நீ இசைந்தருளு.

தனதன்நற் றோழா சங்கரா சூல பாணியே தாணுவே
சிவனே கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே கண்கள்
மூன்றுடையதோர் கரும்பே அனகனே குமர விநாயக
சனக அம்பலத் தமரசே கரனே உனகழல் இணையென்
நெஞ்சினுள் இனிதாத் தொண்டனேன் நுகருமா நுகரே. எ

திறம்பிய பிறவிச் சிலதெய்வ நெறிக்கே திகைக்கின்
றேன் றனைத்திகை யாமே, நிறம்பொன்னும் மின்னும் நிறைந்
தசே வடிக்கீழ் நிகழ்வித்த நிகரிலா மணியே அறம்பல
திறங்கண் டருந்தவர்க் கரசாய் ஆலின்கீழ் இருந்தஅம்
பலவா புறஞ்சமண் புத்தர் பொய்கள்கண் டாயைத் தொண்
டனேன் புணருமா புணரே. அ

தக்கன்நற் றலையும் எச்சன்வன் தலையுந் தாமரை
நான்முகன் தலையும் ஒக்கவிண் டுருள ஒண்டிருப் புருவம்
நெறித்தரு ளியவுருத் திரனே, அக்கணி புலித்தோ லாடை
மே லாட வாடப்பொன் னம்பலத் தாடுஞ், சொக்கனே
யெவர்க்குந் தொடர்வரி யாயைத் தொண்டனேன் தொட
ருமா தொடரே. கூ

(எ) தனதன் - குபேரன். தாணு - அழிவில்லாதவன். அன
னே பரிசுத்தனே. சனக பிதாவே. அமரசேகரன் - தேவர்
களுக்குத் தலைமை பூண்டவன். வரி 4. அடியனேன் உன் திருவடி
கள் இரண்டையும் என் மனத்தில் இன்பத்தோடு கலந்து அநுபவிக்
கும்படி (அதாவது உன் திருவருளில் மூழ்கி நான் இன்பத்தை அநு
பவிக்கும்படி) அருள்புரிவாயா .

(அ) வரி 1. மாறி மாறி வருகின்ற பிறவிகளில் உழலுகின்ற சிறு
தெய்வங்களை அடையும் வழிகளில் திகைத்து நிற்கின்ற என்னை.
நிகழ்வித்த - செல்லும்படி செய்த. அறம் பல திறம் கண்டு தருமத்
தின் பல தன்மைகளை அருளிச் செய்து. புறம் சமண் புத்தர்
புறச்சமயத்தினராகிய சமணர் புத்தர்.

(கூ) ஒக்க விண்டு உருள ஒருமிக்க அறுபட்டு உருளும்படி.
ஒ திருப்புருவம் நெரித்தருளிய - ஒளிமிக்க புருவத்தை நெரித்
துக் கோபித்த. அக்கு அணி புலித்தோலாடை மேல் ஆட ஆட -
உருத்திராக்கம் அல்லது எலும்பு கோவை அழகிய புலித்தோல்
ஆடையின் மேல் ஆடிக்கொண்டிருக்க. சொக்கனே - அழகனே.

மடங்கலாய்க் கனகன் மார்புகீண் டானுக் கருள்புரி வள்ளலே மருளார், இடங்கொள்முப் புரம்வெந் தவியவை திகத்தே ரேறிய ஏறுசே வகனே அடங்கவல் அரக்கன் அருள்திரு வரைக்கீ ழடர்த்தபொன் னம்பலத் தரசே, விடங்கொள்கண் டத்தெம் விடங்கனே யுன்னைத் தொண் டனேன் விரும்புமா விரும்பே. ௰

மறைகளும் அமரர் கூட்டமும் மாட்டா தயன்திரு மாலொடு மயங்கி முறைமுறை முறையிட் டோர்வரி யானை மூர்க்கனேன் மொழிந்தபுன் மொழிகள் அறைகழ லரன்சீ ரறிவிலா வெறுமைச் சிறுமையிற் பொறுக்குமம் பலத்துள், நிறைதரு கருணை நிலயமே யுன்னைத் தொண்டனேன் நினை யுமா நினையே. ௧௧

திருச்சிற்றம்பலம்

(௰) மடங் லாய்......வள்ளலே - நரசிங் மாக இரணியன் மார்பைக் கிழித்த விஷ்ணு மூர்த்திக்கு அருள் செய்த கொடை யாளனே. வைதிகத்தேர்-வேதங்கள் சம்பந்தமான தேர்; வேதங்களைக் குதிரையாகப் பூட்டப்பட்ட தேர். ஏறு சேவகன் ஆண் சிங்கம் போன்ற வீரன். வரி 3. வலிய அரக்கன் (இரா வணன்) அகங்காரம் கெடும்படியா அவனைக் கயிலை மலையின் கீழ்த் திருவருளினால் நசுக்கிய. இராவணனை நசுக்கியது அவனுடைய கர்வத்தைப் போக்கி அவனை நல்வழிப்படுத்த செய்தமையால் அருளின் செய்கையே. விடங்கன் - அழகன்.

(௧௧) மாட்டாது அறியமாட்டாமல். முறை முறை முறையிட்டு - பல தடவை ள் மு றயிட்டும். ஓர்வு அரியானை - அறிய முடியாத உன்னை. வரி 3. ஒலி 'கின்ற வீரக்கழலை யணிந்த திருவடிளையுடைய சிவபெருமானது பு ழ்களை அறியாத மூடத்தனமாகிய சிறுமையினைப் பொறு 'கும். நிறைதரு ருணை நிலயமே நிறைந்த கருணை 'கு இருப்பிடமே.

உ. கோயில் - உயர்கொடியாடை*

பண - பஞ் மம

திருச்சிற்றம்பலம்

உயர்கொ ாடி யாடை மிடைபட லத்தின் ஓமதூ மப்பட லத்தின் பெயர்நெடு மாடத் தகிற்புகைப் பட ம் பெருகிய பெரும்பற்றப் புலியூர்ச் சியரொளி மணி ள் நிரந்துசேர் கனகம் நிறைந்தசிற் றம்பலக் கூத்தா மயர்வறும் அமரர் மகுடந்தோய் மலர்ச்சே வடி ளேன் மனத்துவைத் தருளே.

ருவளர் மே த் தகடுதோய் மகுட ' ன மா ளி கலந் தெங்கும், பெருவளர் முத்தீ ான்ம றத் தொழில்சா

இப்பதிகத்தின் ஒவ்வொரு செய்யுள் இறுதியிலும், திருமாளி ை த் தேவர், சிவபெருமானுடைய திருவடிமுதல் திருமுடி 'ரையில் உள்ள சில உறுப்பு ளும், அணிகளும் தன்னுடைய உள்ளத் தக் கவர்ந்து சிவபெருமானிடத்து ஈடுபடச்செய்த தன்மைய ' கூறு கின்றார். திரு ாலியமுதனார் அருளிச்செய்த 1. 'ே ாயில் பாதாதி ே சம்' என்னும் திருவி சப்பாவிலும் இவ் ாறு கூறியிருத்தல் ாண் .

(க) ஆ ட - சீலை '. மி டபடலம் நெருங்கின கூட்டம் ஓம தூமப் படல '...ஓமப் புை யாலாகிய மூடி. வரி 1, 2. உயர்ந்த ெ ாடிச் சீலை ள் நெரு 'கிய கூட்டத்தினிடத்து ஓமப்பு யானது கீர்த்திபெற்ற உயர்ந்த மாளி ளினின்று வரும் அகிற் புகை யோடு ல 'து பெருகி மூடியிட்டது போன்ற தோற்றத் தயு டைய பெரு 'பற்றப் புலியூர். சியர் - சிறந்த. நிரந்து சேர் - வரி சயாய்ச் சேர்ந்த. யர்வு அறும் - மய ' ம் அற்ற.

(உ) ருவ ர் ரு ம மி 'க. அ டு தோய் மகுட ' உட்பக் த் தில் தோய்ந்துள் சி ரத் தயு டைய. மாளி ' ே ண்ட லத் த அள வியிரு 'கின்ற ' பது குறிப்பு.

எழில்மிகு பெரும்பற்றப் புலியூர்த் திருவளர் தெய்வப்
பதிவதி நிதியம் திரண்டசிற் றம்பலக் கூத்தா உருவளர்
இன்பச் சிலம்பொலி அலம்பும் உன்னடிக் கீழதென் னுயிரே.

வரம்பிரி வாளை மிளிர்மடுக் கமலம் கரும்பொடு மாந்
துமேதிகள்சேர், பரம்பிரி செந்நெற் கழனிச்செங் கழுநீர்ப்
பழனஞ்சூழ் பெரும்பற்றப் புலியூர்ச் சிரம்புணர் முடிவா
னவர்அடி முறையா லிறைஞ்சுசிற் றம்பலக் கூத்தா நிரந்த
ரம் முனிவர் நினைதிருக் கணைக்கால் நினைந்துநின் றொழிந்த
தென் நெஞ்சே. ௩

தேர்மலி விழவிற் குழலொலி தெருவிற் கூத்தொலி
ஏத்தொலி ஓத்தின் பேரொலி பரந்து கடலொலி மலியப்

---

(௨) வரி 2. பெருவளர் முத்தீ நான்மறைத் தொழில் சால் எழில் மிகு - பெருகி வளர்கின்ற அந்தணர் வேள்வி செய்யும் மூன்று தீக் களாலும் நான்கு வேதங்களை ஓதும் தொழிலினாலும் மிக்க பொலிவுடன் விளங்கும். சால என்பது சால் என்றாயிற்று. திருவளர் - திருவளரும். செல்வம் பெருகி வளர்கின்ற. தெய்வப்பதி வதி தெய்வத்தன்மையுடைய நகரத்தில் பொருந்திய.

(௩) வரி 1. வாளைமீன்கள் வயல்களின் வரப்புகள் மீதிருந்து ஒளியுடன் துள்ளிவிழுகின்ற குளங்களில் உள்ள தாமரை மலர்களைக் கரும்புகளோடு மேயும் எருமைகள் சேர்கின்ற. வரி 2. பரம்பு அடித்த செந்நெல் விளைகின்ற கழனிகளாலும் செங்கழுநீர் மலர்களையுடைய வயல்களாலும் சூழப்பட்ட. சிரம் புணர் முடி - சிரத்தில் தரித்த கிரீடத்தையுடைய தேவர்கள். நிரந்தரம் - எப்பொழுதும். என் நெஞ்சு நினைந்து நின்று ஒழிந்தது - என் மனமானது நினைந்து, நினையும் தொழிலில் நிலைத்து நின்று, பின்பு நினைத்தலையும் விட்டது (நினைக்கின்றேன் என்ற உணர்வையும் இழந்தேன்.)

(௪) விழவில் - திருவிழாவில். ஓத்தின் - வேதத்தை ஓதுவதால் உண்டாகும். பரந்து - பரவி. கடல் ஒலி மலிய - கடல் ஒலிபோல் மிகுந்து ஒலிக்க.

பொலிதரு பெரும்பற்றப் புலியூர்ச் சீர்நில விலயத் திருநடத் தியல்பில் திகழ்ந்தசிற் றம்பலக் கூத்தா வார்மலி முலையாள் வருடிய திரண்மா மணிக்குறங் கடைந்ததென் மதியே.

நிறைதழை வாழை நிழற்கொடி நெடுங்கே தகங்கிளைக் கமுகுளங்கொள்நீள் பலமாப், பிறைதவழ் பொழில்சூழ் கிடங்கிடைப் பதணம் முதுமதிற் பெரும்பற்றப் புலியூர்ச் சிறைகொள்நீர்த் தரளத் திரள்கொள்நித் திலத்த செம்பொற்சிற் றம்பலக் கூத்த பொறையணி நிதம்பப் புலியத ளாடைக் கச்சநூல் புகுந்ததென் புகலே. ௫

அதுமதி யிதுவென் றலந்தலை நூல்கற் றழைப்பொழிந் தருமறை யறிந்து பிதுமதி வழிநின் றொழிவிலா வேள்விப் பெரியவர் பெரும்பற்றப் புலியூர்ச், செதுமதிச் சமணுந் தேரருஞ் சேராச் செல்வச்சிற் றம்பலக் கூத்த மதுமதி வெள்ளத் திருவயிற் றுந்தி வளைப்புண்டென் னுள்மகிழ்ந் ததுவே. ௬

---

(௪) இலயத்து - தாளத்திற்கு (இசைய ஆடும்). மணிக்குறங்கு - அழகிய தொடை. மதி - அறிவு.

(௫) நிழல்கொடி - நிழலைச் செய்யும்படியான கொடி. உளங்கொள் நீள் பல மா - மனதைக் கவரும்படியாக நீண்ட பலாமரம் மாமரம். கிடங்கு - அகழி. பதணம் - மதிலின் உள்மேடை. முதுமதில் - பழைய மதில் (களையுடைய). வரி 3. கரைகளினால் சூழப்பட்ட நீரில் திரட்சி பொருந்திய கூட்டமாயுள்ள முத்துக்கள் பொருந்தியுள்ள செம்பொன்னினால் வேய்ந்த சிற்றம்பலத்தில் நடனம் செய்பவனே. தரளம், நித்திலம் முத்துக்களின் வகைகள். வரி 4. அரையிற் கட்டிய பாரமான அழகிய புலித்தோல் ஆடையின்மேல் கட்டியுள்ள நூற்கயிற்றினிடத்து என் விருப்பம் புகுந்துகொண்டது. புகல் - விருப்பம்.

(௬) வரி 1. அதுதான் அறிவு இதுதான் அறிவு என்று துன்பப்பட்டு மனம் அலைதற்கு ஏதுவாகிய நூல்களைக் கற்று. அழைப்பு ஒழிந்து - பிதற்றுதலை விட்டு. பிதுமதி வழிநின்று - பெருமையுடைய அறிவின் வழிநின்று. செதுமதி - அற்ப அறிவு. தேரர் - புத்தர். செல்வம் - திருவருட்செல்வம். வரி 4. தேன் போலும் இனிய அறிவுப் பெருக்கத்தில் அழுந்தி உன் அழகிய வயிற்றுக்கொப்பூழின் வளைவைக் கண்டு அனுபவித்து என் மனம் மகிழ்ச்சியடைந்தது.

பொருவரைப் புயத்தின் மீமிசைப் புலித்தோல் பொடி யணி பூணநூல் அகலம் பெருவரை புரைதிண் தோளுடன் காணப் பெற்றவர் பெரும்பற்றப் புலியூர்த் திருமரு வுதரத் தார்திசை மிடைப்ப நடஞ்செய்சிற் றம்பலக் கூத்த உருமரு வுதரத் தனிவடந் தொடர்ந்து கிடந்ததென் னுணர் வுணர்ந் துணர்ந்தே. எ

ணிபெரி விசிறு கரந்துடி விடவாய்க் கங்கணஞ் செங்கைமற் றபயம் பிணிகெட இவைகண் டரன்பெரு நடத்திற் பிரிவிலார் பெரும்பற்றப் புலியூர்த் திணிமணி நீல கண்டத்தென் னமுதே சீர்கொள்சிற் றம்பலக் கூத்த அணி மணி முறுவற் பவளவாய்ச் செய்ய சோதியு ளடங்கிற்றென் னறிவே. அ

திருநெடு மாலிந் திரன் அயன் வானோர் திருக்கடைக் காவலின் நெருக்கிப் பெருமுடி மோதி யுகும்மணி முன்றிற் பிறங்கிய பெரும்பற்றப் புலியூர்ச் செருநெடு மேரு வில்

(எ) வரி 1. போர் செய்யவல்ல மலைபோன்ற புயத்தின் (முன் கையின்) மேல் பொருந்திய புலித்தோலும், திருநீற்றை யணிந்த பூணூல் தங்கிய மார்பும். வரை புரை - மலையை ஒத்த. வரி 3. அழகு பொருந்திய வயிற்றின்மேல் அணிந்துள்ள மாலை எ் நான்கு திசைகளிலும் நெருங்கும்படி சிற்றம்பலத்தில் ந னம் செய்யும் நடராஜப் பெருமானே. உருமரு உதரத் தனிவடம் உருவு ன் விளங்கும் வயிற்றின் மீது பொருந்திய ஒப்பற்ற மணிவடம். என் உணர்வு உணர்ந்து உணர்ந்து கிடந்தது என் உ ர்ச்சி அதனையே உணர்ந்து வேறு தொழிலற்றுக் கி ந்தது.

(அ) வரி 1. மதிக்கத்தக்க நெருப்பும், வசுகின்ற கையும், உடுக்கயும். பாம்பாகிய காப்பும், அபயம் அளிக்கும் செங்கையும். திணி மணி நீலகண்டம் - மிகுந்த நல நிறத்தையுடைய மணிபோன்று விளங்கும் கழுத்து. அணி மணி - அழகிய முத்து. முறுவல் - பல்.

(கூ) திருக் டக் காவலின் காவல் பொருந்திய வாயிற்படியினிடத்து. உகும் மணி - சிந்தும் நவரத்தினங்கள். மு றில் பிறங்கிய மாளி யின் முற்பக்கத்தில் பிரகாசிக்கும்படியான. செருநெடு மேரு வில்லின் - போர் செய்வதில் வல்ல நீண்ட மேரு மலையாகிய வில்லினால்.

வின்மூப் புரந்தீ விரித்தசிற் றம்பலக் கூத்த கருவடி குழைக் காதமலச்சேங் கமல மலர்முகம் கலந்ததென் கருத்தே. ௯

ஏர்கொள்கற் பகமொத் திருசிலைப் புருவம் பெருந் தடங் கண்கள்மூன் றுடையோன் பேர்களா யிரநூ றாயிரம் பிதற்றும் பெற்றியோர் பெரும்பற்றப் புலியூர்ச் சீர்கொள் கொக் கிறகுங் கொன்றையுந் துன்று சென்னிச்சிற் றம்பலக் கூத்த நீர்கொள்செஞ் சடைவாழ் மதிபுது மத்தம் நிகழ்ந்த வென் சிந்தையுள் நிறைந்தே. ௰

காமனைக் காலன் தக்கன்மிக் கெச்சன் படக்கடைக் கணித்தவன் அல்லாப் பேய்மனம் பிறிந்த தவப்பெருந் தொண்டர் தொண்டனேன் பெரும்பற்றப் புலியூர்ச் சேம நற்றில்லை வட்டங்கொண் டாண்ட செல்வச்சிற் றம்பலக் கூத்த பூமல ரடிக்கீழ்ப் புராண பூத ள் பொறுப்பரென் புன்சொலின் பொருளே. ௧

திருச்சிற்றம்பலம்

(௯) கருவடி - பிறவியைப் போக்கு . அமல - மலங்களைப் போக்கும்படியா .

(௰) மதி புது மத்தம்...நிறைந்தே சந்திரனும் புதிய ஊமத்த மலரும், எ சிந் தயு நி றந்து ஒளிவிடுகின்றன.

(௧) படக் டக் ணித்தவன் மடிய கடைக் ணால் பார்த் தவ . அல்லாப்......தொண்டனேன் - தீமை ஈய்ந்து பேய் போன்று அலையும் மனத்தின் த ம யப் போ கின தவத்தினால் மேம்பட் தொண்டர்களு குத் தொ டனாகிய நா . புராண பூதங்கள் பழமைய பூத ண ள். சேம ல்தில்லை ட்டம் கொண்டு ஆண்ட - காவல் பொருந்திய நல்ல தில்லைப்பதியை இருப் பிடமா ெ ாண்டு என்னை ஆட்ெ ட. தெ டனேனை...... ஆண்ட எ று கூட்டு .

௯ கோயில் - உறவாகிய யோகம்*

ப பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

உறவா கியயோ கமும்போ கமுமாய் உயிராளீ என்னுமென் பொன்னொருநாள் சிறவா தவர்புரஞ் செற்ற கொற்றச் சிலையாண்டு பன்றிப்பின் சென்றுநின்ற மறவா என்னும் மணிநீ ரருவி மகேந்திர மாமலைமே லுறையுங் குறவா என்னுங் குணக்குன்றே யென்னுங் குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. ௧

காடாடு பல்கணஞ் சூழக் கேழற் கடும்பின் நெடும்பகற் கான்நடந்த வேடா மகேந்திர வெற்பா என்னும் வினையேன் மடந்தைவிம் மாவெருவுஞ், சேடா என்னுஞ் செல்வர்மூ வாயிரஞ் செழுஞ்சோதி அந்தணர் செங்கைதொழு கோடா என்னுங் குணக்குன்றே யென்னுங் குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. ௨

---

*இந்தப் பதிகம் சிவபெருமானைக் காதலித்த ஒரு பெண்ணின் தாய் தன் மகள் செய்கையைப் பற்றிக் கூறும் மொழிகளாக அமைந்துள்ளது.

(௧) உயிராளீ-உன் உயிரை ஆள்பவனே. என்பொன் என்னும்-என் பொன் போன்ற மகள் சொல்லுவாள். சிறவாதவர் - பகைவர். மறவா - வேடனே. வரி 2-ல் சிவபெருமானைக் குறித்துத் தவஞ் செய்துகொண்டிருந்த அர்ச்சுனனைக் கொல்ல பன்றி உருவங் கொண்டு வந்த மூகாசுரனைத் தொடர்ந்து சென்ற வரலாறு கூறப்பட்டுள்ளது. குலாத்தில்லை விளங்கும் தில்லை.

(௨) வரி 1. சுடுகாட்டில் ஆடுகின்ற பலவகைக் கூட்டம் சூழக் கொடிய பன்றியின் பின் நெடிய பகற்பொழுதில் காட்டில் நடந்து சென்ற. வினையேன்...வெருவும்-தீவினையினேனுடைய மகள் விம்மி அழுது அஞ்சுவாள். சேடா - எல்லாம் அழிந்த காலத்தும் தான் அழியாது எஞ்சி நிற்பவனே. சேடம் - மிச்சம். செங்கை செங்கையினால். கோடா - நெறி தவறாதவனே.

கானே வரும்முரண் ஏனம்எய்த களியார் புளினநற் காளாயென்னும் வானே தடவும் நெடுங்குடுமி மகேந்திர மாமலைமேல் இருந்த தேனே யென்னுந் தெய்வவாய்மொழி யார்திருவாளர்மூவா யிரவர் தெய்வக் கோனே யென்னுங் குணக்குன்றே யென்னுங் குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. ௩

வெறியேறு பன்றிப் பின்சென் றொருநாள் விசயற் கருள்செய்த வேந்தேயென்னும் மறியேறு சாரல் மகேந்திர மாமலைமேல் இருந்த மருந்தேயென்னும் நெறியே யென்னும் நெறிநின் றவர்கள் நினைக்கின்ற நீதி வேதாந்தநிலைக் குறியே யென்னுங் குணக்குன்றே யென்னுங் குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. ௪

செழுந்தென்றல் அன்றில்இத் திங்கள் கங்குல் திரைவீரை தீங்குழல் சேவின்மணி எழுந்தின் றென்மேல் பகையாட வாடும் எனைநீ நலிவதென்னே யென்னும் அழுந்தா மகேந்திரத் தந்தரப்புட் கரசுக் கரசே அமரர்தனிக் கொழுந்தே யென்னுங் குணக்குன்றே யென்னுங் குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. ௫

---

(௩) முரண் - வலி மிக்க. ஏனம் எய்த - பன்றியை அம்பினால் எய்து கொன்ற. களி ஆர் நல் புளினக் காளாய் - களிப்பு மிகுந்த நல்ல வேடக்காளையே. புளினர் - வேடர். காளை - யௌவன பருவம் வாய்ந்தவன். "கண்டுதொழப் பெறுவதென்று கொலோ அடியேன் கார்வயல் சூழ் கானப்பேருறை காளையையே" சுந்தரர். (தொண்டரடி). குடுமி - சிகரம்.

(௪) வெறி ஏறு - கோபம் மிகுந்த. மறி ஏறு சாரல் - மான்கள் உலவும் மலைப் பக்கங்களையுடைய. நெறியே - உண்மை நெறியிற் சேர்ப்பிப்பவனே. நீதி வேதாந்த நிலைக்குறி - நீதியோடு கூடிய வேதாந்தங்களிற் கூறப்பட்டுள்ள நிலைத்த இலட்சியமே.

(௫) அன்றில் - ஒரு பறவை. கங்குல் - இரவு. வீரைத்திரை - கடலின் அலை(ஓசை). தீங்குழல் சேவின் மணி இனிய குழலோசை எருதின் கழுத்தில் கட்டிய மணியோசை. பகையாட வாடும் - பகைத்து வருத்த அதனால் வாட்டமடைந்த. அழுந்தா - அழியாத. அந்தரப்புட்கு அரசு - ஆகாயத்தில் சஞ்சரிக்கும் பட்சிகளுக்கு அரசாகிய கருடன். அமரர் தனிக் கொழுந்து - தேவர்களுக்கு ஒப்பற்ற இளமை வாய்ந்த தலைவன்.

வண்டார் குழலுமை நங்கை முன்னே மகேந்திரச் சாரல் வராகத்தின்பின் கண்டார் கவலவில்லாடி வேடர் கடிநா யுடன்கை வளைந்தாயென்னும் பண்டாய மலரயன் தக்கனெச்சன் பகலோன் தலைபல் பசுங்கண் கொண்டா யென்னுங் குணக்குன்றே யென்னுங் குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. ௬

கடுப்பாய்ப் பறைகறங்கக் கடுவெஞ் சிலையுங் கணையும் வனுங் கைக்கொண் டுடுப்பாய் தோல் செருப்புச் சுரிகை வராக முன்னோடி விளியுளைப்ப நடப்பாய் மகேந்திர நாதநா தாந்தத் தரையா என்பார்க்கு நாதாந்தபதங் கொடுப்பா யென்னுங் குணக்குன்றே யென்னுங் குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. ௭

சேவேந்து வெல்கொடி யானே யென்னுஞ் சிவனே யென்சேமத் துணையே யென்னும், மாவேந்து சாரல் மகேந்தி ரத்தில் வளர்நா யகாஇங்கே வாராயென்னும், பூவேந்தி மூவா யிரவர் தொழப் புகழேந்து மன்றுபொலிய நின்ற, கோவே யென்னுங் குணக்குன்றே யென்னுங் குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. ௮

---

(௬) கவல வில்லாடி - கவலைப் படும்படி வில்லை ஏந்தி. கடிநாய் - விரைவாய் ஓடும் நாய். கைவளைந்தாய் (வில்லைக்) கையினால் வளைத்தாய். அயன் தக்கன் எச்சன் இவர்கள் தலைகளையும் பன்னிரண்டு ஆதித்தர்களுள் பூஷன் என்பவனுடைய பற்களையும், பகன் என்பவனுடைய கண்ணையும், தக்கன் யாகத்தில் வீரபத்திரர் பறித்தார் என்பது புராண வரலாறு.

(௭) கடுப்பாய் பறை கறங்க - கடுமையாகப் பறை ஒலிக்க. உடுப்பாய்... சுரிகை-புலித்தோல் செருப்புச் சுரிகை (சிறுகத்தி) தரித்தவனாய். விளி உளைப்ப கூக்குரல் முழங்க. நாதாந்த பதம் நாத தத்துவத்தையும் கடந்த (சிவலோக) பதவி.

(௮) சேவேந்து - இடபத்தின் உருவம் எழுதப்பட்டுள்ள. சேமத் துணை காவல் செய்யும் துணைவன். மா ஏந்து சாரல் மிருகங்கள் மிகுந்திருக்கும் மலைச் சாரல்.

தரவார் புனஞ் சுனைதாழ் அருவித் தடங்கல் லுறையு மடங்கலமர் மரவார் பொழிலெழில் வேங்கை யெங்கும் மழைசூழ் மகேந்திர மாமலைமேற் சுரவா என்னுஞ் சுடர் நீள் முடிமாலயன் இந்திரன் முதல்தே வர்க்கெல்லாங், குரவா என்னுங் குணக்குன்றே யென்னுங் குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே.

திருநீ றிடாவுருத் தீண்டேன் என்னுந் திருநீறு மெய் திரு முண்டத்திட்டுப் பெருநீல கண்டன் திறங்கொண் டிவள் பிதற்றிப் பெருந்தெரு வேதிரியும் வருநீ ரருவி மகேந்தி ரப்பொன் மலையின் மலைமக ளுக்கருளுங், குருநீ யென்னுங் குணக்குன்றே யென்னுங் குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. க0

உற்றாய் என்னும்உன்னை யன்றி மற்றோர் துணையிலே னென்னும் உணர்வுகள் கலந்து பெற்றாய ஐந்தெழுத்தும் பிதற்றிப் பிணிதீர வெண்ணீறிடப் பெற்றேனென்னுஞ்

---

(௯) தரவு ஆர் புனம் - உயர்வு பொருந்திய நிலம் அல்லது மிக்க விளைவைத் தரும்படியான நிலம். சுனை தாழ் அருவி - மலைச் சுனையினின்று இழியும் அருவி. தடம் கல் - பெரிய கற்பாறைகளிலாய குகை. அமர் மடங்கல் - போர்புரியும் சிங்கம். வரி 2. மரவு (குங்கும மரங்கள்) அழகிய வேங்கை மரங்கள் மிகுந்த சோலைகளை யுடையதும் எல்லாப் பக்கங் களிலும் மேகங்களாற் சூழப்பட்டதுமான மகேந்திர மலைமேல் இருக்கும் தேவனே. குரவா - குருவே.

(க0) வரி 1. திருநீறிடாதவர் தீண்டத்தகாதவர் என்னுங் குறிப்புக் காண்க. மெய் திருமுண்டத்து இட்டு - உடம்பின் மேலும் நெற்றியின்மேலும் அணிந்து. வரி 2. பெரிய நீலகண்டத்தை உடையவனது புகழை இவள் (என்மகள்) தன்வச மிழந்து சொல்லிக் கொண்டு பெரிய தெருக் களின் வழியே திரிந்து கொண்டிருப்பாள்.

(கக) உற்றாய் - உற்றவனே, உறவினனே. உணர்வுகள் கலந்து பெற்று - உணர்ச்சிகள் இறை அறிவுடன் கலந்து சிவமயமே ஆகி. ஆய-நன்மை யைச் செய்வதாகிய. பிணி தீர வெண்ணீறு இடப்பெற்றேன் என்னும் - உடற்பிணி உயிர்ப்பிணி தீரும்பொருட்டு திருவெண்ணீற்றை அணியும் பேறு பெற்றேன் என்று சொல்லுவாள். "அருநோய்கள் கெட வெண்ணீறு அணியாராகில்" அப்பர். (திருநாமம்).

சுற்றாய சோதி மகேந்தி ரஞ்சூழ மனத்திருள் வாங்கிச்
சூழாதநெஞ்சிற் குற்றா மென்னுங் குணக்குன்றே யென்
னுங் குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. கக

வேறாக உள்ளத் துவகை விளைத் தவனிச் சிவலோக
வேதவென்றி மாறாத மூவா யிரவரையும் எனையும் மகிழ்ந்
தாள வல்லா யென்னு மாறார் சிகர மகேந்தி ரத்துன் னடி
யார் பிழைபொறுப் பாய்மா தோர் கூறா மென்னுங் குணக்
குன்றே யென்னுங் குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. கஉ

திருச்சிற்றம்பலம்

(க) வரி 3. சுற்றிலும் சோதி மயமாகிய மகேந்திர மலை ய வலம் வந்து அதனால் மனத்திலுள்ள அஞ்ஞான இருளை ஓட்டிச் சி பெருமானைத் தியானம் செய்யாத நெஞ்சிலும் குன்றாத னே. குன்றாய் என்பது எதுகை நோ கி குற்றாய் என்று ஆயிற்று.

(கஉ) வரி 1, 2. ம த்தின்கண் பேரானந்தத் த விளைவித்து அதன் தன்மை மாறும்படிச் செய்து பூவுலகத்தைச் சிவலோ மாகச் செய்து, வேத ளின் பயிற்சியால் வெற்றி மாறாத ருமான தில்லை மூ ாயிரவ ாயும். ஆறு ஆர் சி ரம் அருவிகள் வி றந், உச்சி.

௪. கோயில் - இணங்கிலாவீசன

பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

இணங்கிலா ஈசன் நேசத் திருந்தசித் தத்தி னேற்கு
மணங்கொள்சீர்த் தில்லை வாணன் மணவடி யார்கள் வண்மைக்
குணங்களைக் கூறா வீறிற் கோறைவாய்ப் பீறற் பிண்டப்
பிணங்களைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. க

எட்டுரு விரவி யென்னை ஆண்டவன் ஈண்டு சோதி
விட்டிலங் கலங்கல் தில்லை வேந்தனைச் சேர்ந்தி லாத
துட்டரைத் தூர்த்த வார்த்தைத்தொழும்பரைப் பிழம்பு பேசும்
பிட்டரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. உ

(க) இணங்கு இலா ஒப்பு இல்லாத. ஈசன் நேசத்து இருந்த சித்தத்தினேற்கு - ஈசனை அன்பினால் பொருந்தியிருந்த மனத்தையுடைய எனக்கு. மணம்........குணங்களை - எக்காலத்தும் மகிழ்ச்சியோடு கூடிய சிறப்பையுடைய தில்லைப்பதியின்கண் வீற்றிருக்கும் நடராஜப் பெருமானுடைய மங்கலமான அடியார்களுடைய ஈகைக் குணங்களை. வீறு இல் மேன்மை இல்லாத. கோறைவாய் - பொந்து போன்றவாய். பீறற்பிண்டப் பிணங்கள் - நவத்துவாரங்களையுடைய உடலைச் சுமந்து கொண்டிருக்கும் (நடைப்) பிணங்களை. என்னுடைய கண்கள் அவர்களைக் காணமாட்டா. என்னுடைய வாய் பேய் போல பயனற்று அலையும் அவர்களோடு பேசாது. இதனால் சிவனடியாரல்லாத மற்றவர்களைக் காணலும் அவர்களோடு பேசலும் கூடாது என்பது பெறப்பட்டது. 'ஈசனுக்கு அன்பில்லார்...பேசுவதென் அறிவில்லாப் பிணங்களை நாம் இணங்கில் பிறப்பினிலும் இறப்பினிலும் பிணங்கிடுவர் விடுநீ' என்னும் சிவஞான சித்தியார் செய்யுளோடு ஒப்பிடுக.

(உ) எட்டு உரு விரவி எட்டு உருவங்களோடு கலந்து. அவையாவன: நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன் ஆன்மா. ஈண்டு சோதி - திரண்ட சோதிவடிவினன். விட்டு இலங்கு அலங்கல் தில்லை வேந்தனை - ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற மாலையைத் தரித்த தில்லையம்பதிக்கு அரசனாகிய நடராஜப் பெருமானை. தொழும்பர் அடிமைகள். பிழம்பு - கொடுமை. பிட்டர் பிரஷ்டர் திருவருள் நெறிக்குப் புறம்பானவர்.

அருள்திரள் செம்பொற் சோதி அம்பலத் தாடுகின்ற
இருள்திரள் கண்டத் தெம்மான் இன்பருக் கன்பு செய்யா
வரட்டரை யரட்டுப் பேசு மழுக்கரைக் கழுக்க ளாய
பிரட்டரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. ௩

துணுக்கென அயனும் மாலுந் தொடர்வருஞ் சுடராயிப்பால்
அணுக்கருக் கணிய செம்பொ னம்பலத் தாடிக் கல்லாச்
சிணுக்கரைச் செத்தற் கொத்தைச் சிதம்பரைச் சீத்தையூத்தைப்
பிணுக்கரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. ௪

திசைக்குமி குலவு சீர்த்தித் தில்லைக்கூத் துகந்து தீய
நசிக்கவெண் ணீற தாடும் நமர்களை நணுகா நாய்கள்
அசிக்க ஆரியங்க ளோதும் ஆதரைப் பேத வாதப்
பிசுக்கரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. ௫

ஆடர வாட ஆடும் அம்பலத் தமிர்தே யென்னுஞ்
சேடர்சே வடிகள் சூடத் திருவிலா உருவி னாரைச்
சாடரைச் சாட்கை மோடச் சழக்கரைப் பிழுக்கப் பிட்கப்
பேடரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. ௬

---

(௩) அருள் திரள் - அருள் திரண்டு வடிவெடுத்தா லொத்த. எம்மான் இன்பருக்கு - எம் தலைவனிடத்து, அன்பு செலுத்தி அதனால் இன்பம் அடையும் அடியவர்களுக்கு. "அன்பினால் இன்பமார்வார்" பெரிய புராணம். (பெருமையால்.) அரட்டர் - குறும்பு செய்பவர். அரட்டுப்பேசும் கூச்சலிட்டுப் (பயனற்ற வார்த்தைகளைப்) பேசுகின்ற. அழுக்கரை - அசுத்தமானவரை; அல்லது பொறாமையுடையவரை. பிரட்டர் - பிரஷ்டர்.

(௪) துணுக்கென - திடுக்கிட்டு அஞ்சும்படி. அணுக்கருக்கு அணிய - அணுகினவர்களுக்குச் சமீபித்து வந்து அருள் புரியும் அம்பலத்தாடிக்கு அல்லா நடராஜப் பெருமானுக்கு அன்பர் அல்லாத. வரி 3. இழிவைக் குறிக்கும் வசை மொழிகள்.

(௫) கூத்து உகந்து...நமர்களை - நடனம் செய்யும் இறைவனை விரும்பி, தீமைகள் (பாவங்கள்) அழியும்படி திருநீற்றைத் தரிக்கும் நம்மவர்களை (சிவனடியார்களை). அசிக்க ஆரியங்கள் ஓதும் ஆதரை - (எதிரிகள்) பரிசிக்க வடமொழி நூல்களை ஓதும்படியான அறிவில்லாதவர்களை. பேதவாதப் பிசுக்கரை - பேதங்களைப் பற்றி வாதம் (தர்க்கம்) செய்யும் பொய்யர்களை.

(௬) சேடர் - அடியார். திருஇலா - பாக்கியமில்லாத. வரி 3. வசை மொழிகள். பேடர் - ஆண்மையற்றவர்.

உருக்கியென் னுள்ளத் துள்ளே ஊறலந் தேறல் மாறாத்
திருக்குறிப் பருளுந் தில்லைச் செல்வன்பாற் செல்லுஞ் செல்வி
லருக்கரை யள்ளல் வாய கள்ளரை அவியாப் பாவப்
பெருக்கரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே.

செக்கரொத் திரவி நூறு யிரத்திர ளொப்பாம் தில்லைச்
சொக்கரம் பலவ ரென்னுஞ் சுருதியைக் கருத மாட்டா
வெக்கரைக் குண்ட மிண்ட வெத்தரைப் புத்த ராதிப்
பொக்கரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே.

எச்சனைத் தலையைக் கொண்டு செண்டடித் திடபம் ஏறி
அச்சங்கொண் டமரர் ஓட நின்றஅம் பலவற் கல்லாக்
கச்சரைக் கல்லாப் பொல்லாக் கயவரைப் பசுநூல் கற்கும்
பிச்சரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே.

விண்ணவர் மகுட கோடி மிடைந்தொளிர் மணிகள் வீசும்
அண்ணலம் பலவன் கொற்ற அரசனுக் காசை யில்லாத்
தெண்ணரைத் தெருளா உள்ளத் திருளரைத் திட்டைமுட்டைப்
பெண்ணரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே

(எ) ஊறல் அம்தேறல்-ஊறி வருகின்ற அழகிய தேன்போன்ற பேரின்ப உணர்ச்சி. செல்லும் செல்வின் - சென்றடையும் மனப் போக்கு இல்லாத. அருக்கரை-குறைந்த அறிவுடையவரை. அள்ளல் வாய கள்ளரை - நரகத்தில் அழுந்துதற்குரிய திருடரை. அவியாப் பாவப் பெருக்கரை - ஒழியாத பாவங்களைப் பெருகச் செய்பவரை.

(அ) செக்கர் ஒத்து - செவ்வானம்போன்று. சொக்கர் - அழகர்; பரிசுத்தர். சுருதி - மந்திரம். எக்கர் - இறுமாப்புடையவர். குண்டர் - அடி மகள். மிண்ட எத்தரை மதம் பிடித்து வஞ்சிப்பவரை. பொக்கர் - பொய்யர்.

(கூ) அம்பலவற்கு அல்லா - அம்பலத்தாடும் பெருமானுக்கு அன்பர் அல்லாத. கச்சரை - வெறுக்கத்தக்கவரை. கல்லாப் பொல்லாக் கயவரை - ஞான நூல்களைக் கல்லாத தீமைக்குணம் வாய்ந்த கீழ்மக்களை. பசுநூல் கற்கும் பிச்சர் - ஆன்ம போத நூல்களைக் கற்கும் பித்தர்கள்.

(க0) தெண்ணர் - அறிவிலிகள். திட்டை முட்டை இழிவுத் தன்மை உணர்த்தும் சொற்கள். பெண்ணரை - ஆண்மையற்றவரை. "வாழ்த்தினின்று ஏத்தமாட்டா ஆணலாதவரைக் கண்டால் அம்ம நாமஞ்சுமாறே". திருவாசகம் (கோணிலா.)

சிறப்புடை யடியார் தில்லைச் செம்பொனம் பலவற் காளாம்
உறைப்புடை யடியார் கீழ்க்கீ ழுறைப்பர்சே வடிநீ றணியார்
இறப்பொடு பிறப்பி னுக்கே இனியராய் மீண்டும் மீண்டும்
பிறப்பரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்களோடே. கக

திருச்சிற்றம்பலம்

சேந்தனார் அருளிய

திருவிசைப்பா

க திருவீழிமிழலை

பண் பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

ஏகநாயகனை இமையவர்க் கரசை என்னுயிர்க் கமுதினை யெதிரில்
போகநாயகனைப் புயல்வணற் கருளிப் பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநாயகனை மிகுதிரு வீழி மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநாயகனை யன்றிமற் றொன்றும் உண்டென உணர்கிலேன் யானே. க

(கக) வரி 1. 2. சிறப்பினையுடைய அடியவர்கள் வாழும் தில்லையம்பதியில் செம்பொன் அம்பலத்தில் ஆடுகின்ற நடராஜப் பெருமானுக்கு அடிமை பூண்டு ஒழுகும் மனவுறுதியுடைய அடியவருக்கு அடியவராய் ஒழுகும் மன உறுதியுடையவராய், சிவபெருமான் திருவடி என்று சொல்லப்படும் திருவருட்பேற்றிற்கு அறிகுறியாகிய திருநீற்றை உடல் முழுவதும் அணியாதவராய். "திருவடி நீறென்னைப்பூ" அப்ப° (ஆவாசிறு). இனியராய் - விருப்பமுடையவராய்.

(க) ஏகநாயகனை - ஒருவனாய் (ஒப்பற்றவனாய்) யாவர்க்கும் தலைவனாயிருப்பவனை. எதிரில் போக நாயகனை - இணையில்லாத இன்பத்தை ஊட்டும் முதல்வனை. புயல்வ(ண்)ணற்கு அருளி மேகவண்ணனான திருமாலுக்கு அனுக்கிரகம் செய்து. பொன் நெடும் சிவிகையா ஊர்ந்த மேக நாயகனை மேக வடிவங்கொண்ட விஷ்ணுவையே பொன்னாலாகிய நீண்ட சிவிகையாக் கொண்டு ஏறிச் செலுத்திய தலைவனாகிய சிவபெருமானை. திருவீழிமிழலைத் திருக்கோயில் விண்ணுலகத்தினின்றும் கீழே இறங்கி வந்ததெனப் புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக் கரையிலக் கருணைமா கடலை மற்றவ ரறியா மாணிக்க மலையை மதிப்பவர் மனமணி விளக்கைச் செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத் திருவீழி மிழலைவீற் றிருந்த கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங் குளிரவென் கண்குளிர்ந் தனவே.

மண்டலத் தொளியை விலக்கியான் நுகர்ந்த மருந்தை யென் மாறிலா மணியைப் பண்டலர் அயன்மாற் கரிதுமாய் அடியார்க் கெளியதோர் பவளமால் வரையை, விண்டலர் மலர்வாய் வேரிவார் பொழில்சூழ் திருவீழி மிழலையூ ராளுங் கொண்டல்அம் கண்டத் தெங்குரு மணியைக் குறுகவல் வினைகுறு காவே. ௩

தன்னடி நிழற்கீ ழென்னையுந் தகைத்த சசிகுலா மவுலியைத் தானே என்னிடைக் கமலம் மூன்றினுள் தோன்றி

(உ) கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை - மெய்யுணர்வு தரக்கூடிய நூல்களைக் கற்றவர்கள் அநுபவிக்கும்படியான பேரின்ப உணர்வாயும் கற்பகத் தருவைப் போன்று அவர்கள் வேண்டியவற்றைத் தருபவனுமா யிருப்பவனை. மதிப்பவர் மனமணி விளக்கை - (அன்பால்) நினைப்பவருடைய மனத்தின்கண் மாணிக்கச் சுடர் போன்று பிரகாசிப்பவனை. செற்றவர் புரங்கள் செற்ற - துன்பம் செய்தவர்களுடைய முப்புரங்களை அழித்த.

(௩) மண்டலம் - பூமி. யான் விலக்கி நுகர்ந்த பிற பொருள்கள் எல்லாவற்றினின்றும் வேறு பிரித்து நான் அனுபவித்த. மருந்து - அமுதம். மாறு இல மணியை - மாறுபாடு இல்லாத மாணிக்கம் போன்றவனை. பண்டு அலர் அயன் மாலுக்கு அரிதுமாய் - முற்காலத்தில் தாமரைமேல் இருக்கும் பிரமனுக்கும் திருமாலுக்கும் காண்பதற்கு அரியவனாய். விண்டு அலர் மலர்வாய் வேரி வார் - இதழ் விரிந்து மலர்ந்த பூக்களினின்று தேன் ஒழுகிக் கொண்டிருக்கும், அல்லது வாசனை வீசும். கொண்டல் அம் - மேகம் போன்று கறுத்து அழகிய. குரு மணி - ஆசாரிய மாணிக்கம்; மிகச் சிறந்த ஆசாரியன். குறுக - நெருங்கினால்.

(௪) தகைத்த - தடுத்து ஆட்கொண்ட. சசி குலாம் மவுலி - சந்திரன் விளங்குகின்ற திருமுடியையுடையவன். மலம் மூன்று - ஆணவம் கன்மம் மாயை ஆகிய மூன்று மலங்கள்.

யெழுஞ்செழுஞ் சுடரினை அருள்சேர் மின்னெடுங்கடலுள்
வெள்ளத்தை வீழி மிழலையுள் விளங்குவெண் பளிங்கின்
பொன்னடிக் கடிமை புக்கினிப் போக விடுவனோ பூண்டு
கொண்டேனே. ௪

இத்தெய்வ நெறிநன் றென்றிருள் மாயப் பிறப்பறா
இந்திர சாலப் பொய்த்தெய்வ நெறிநான் புகாவகை புரிந்த
புராணசிந் தாமணி வைத்த மெய்த்தெய்வ நெறிநான் மறை
யவர் வீழி மிழலையின் இழிசெழுங் கோயில், அத்தெய்வ
நெறியிற் சிவமலா தவமும் அறிவரோ அறிவுடை யோரே

அக்கனா அனைய செல்வமே சிந்தித் தைவரோ டழுந்
தியான் அவமே புக்கிடா வண்ணம் காத்தெனை ஆண்ட
புனிதனை வனிதைபா கனையெண் திக்கெலாங் குலவும்
புகழ்த்திரு வீழி மிழலையான் திருவடி நிழற்கீழ்ப் புக்குநிற்

---

(௪) அருள்சேர் மின் நெடுங் கடலுள் வெள்ளத்தை - ஒளி பொருந்திய அருள் வெள்ளமாயிருப்பவனை. போக விடுவனோ பூண்டு கொண்டேனே - திருவடிகளை என்னை விட்டு நீங்கும்படி விடமாட்டேன், அவைகளை என் சிரமீது பூண்டுகொண்டேன்.

(௫) இத் தெய்வ நெறி நன்று என்று முழுமுதற் கடவுளை அடைவதற்கு இந்த வழி நல்வழி என்று கருதி. இருள் மாயப்பிறப்பு அறா - அறியாமையும் வஞ்சகமும் கூடிய பிறவியை ஒழிக்கும் தகுதியில்லாத. இந்திரசாலப் பொய்த் தெய்வநெறி...புரிந்த - இந்திர ஜாலம் போன்று அழியும் தன்மை வாய்ந்த சிறு தெய்வ வழிபாட்டு நெறியில் நான் செல்லா வண்ணம் அருள்செய்த. புராண...... நான் மறையவர் பழைய உயர்ந்த தேவமணி போன்ற சிவபெருமான் காட்டிய உண்மைத் தெய்வத்தை அடையும்படியான வழியைப் பின்பற்றும் நான்கு வேதங்களில் வல்ல வேதியர் (வாழும்). சிவம் அ(ல்)லாது அவமும் - சிவபெருமான் திருவருள் அல்லாது பயனற்ற வேறுபொருளையும். 'அவமே பிறந்த அருவினையேன் உனக் கன்பருள்ளாம் சிவமே பெறும் திருவெய்திற்றிலேன்'' திருவாசகம (தவமே).

(௬) அக்கனா அனைய செல்வமே - அந்த கனவு போன்று மெய் போலத் தோன்றிப் பின் மறையும் செல்வத்தையே. ஐவரோடு அழுந்தி - ஐம்புல நுகர்ச்சியில் தோய்ந்து. அவமே புக்கிடா வண்ணம் - பயனின்றிப் (பிறவியில்) புகாதபடி.

பவர்தம் பொன்னடிக் கமலப் பொடியணிந் தடிமைபூ
டேனே. ௬

கங்கை நீ ரரிசிற் கரையிரு மருங்கும் கமழ்பொழில் தழுவிய கழனித் தி கள்மே ர் நீண்ட நீண்டமா ளிகை சூழ் மாடநீ டுயர்திரு வீழித் த குசீர்ச் செல்வத் தெய்வத்தான் தோன்றி நம்பியைத் தன்பெருஞ் சோதி மங்கை யோர் பா த் தென்னரு மருந்தை வருந்திநான் மறப்பனோ இனியே. ௭

ஆயிர மலம் ஞா யிறு யிரம்முக் ண்முக கரசர ணத் தோன் பாயிரு க பணிநிலாக் ரந்த படர்சடை மின்னுபொன் முடியோன் வேயிருந் தோளி உ மைம வாளன் விரும்பிய மிழலைசூழ் பொழிலைப் போயிரு தேயும் போற்றுவார் கழல் ள் போற்றுவார் புர தரா தி ளே. ௮

எண்ணில்ப ே ாடி சேவடி முடி ள் எண்ணில்பல் கோடிதிண் தோள் ள் எ ணில்பல் ே ாடி திருவுரு நாமம் ஏர்கொள்முக் கண்முக மியல்பும் எ ணில்பல் ே ாடி யெல்லைக்கப் பாலாய் நின்றைஞ் ஞூற் றந்தண ரேத்தும் எண்ணில்பல் ே ாடி கு த்தர்எர் வீழி யிவர்நம்மை ஆளுடை யாரே.

---

(௬) பொன்அடிக் கமலப் பொடி தாமரைபோன்று அழகிய திருவடித் தூகள்.

(௭) மழ் பொழில் தழுவிய கழனி - ம ங் மழும் சோலை ளை அடுத்துள்ள வயல் ள். தான்தோன்றி நம்பி - தானே த் தோன்றிய பெரு மயிற் சிற தவன். வருந்தி நான் மறப்பனோ - நான் மறந்து வருந்து னோ?

(௮) ரி 1. முக் ண் ள் ஆயிரம் சூரியர் ள் சேர்ந்தாற் போல ஒ ரியு ளன. மு ம் ை திருவடி இ வ ஆயிரம் தாம ர மலர் போ று அழ ாய்த் தோன்றுவன. ரி 2. பாய்ந்து ஓடும் பெரிய கங் ா நதி யயு குளிர்ச்சி பொருந்திய சந்திரனையும் ஒ ரித்து வைத்துள்ள படர் த ச ட ஒளிவிட்டுப் பிரகாசி கி ற அழகிய திருமுடி யயு டய ன். வேய் இரும் தே ளி - பருத்த மூ கில் போன்ற தோ ளையு ட .

(௯) ஏர்கொ ா - அழகு ாய்ந்த. தில்லை மூ ாயிர ர்போன்று, திருவீழி மிழலையில் ந்நூற்றந்த ர் இருந்த ர் ன்ப.

தக்கன்வெ' கதிரோ'ன் சலந்தரன் பிரமன் சந்திரன் இந்திரன் எச்சன் மிக்கநெஞ் சரக்கன் புரம்கரி கருடன் மறலிவே ளிவர்மிகை செகுத்தோன் திக்கெலாம் நிறைந்த புகழ்த்திரு வீழி மிழலையான் திருவடி நிழற்கீழ்ப் புக்கிருந் தவர்தம் பொன்னடிக் கமலப் பொடியணிந் தடிமைபூ' டேனே. க0

உளங்கொள மதுரக் கதிர்விரித் துயிர்மேல் அருள்சொரி தரும் மா பதியை வளங்கிளர் நதியும் மதியமுஞ் சூடி மழவிடை மேல்வரு வானை விள 'கொளி வீழி மிழலைவேந் தேயென் றுந்தனைச் சேர்ந்தனா தையான் களங்கொள அழைத்தாற் பி ழைக்குமோ அடியேன் கைக்கொண்ட கன ற்பகமே. கக

பாடலங் காரப் பரிசில்கா சருளிப் பழுத்தசெந் தமிழ்மலர் சூடி நீடலங் காரத் தெம்பெரு மக்கள் நெஞ்சினுள்

(க0) எச்சன் - யாகத் தலைவன். மிக்க நெஞ்சு அரக்சன் - வன்மை மிக்க நெஞ்சனுன இராவணன். புரம் - திரிபுரம். மறலி - யமன். வேள்-மன்மதன். இவர் மிகை செகுத்தோன்-இவர்களுடைய கர்வத்தை அழித்தவன்.

(கக) வரி 1. இன்பமயமான ஞானஒளியை மனதில் பொருந்து மாறு பரப்பி, உயிர்கள் மேல் அருள் மழையைப் பொழிகின்ற உமா தேவியார் நாயகனை. ஆம் தனை - கூடிய அளவில். களம் கொள அழைத்தால் - கண்டத்தினுல் கூடியமட்டும் கூ வி அழைத்தால். பிழைக்குமோ - (வராமல்) தவறுமோ. கனக கற்பகமே - பொன் நிறம் வாய்ந்த கற்பகக் னி போன்ற சிவபெருமான்.

(கஉ) வரி 1 2. பாடுகின்ற அலங்காரத்திற்கு வெகுமதியாக (திருஞா சம்பந்தருக்கும் திருநாவு' ரசருக்கும்) பொற்காசுகளை அருள் செய்து, திருவருள் கனிந்த அல்லது மிகுந்த பயனைத் தரவல்ல செந்தமிழ்ப் பாமாலையை நீடித்து என்றும் அலங் ாரமாயிருக்கும்படிச் சூட்டிய பெரு ம மி'க அவ்விரு அடியார்கள். பூமாலை சிறிது நேரத்தில் வாடிப் போகும்; பாமாலை என்றும் வாடாது.

நிறைந்துநின் றுனை வேடலங் காரக் கோலத்தின் அமுதைத் திருவீழி மிழலையூ ராளுங் கேடிலங் கீர்த்திக் கனகக் கற்பகத்தைக் கெழுமுதற் கெவ்விடத் தேனே. கஉ

திருச்சிற்றம்பலம்

உ. திருவாவடுதுறை*

பண் பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

பொய்யாத வேதியர் சாந்தைமெய்ப் பூணாளர் ஆயிரம் பூசுரர் மெய்யே திருப்பணி செய்சீர் மிகுநா விரிக்கரை மேய ஐயா திருவா வடுதுறை யமுதே யென்றுன்னை யழைத்தக்கால் மையார் தடங்கண் மடந்தைக்கொன் றருளா தொழிவது மாதிமையே. க

மாதி மணங் கமழும்பொழில் மணிமாட மாளிகை வீதிசூழ் சோதி மதிலணி சாந்தைமெய்ச் சுருதி விதிவழி யோர்தொழும் ஆதி யமரர் புராணனாம் அணியாவடுதுறை நம்பிநின்ற நீதி யறிகிலள் பொன்னெடுந் திண்டோள் புணர நினைக்குமே. உ

(கஉ) வேடு அலங்காரக் கோலத்தின் - அழகிய வேடக் கோலம் பூண்ட. கேடு இல் அம் கீர்த்தி - கேடு இல்லாத அழகிய புகழ். கெழுமுதற்கு எவ்விடத்தேனே - கூடுதற்கு நான் எவ்விதத் தகுதி யுடையவன்?

இப்பதிகம், சிவபெருமான் மீது காதல்கொண்ட ஒரு பெண்ணின் தாய் கூறிய மொழிகளாகப் பாடப்பட்டுள்ளது. இப்பதிகம் அந்தாதித்தொடை.

(க) சாந்தை - சாந்தையூர். சாந்தையூர் என்பது ஊர்ப்பெயரும், திருவாவடுதுறைக் கோவிலின் பெயரும்போல் தோன்றுகிறது. மடந்தைக்கு - மடந்தைப்பருவமுள்ள என் மகளுக்கு. ஒன்று - ஒரு வார்த்தை. மாதிமையே - அழகோ?

(உ) மாதி - விருப்பத்தைத் தரத்தக்க, அழகிய; அல்லது மாமரம். மெய்ச் சுருதி விதி வழியோர் - உண்மையான வேதங்களின் கட்டளைப்படி நடக்கும் அந்தணர். நினைக்குமே - நினைப்பாள்.

நினைக்கு நிரந்தர னேயென்னும் நிலாக்கோலச் செஞ்
சடைக் கங்கை நீர் நனைக்கும் நலங்கிளர் கொன்றைமேல்
நயம்பேசும் நன்னுதல் நங்கைமீர் மனக்கின்ப வெள்ள மலை
மகள் மணவாள நம்பிவண் சாந்தையூர், தனக்கின்ப னாவடு
தண்டுறைத் தருணேந்து சேகர னென்னுமே. ரு

தருணேந்து சேகர னேயெனுந் தடம்பொன்னித்
தென்கரைச் சாந்தையூர்ப் பொருள் சேர்ந்த சிந்தையவர்
தொழப்புகழ்செல்வம் மல்குபொற்கோயிலுள் அருள் சேர்ந்
தமர்திரு வாவடு துறையாண் டாண்டகை யம்மானே
தெருள்சேர்ந்த சித்தம் வலியவா திலக நுதலி திறத்திலே.

திலக நுதலுமை நங்கைக்குந் திருவா வடுதுறை நம்
பிக்குங் குலக அடியவர்க் கென்னையாட் கொடுத்தாண்டு
கொண்ட குணக்கடல் அலதொன் றறிகின்றி லேமெனும்
அணியும்வெண் ணீறஞ் செழுத்தலால், வலதொன்றிலள்
இதற்கென் செய்கேன் வயலந்தண் சாந்தையர் வேந்தனே.

(ரு) நினைக்கும் நினைப்பாள். நிரந்தரனே என்னும் - எக்காலத்து முள்ளவனே என்பாள்; அல்லது, நான் எக்காலத்தும் நினைக்கும் தன்மையுடையவனே என்பாள் என்னலுமாம். நலங்கிளர் - அழகு மிக்க. நயம் பேசும் - இன்பம் படப்பேசும். மனக்கு இன்ப வெள்ள - மனதிற்கு இன்பவெள்ளத்தைத் தருகின்ற.

(சா) தருண இந்து சேகரன் - இளஞ் சந்திரனைத் தரித்த திருமுடியுடையவன். பொருள் சேர்ந்த-மெய்ப்பொருள் சேர்ந்த. அருள் சேர்ந்து அமர் - அருளை வழங்கிக்கொண்டு வீற்றிருக்கும். வரி 4. தெளிந்த அறிவுடன் கூடிய உன் மனம் பொட்டு இட்ட நெற்றியுடைய என் மகள் விஷயத்தில் மட்டும், இரங்காமல் வலிதாயிருக்கின்றது; அதற்குக் காரணம் யாது?

(எ) குல அடியவர்க்கு - கூட்டமாகிய அடியார்களுக்கும். ஆட்கொடுத்து அடிமையாக் கொடுத்து. அ(ல்)லது ஒன்று அறிகின்றிலேம் எ(ன்)னும் - அல்லாமல் வேறு ஒன்றையும் அறிகின்றேன் இல்லை என்பாள். அணியும் வெண்ணீறு எழுத்து அஞ்சு அ(ல்)லால் வ(ல்)லது ஒன்று இலள் - வெண்மையான திருநீற்றை அணிவதும் பஞ்சாட்சரத்தை ஓதுவதும் அல்லாமல் செய்யவல்ல காரியம் வேறொன்றும் இல்லாதவளாய் இருக்கின்றாள்.

வேந்தன் வளைத்தது மேருவில்அரவுநாண் வெங்கணைசெங் கண்மால்
போந்த மதிலணி முப்புரம் பொடியாட வேதப் புரவித்தேர்
சாந்தை முதலயன் சாரதி கதியருளென்னுமித் தையலை
யாந்தண் திருவா வடுதுறையான் செய்கை யாரறிகிற்பாரே.

இற்போ மெனத்தக்கன் வேள்விபுக் கெழுந்தோடிக்
கெட்ட வத்தேவர்கள் சொற்போலு மெய்ப்பயன் பாவிகா
ளென்சொல்லிச் சொல்லுமித் தூமொழி ற்போல் மனம்
கனிவித்தவெ கருணை யாவந்திடா வெ றால் பெற்போ
பெருந்திரு வாவடு துறையாளி பேசா தொழிவதே. எ

ஒழிவொன்றி லாஉண்மை வண்ணமும் உலப்பிலள்
ஊறின்ப வெள்ளமும் ஒழிவொன்றி லாப்பொன்னித்

(சு) போந்த மதில் அணி முப்புரம் பொடியாட வேதப்புரவித் தேர் அயன் சாரதி அரவுநாண் செங்கண்மால் வெங்கணை வேந்தன் வளைத்தது மேருவில் - உ ை ந ட. சஞ்சரித்துக்கொண்டிருந்த மதிலோடு கூடிய அழகிய முப்புரங்கள் நீறாகி எரிய, வேதங்களாகிய குதிரைகளைக் கட்டிய தேரையும், பிரமனாகிய சாரதியையும், ஆதிசேஷனாகிய வில்லின் கயிற்றையும், சிவந்த கண்களையுடைய திருமாலாகிய அம்பையும் உடன்கொண்டு, அரசனாகிய சிவபெருமான் மேருமலையை வில்லாக வளைத்தனர். சாந்தைமுதல் கதி அருள் - சாந்தையூர் முதல்வனே. ஆதரவு அளிப்பாய். யார் அறிகிற்பார் யார் அறியவல்லார்? தையலை திருவாவடுதுறையான் (செய்த)- செய்கை யார் அறிகிற்பார் என்று கூட்டுக.

(எ) "பாவிகாள். இற்போம்......மெய்ப்பயன் என் (என்று), இத்தூமொழி சொல்லிச் சொல்லும் உ ட. 'பாவி ோ. உங்கள் சொல்லானது, நா ள் வல்லவர் ள் என்று எ ணி, த ன் வேள்விக்குச் சென்று, வீரபத்திரர் வந்தபோது, அவ்விடத்தி னின்று எழுந்து ஓடி அழிந்த தேவர்களு டைய வீரமொழிளைப் போன்றுள்ளது 'மெய்ப்பயன் என்ன கண்டீர்?" எ று பலகாலும் பரிசுத்தமான மொழியைப் பேசும் இப்பெண் சொல்லுவாள்.

(அ) ஒழிவு ஒன்று இலா உண்மை வண்ணமும் நக்கமற நிறைந்த உண்மைத் தன் மயும். உலப்பு இலள் று இ பவெள்ளமும் - அழிவில்லாதபடி ஊறிக்கொண்டிருக்கும் பேரின்பவெள்ளமும். ஒழிவு ஒன்று இலா ற்ருத.

தீர்த்தமும் முனிகோடி கோடியா மூர்த்தியும் அழிவொன்றி
லாச்செல்வச் சாந்தையூ ரணியா வடுதுறை யாடினாள் இழி
வொன்றி லாவகை யெய்திநின் றிறுமாக்கும் என்னிள
மானனே. ௮

மானேர் கலைவளை யுங்கவர்ந் துளங்கொள்ளை கொள்ளவழக்குண்டே
தேனே அமுதேயென் சித்தமே சிவலோகநாயகச்செல்வமே
யானேய லம்புனற்பொன்னி அணியாவடுதுறை அன்பர்தங்
கோனேநின் மெய்யடி யார்மனக் கருத்தை முடித்திடுங்குன்றமே.

குன்றேந்தி கோகனதத்தயன் அறியாநெறியென்னைக் கூட்டினாய்
என்றேங்கியேங்கி அழைக்கின்றாளிளவல்லி யெல்லைகடந்தனள்
அன்றேய லம்புனற்பொன்னி அணியாவடுதுறையாடினாள்
நன்றே யிவள்நம் பரமல்லள் நவலோக நாயகன் பாலளே.

---

(௮) முனிகோடி கோடியாம் மூர்த்தியும் - எண்ணில்லாதமுனிவரையும், எண்ணில்லாத இறைவன் திருவுருவங்களையும். ஆடினாள் மூழ்கினாள். ஆவடுதுறை ஆடினாள் (ஆகிய) என் இளமான் அனே, வண்ணமும் வெள்ளமும், தீர்த்தமும், மூர்த்தியும் எய்தி நின்று இறுமாக்கும் என்று முடிக்க. இளமான் அனே - இளமானை ஒத்தவளாகிய என் மகள்.

(௯) மான் ஏர் கலைவளையும் - மான்போன்றவளின் அழகிய மேகலையையும் கைவளைகளையும். வழக்கு உண்டே-நியாயம் ஆகுமா? ஆனே அலம்பு பசுக்கள் ஒலியுடன் மூழ்குகின்ற. அல்லது ஆனே - அவ்வி த்திலே.

(௧௦) குன்று எந்தி கோகனதத்து அயன் - கோவர்த்தனம் என்னும் மலையைக் குடையாப் பிடித்த திருமாலும், தாமரை மலர்மேல் இருக்கும் பிரமனும். அன்றே - அல்லவா? இளவல்லி எல்லை கடந்தனள் - இளங்கொடி போல்வாள் வரம்பைக் கடந்துவிட்டாள். அறியாநெறி யென்னைக் கூட்டினாய் (இவர்களால்) அறியமுடியாத திருவருள் நெறியில் என்னைச் சேர்ப்பித்தாய். அலம்பு சப்திக்கின்ற. நம்பரம் அல்லள் - நம்முடைய செயலுக்கு ஒத்தவள் அல்லள். நவலோகம் - புதுமை வாய்ந்த உலகம். பாலள் - சார்ந்தவள். நன்றே இது நன்றாயிருக்கின்றதா?

பாலும் அமுதமும் தேனுமாய் ஆனந்தம் தந்துள்ளே பாலிப்பான
போலுமென் னாருயிர்ப் போகமாம் புரகால காமபுராந்தகன்
சேலுங் கயலுந் திளைக்குநீர்த் திருவாவடுதுறை வேந்தனோ
டாலுமதற்கே முதலுமாம் அறிந்தோம் அரிவைபொய்யாததே.

திருச்சிற்றம்பலம்

௯. திருவிடைக்கழி*

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

மாலுலா மனந்தந் தென்கையிற் சங்கம் வவ்வினான் மலைமகள் மதலை, மேலுலாந் தேவர் குலமுழு தாளுங் குமரவேள் வள்ளிதன் மணாளன் சேலுலாங் கழனித் திருவிடைக் கழியில் திருக்குரா நீழற்கீழ் நின்ற வேலுலாந் தடக்கை வேந்தனென் சேந்தன் என்னுமென் மெல்லியலிவளே.

(கக) தந்து உள்ளே பாலிப்பான் - மனத்தினுள் தந்து அருள் செய்வான். போலும் - அசை. என் ஆருயிர்ப் போகமாம் எனது அருமையான உயிரினிடத்து இன்பத்தை விளைவிப்பனாகிய. கால காம புராந்தகன் யமனையும், மன்மதனையும், திரிபுரத்தையும் அழித்தவன். வரி 4. விளையாடுவதற்கே முற்படுவாளாகின்றாள். இந்தப் பெண் இந்த வழி நின்று விலகாமையை அறிந்தோம்.

*இப்பதிகம் முருகக்கடவுள் மேல் தோத்திரமாக அமைந்துள்ளது. இதுவும் முருகன் மேல் காதல் கொண்ட ஒரு பெண்ணின் தாய் கூறிய மொழிகளாகக் கூறப்பட்டுள்ளது.

(க) வரி 1. பர்வதராஜன் புத்திரியின் மகனை முருகப்பிரான் தன்னிடத்துக் காதலால் உண்டான மயக்கம் கொண்ட மனதைக் கொடுத்து என் கையிலுள்ள சங்கினாலாகிய வளையல்களைக் கவர்ந்தான். மேல்உலாம் - விண்ணுலகத்தில் வாழ்கின்ற. சேல் உலாம் கழனி சேல்மீன்கள் சஞ்சரிக்கும்படியான நீர் வளப்பமுள்ள நிலங்களையுடைய. வேல் உலாம் தடக்கை - வேல் ஏந்திய பெரிய கை. வேந்தன் என் சேந்தன் - சேந்தன் என் வேந்தன் (தலைவன்). சேந்தன் சிவந்த (அக்கினி) வடிவத்தையுடையவன். மெல்லியள் மெல்லிய தன்மையுடையவள். என்னும் - என்று கூறுவாள்.

இவளை வாரிளமென் கொங்கைபீர் பொங்க எழில்
கவர்ந்தானிளங் காளை கவளமா கரிமேல் கவரிசூழ் குடைக்
கீழ்க் கனக்குன் றெனவருங் கள்வன் திவளமாளிகை
சூழ் திருவிடைக் கழியில் திருக்குரா நீழற்கீழ் நின்ற
குவளை மாமலர்க்கண் நங்கையானைக்கும் குழகன்நல் அழ
கன் நங்கோனே. ௨

கோவினைப் பவளக் குழமணக் கோலக் குழாங்கள் சூழ்
கோழிவெல் கொடியோன் காவல்நற் சேனையென் னக்காப்
பவனென் பொன்னை மேலை கவர்வானே தேவினற் றலை
வன் திருவிடைக் கழியில் திருக்குரா நீழற்கீழ் நின்ற தூவி
நற் பீலி மாமயி லூருஞ் சுப்பிர மண்ணியன் தானே. ௩

தானமர் பொருது வானவர் சேனை மடியச்சூர் மார்
பினைத் தடிந்தோன் மானமர் தடக்கை வள்ளல்தன் பிள்ளை
மறைநிறை சட்டறம் வளரத், தேனமர் பொழில்சூழ் திரு

(௨) வார் இளமென் கொங்கை பீர் பொங்க - கச்சு அணிந்த இளமையும் மென்மையும் வாய்ந்த கொங்கைகளில் பசலை நிறம் மிக. கவளமா கரி - சோற்றுத்திரளை உண்ணும் பெரிய யானை. கவரிசூழ் - சுற்றிலும் வெண்சாமரை வீச. கள்வன் - காண்பவர் மனதைக் கொள்ளை கொள்ளும் கள்வன். திவளம் - விளக்கம் (பொருந்திய). நங்கையானைக்கும் குழகன் - (முதற்பாட்டில் கூறிய வள்ளி அம்மையாருக்கு மல்லாமல்) நங்கையாகிய தெய்வயானை அம்மையாருக்கும் மணவாளர்.

(௩) பவளக் குழ - பவள நிறத்தொடு இளமை வாய்ந்த. காவல் நற்சேனை என்ன - காவலைச் செய்யும் நல்ல சேனையைப் போல. பொன்னை - பொன் போன்ற மகளை. தேவின் - தேவர்களுக்கு. தூவி - இறகு. பீலி - தோகை.

(௪) வரி 1. தேவர்கள் சேனை போரில் சூரனால் மடிய தான் சூரனுடன் போர்செய்து அவன் இறக்கும்படி மார்பினைப் பிளந்தவன். மான் அமர் - மானை ஏந்திய. மறைநிறை சட்டறம் - வேதங்களில் மிகுதியாகச் சொல்லப்பட்டுள்ள (ஷட்+அறம்) அறுவகைப் புண்ணியச் செயல்கள். அவையாவன: ஈதல், ஏற்றல், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல்.

விடைக் கழியில் திருக்குரா நீழற்கீழ் நின்ற கோனமர்
கூத்தன் குலவிளங் களிறென் கொடிக்கிடர் பயப்பதுங்
குணமே. ௪

குணமணிக் குருளைக் கொவ்வைவாய் மடந்தை படு
மிடர் குறிக்கொளாது அழகோ மணமணி மறையோர் வான
வர் வையம் உய்யமற் றடியனேன் வாழத் திணமணி மாடத்
திருவிடைக் கழியில் திருக்குரா நீழற்கீழ் நின்ற மணி
பொருநீர்க் கங்கைதன் சிறுவன் கணபதி பின்னிளங்
கிளையே. ௫

கிளையிளஞ் சேயக் கிரிதனைக் கீண்ட ஆண்டகை
கேடில்வேற் செல்வன் வளையிளம் பிறைச்செஞ் சடையரன்
மதலை ஏர்கிற மால்திரு மருகன் கிளையிளம் பொழில்சூழ்
திருவிடைக் கழியில் திருக்குரா நீழற்கீழ் நின்ற முளை
யிளங் களிறென் மொய்குழற் சிறுமிக் கருளுங்கொல் முருக
வேள் பரிந்தே

(௪) கோன் அமர் கூத்தன் குலவு இளங் களிறு - தலைமை வாய்ந்த கூத்தாடுபவனாகிய சிவபெருமான் விரும்பிய பிரகாசிக்கின்ற இளைய யானை போன்றவனுமாகிய முருகப்பிரான். குணமே நல்ல தன்மை ஆகுமோ?

(௫) குணம் அணிக் குருளை - நற்குணம் வாய்ந்த அழகிய சிறுமி. குறிக்கொளாது - கவனியாமலிருப்பது. மணம் - கூட்டம். அணி - பெருமை. திணம் அணி - உறுதியான அழகிய அலங்காரமுள்ள. மணி பொரு நீர் - மணித்திரள்களைத் தள்ளிக் கொண்டு போகும் நீரையுடைய. பின் இளங்கிளை - தம்பியாகிய சிறுவன்.

(௬) கிளை இளம் சேய் - ஒளிபொருந்திய இளங்குமரன். அக் கிரிதனைக் கீண்ட - அக்கிரௌஞ்சமலையைப் பிளந்த. கிளை - நெருங்கிய. முளை இளம் களிறு - மிக இளைய யானை போன்றவன். மொய்குழல் - அடர்ந்த கூந்தல்.

பரிந்தசெஞ் சுடரோ பரிதியோ மின்னோ பவளத்தின் குழவியோ பசும்பொன் சொரிந்தசிந் தூரமோ தூமணித் திரளோ சுந்தரத் தரசிது வென்னத் தெரிந்தவை திகழ்வாழ் திருவிடைக் கழியில் திருக்குரா நீழற்கீழ் நின்ற வரிந்தவெஞ் சிலைக்கை மைந்தனை அஞ்சொல் மையல்கொண் டையுறும் வகையே. ௭

வகைமிகும் அசுரர் மாளவந் துழிஞை வானமும் விளைத்ததா ளாளன் புகைமிகும் அனலிற் புரம்பொடி படுத்த பொன்மலை வில்லிதன் புதல்வன் திகைமிகு கீர்த்தித் திருவிடைக் கழியில் திருக்குரா நீழற்கீழ் நின்ற தொகைமிகு நாமத் தவன்திரு வடிக்கென் துடியிடை மடல்தொடங் கினளே. ௮

தொடங்கினள் மடலென் றணிமுடித் தொங்கல் புறஇதழாகிலும் அருளான் இடங்கொளக் குறத்தி திறத்திலும் இறைவன் மறத்தொழில் வார்த்தையும் உடையன்; திடங்கொள்வை திகழ்வாழ் திருவிடைக் கழியில் திருக்குரா நீழற்கீழ் நின்ற மடங்கலை மலரும் பன்னிரு நயனத் தறுமுகத் தமுதினை மருண்டே.

(எ) பரிந்த செஞ்சுடரோ - அன்புடன் கூடிய சிவந்த சோதி வடிவோ? 'அருளுடைச்சுடரே' திருவாசகம். பரிதி - சூரியன். சிந்தூரமோ செவ்வொளியோ. வரிந்த - கட்டுண் அமைந்த. அம்சொல் - அழகிய சொல்லையுடைய பெண். தெரிந்தவை திகழ் வாழ்.........ஐயுறும்வகை, பரிந்தசெஞ்சுடரோ.........சுந்தரத்து அரசு இது என்ன(ப்படுவது ஆகும்) உ ந ட.

(அ) வகை மிகும் - பலவகைப்பட்ட. உழிஞை - உழிஞை மாலை யச்சூடி. உழிஞை அஷ்டவெற்றி மாலைகளுள் ஒன்று. தாளாளன் - முயற்சியுடையவன். திகமிகும் - எல்லா திக்குகளிலும் பரவிய. என் துடியிடை - உடுக்கை போன்ற இடையையுடைய என் மகள். மடல் தொடங்கினள் - பனைமடல் ஏறத் தொடங்கினாள்.

(க) அணிமுடி தொங்கல் - அழகிய முடியில் அணிந்த மாலை. இடம்கொள் அக் குறத்தி - பக்கத்தில் இடங்கொண்டுள்ள வள்ளி அம்மையார். மறத்தொழில் வார்த்தையும் - கோபத்தைத் தெரிவிக்கும் படியான செய்கையையும் சொல்லையும். திடம் - மன உறுதி. மடங்கலை - வீரத்தால் சிங்கத்தை ஒப்பவனை. மலரும் - விரிகின்ற. மருண்டு (காதலித்து) மயங்கி. மருண்டே தொடங்கினள் மடல் என்று முடிக்க

மருண்டுறை கோயில் மல்குநன் குன்றப் பொழில்
வளர் மகிழ்திருப் பிடவூர் வெருண்டமான் விழியார் ருள்
செயா விடுமே விடலையே யெவர்க்கு(ம்)மெய் யன்பர்
தெருண்டவை திகர்வாழ் திருவிடைக் கழியில் திருக்குரா
நீழற்கீழ் நின்ற, குருண்டபூங் குஞ்சிப் பிறைச்சடை முடி
முக் கண்ணுடைக் கோமளக் கொழுந்தே. ௧௦

கொழுந்திரள் வாயார் தாய்மொழியாகத் தூய்மொழி
யமரர்கோ மனைச் செழுந்திரட் சோதிச் செப்புதற்*
சேந்தன் வாய்ந்தசொல் லிவை சுவாமியையே செழுந்தடம்
பொழில்சூழ் திருவிடை கழியில் திருக்குரா நீழற்கீழ்
நின்ற எழுங்கதி ரொளியை யேத்துவார் கேட்பார் இடர்
கெடும் மாலுலா மனமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

---

(௧௦) மருண்டு உறைகோயில் - விரும்பி உறைகின்ற திருக்கோயில்கள். அருள் செயாவிடுமே அருள் செய்யாமல் போவானோ? விடலை - மணவாளன்; காளைப் பருவமுடையவன். விடலையே எவர்க்கும்-ஆன்மாக்களுக்கெல்லாம் நாயகனாயிருப்பவன். தெருண்டவைதிகர் - தெளிந்த அறிவினையுடைய வேதத்தில் வல்லவர்கள். குருண்ட பூங்குஞ்சி - முன் கொண்டையுடைய அழகிய தலைமயிர். வரி 4. பிறையைத் தரித்த சடைமுடியையும் மூன்று கண்களையும் உடைய அழகிய வடிவங்கொண்ட சிவபெருமானுடைய குலக்கொழுந்து (குமாரன்) ஆன முருகப்பிரான்.

(௧௧) மால் உலாம் மனமே, தூய்மொழி அமரர்கோமனைச் செழுந்திரட் சோதிச் செப்புதற் சேந்தன் கொழுந்திரள் வாயார் தாய்மொழியா வாய்ந்த சொல்லிவை சுவாமியையே செழுந்தடம் பொழில்சூழ் திருவிடைக் கழியிற்றிருக்குரா......இடர்கெடும். உ ந ட. ட ர- மயக்க உணர்வினையுடைய மனமே. பரிசுத்தமான வாக்கையுடைய தேவர் பிரானும், செழுமையான திரண்ட சோதி வடிவினனுமான முருகப் பெருமானைப்பற்றிச் சொல்லுதற் கெழுந்த சேந்தனாகிய யான், வளமையோடு கூடித் திரண்ட வாயினையுடைய தலைவியின் தாய்மார்கள் சொன்ன மொழிகளைப் போன்று இயற்றிய இப்பாடல்களினால், செழுமையான பெரிய பொழில்களாற் சூழப்பட்ட திருவிடைக்கழியில் குராமரத்தின் நீழலில் நின்ற, மேலெழுந்து விளங்கும் சூரியனைப் போன்ற ஒளி வடிவினனை முருகப்பெருமானைத் துதிப்போர், அல்லது துதித்தலைக் கேட்போருடைய துன்பம் நீங்கும்.

* செப்புறைச் சேந்தன் என்றும் பாடம்.

கருவூர்த்தேவர் அருளிய

திருவிசைப்பா

க கோயில்

பண - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

கணம்விரி குடுமிச் செம்மணிக் கவைநாக் கறையனற் கட்செவிப் பகுவாய் பணம்விரி துத்திப் பொறிகொள் வெள் ளெயிற்றுப் பாம்பணி பரமர்தங் கோயில் மணம் விரி தருதே மாம்பொழில் மொழுப்பின் மழைதவழ் வள ரிள. கமு ந் திணர்நிரை யரும்பும் பெரும்பற்றப் புலியூர்த் திருவளர் திருச்சிற்றம் பலமே. க

இவ்அரும் பிறவிப் பௌவநீர் நீந்தும் ஏழையேற் கென் னுடன் பிறந்த ஐவரும பகையே யார்துணை யென்றால் அஞ்சலென் றருள்செய்வான் கோயில், கைவரும் பழனங்

(க) ணம் விரி குடுமி - கூட்டமாக விரிந்துள்ள தலையும். ஐந்துதலை நாகத்தின் தலைகளைக் குறிக்கின்றது. செம்மணி - சிவந்த மாணிக்கம். வை நா - பிளந்த நாக்கு. கறையனல் - விஷமாகிய நெருப்பு ; நெருப்பு போன்ற விஷம். கட்செவி கண்ணையே செவி யாக உடையது. பகுவாய் - பெரிய வாய். பணம் விரி துத்திப் பொறி கொள்......பாம்பு அணிபரமர் - விரிந்த படத்தில் நெருங்கிய புள்ளி ள் வெ மையான பற் ள் ஆகிய இவற் றயுடைய பாம்பினை அணிந்த பரமர். வரி 3. வாசனை பரவிய இனிய மாமரச் சோலை களின் செறிவில் மேகங்கள் தவழும்படி வளர்ந்துள்ள இளம்பாக்கு மரங்களின் குலை ள் வரிசையாக அரும்பியுள்ள. மழை - மேகம். திணர் - குலை. மொழுப்பு செறிவு ; அடர்த்தி.

(உ) வரி 1. இந்த டத்தற்கு அரிய பிறவியாகிய கடலில் நீந்துகின்ற அறிவில்லாத என்னுடன் பிறந்த ஐந்து பொறிகளும் பகையே. அஞ்சலென்று......திருச்சிற்றம்பலமே பயிரிட்டுத் திருந்திய வயல் ளில் செழித்த செந்நெற் பயிர்களில் லையா

குழைத்தசெஞ் சாலிக் கடைசியர் களைதரு நீலஞ் செய் வரம்(பு) அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த் திருவளர் திருச் சிற்றம் பலமே. உ

தாயினே ரிரங்குந் தலைவவோ என்றுந் தமியனேன் துணைவவோ என்றும் நாயினேன் இருந்து புலம்பினு லிரங்கி நலம்புரி பரமர்தங் கோயில் வாயினே ரரும்பு மணி முருக் கலர வளரிளஞ் சோலைமாந் தளிர்செந், தீயினே ரரும்பும் பெரும்பற்றப் புலியூர்த் திருவளர் திருச்சிற்றம் பலமே. ௩

துந்துபி குழல்யாழ் மொந்தைவா னியம்பத் தொடர்ந் திரு டியர்கணம் துதிப்ப நந்திகை முழவம் முகிலென முழங்க நடம்புரி பரமர்தங் கோயில், அந்தியின் மறை நான்(கு) ஆரணம் பொதிந்த அரும்பெறல் மறைப்பொருள் மறையோர் சிந்தையி லரும்பும் பெருபற்றப் புலியூர்த் திருவளர் திருச்சிற்றம் பலமே. ௪

முளைத்துள்ள நீலோற்பல மலர்களை பள்ளப்பெண்கள் பிடுங்கி வயல்களின் வரப்புகளில் அரும்பும்படி எறியப்பட்டுள்ள பெரும் பற்றப்புலியூரில் செல்வம் வளர்கின்ற திருச்சிற்றம்பலமே கோயி லாகக் கொண்டு அஞ்சேல் என்று அருள் செய்பவரே யாம்.

(௩) தலைவ ஓ ஓ தலைவனே. தமியனேன் துணைவவோ துணையின்றித் தனிப்பட்ட எனக்குத் துணைவனு யிருப்பவனே. ரி 3. மாதர்களுடைய சிவந்த உதடுகளுக்கு ஒப்பாகக் காணப்படு கின்ற அழகிய முருக்கம்பூ மலர. செந்தீயின் நேர் அரும்பும் - சிவந்த தீயைப் போன்று தோன்றும்.

(௪) துந்துபி குழல் யாழ் மொந்தை - இசை கருவி வகைகள். வான் இயம்ப - ஆ ாயத்தில் ஒலிக்க. நந்தி க முழவம் முகிலென முழங் - நந்திதேவர் கையிலுள்ள மத்தளம் மே த்தின் இடியைப் போல் சப்திக். வரி 3. மறைநான்கு அந்தியின் ஆரணம் பொதிந்த.........அரு 'பும் ான்கு வேதங் ளின் முடி ாகிய உப நிடதங்களின் ஞானபா த்தில் நிரம்பியுள்ள அரிதில் பெற 'கூடிய ே :தப்பொருள் வேதியர் சிந் தயில் வளரும்.

கண்பனி யரும்பக் கைகள்மொட் டித்தென் களை
கணே ஓலமென் றோலிட் டென்பெலாம் உருகும் அன்பர்
தங் கூட்டத் தென்னையும் புணர்ப்பவன் கோயில் பண்பல
தெளிதேன் பாடிநின் றாடப் பனிமலர்ச் சோலைசூழ்
மொழுப்பிற் செண்பகம் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. ௫

நெஞ்சிடர் அகல அகம்புகுந் தொடுக்கும் நிலைமையோ
டிருள்கிழித் தெழுந்த செஞ்சுடர் சுடர்வ போன்றொளி
துளும்பும் விரிசடை அடிகள்தங் கோயில் அஞ்சுடர்ப்
புரிசை ஆழிசூழ் வட்டத் தகம்படி மணிதிரை பரந்த செஞ்
சுட ரரும்பும் பெரும்பற்றப் புலியூர்த் திருவளர் திருச்சிற்
றம்பலமே. ௬

பூத்திர ளுருவஞ் செங்கதிர் விரியாப் புந்தியில் வந்த
மால் விடையோன் தூத்திரள் பளிங்கில் தோன்றிய தோற்
றம் தோன்றநின் றவன்வளர் கோயில் நாத்திரண் மறை
யோர்ந் தோமகுண் டத்து நறுநெயான் மறையவர் வளர்த்த
தீத்திரள் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த் திருவளர்
திருச்சிற்றம் பலமே. ௭

---

(௫) வரி 1. ண்களில் ஆனந்தக் கண்ணீர் பனித்துளிகள் போல் தோன்றக் கைகளைத் தாமரை மொட்டு போல கூப்பி அஞ்சலி செய்து வணங்கி "என்னுடை ய ஆதாரமே . அடை க்கலம்' என்று ஓலமிட்டு. ப பல தெளி தேன் பாடி பல பண்களைத் தேன் வண்டுகள் தேர்ந்து பாடி. மொழுப்பு அடர்ந்துள்ள இடம்.

(௬) செஞ்சுடர்......துளும்பும் - வெப்பத்தையு டைய சூரியன் பிரகாசிப்பது போல ஒளியைப் பரப்பும். அஞ்சுடர்........பரந்த செஞ்சுடர் அரும்பும் - அழகிய ஒளிவீசும் மதிலை வட்ட மாகச் சூழ்ந்துள்ள டல்போன்ற அகழியினுள் படிந்து கிடக்கும் மாணிக்க கூட்டங்கள் சிவந்த ஒளியைப் பரப்பும்.

(௭) வரி 1. செந்தாம ர மலர்த்தொகுதியை ஒத்த திரு உருவம் சிவந்த ஒளியைப் பரப்ப அறிவினுள்ளே எழுந்த, திருமாலாகிய விடை ய யு டையவன். தூத்திரள் பளி கில் - வெண்ணிறம் கொண்ட பளிங்கு குவியல்போ று. நாத் திரள் ம ற ஓர்ந்து வேதியர்கள் நாக்க ிறைல் திரண்ட வேதங் ளை உணர்ந்து ஓதி. நறு நெ(ய்)யால் மணம் பொருந்திய நெய்யினை கொண்டு.

சீர்த்தநின் புவனம் முழுவதும் ஏனைத் திசைகளோ(டு)
அண்டங்க ளனைத்தும், போர்த்ததம் பெருமை சிறுமைபுக்
கொடுங்கும் புணர்ப்புடை அடிகள்தங் கோயில் ஆர்த்துவந்
தமரித் தமரரும் பிறரும் அலைகட லிடுதிரைப் புனிதத்
தீர்த்தநீ ரரும்பும் பெரும்பற்றப் புலியூர்த் திருவளர் திருச்
சிற்றம் பலமே. ௮

பின்னுசெஞ் சடையும் பிறைதவழ் மொழுப்பும் பெரி
யதங் கருணையுங் காட்டி அன்னைதேன் கலந்தின் னமு(து)
உகந்தளித் தாங் கருள்புரி பரமர்தங் கோயில் புன்னைதேன்
சொரியும் பொழிலங் குடைந்து பொறிவரி வண்டினம்
பாடுந் தென்னதேன் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. ௯

உம்பர்நா டிம்பர் விளங்கியாங் கெங்கும் ஒளிவளர் திரு
மணிச் சுடர்கான்(று) எம்பிரான் நடஞ்செய் சூழலங் கெல்
லாம் இருட்பிழம் பறவெறி கோயில் வம்புலாங் கோயில்
கோபுரங் கூடம் வளர்நிலை மாடமா ளிகைகள், செம்பொனு
லரும்பும் பெரும்பற்றப் புலியூர்த் திருவளர் திருச்சிற்றம்
பலமே. ௧௦

---

(௮) சீர்த்த - சிறப்புடைய. போர்த்த - பரவிய. பெருமை பெருமையில். புணர்ப்பு - தந்திரம். அமரித்து - பொருந்தி. அமரரும்.........தீர்த்தநீர் அரும்பு தேவர்களும் பிறரும் மூழ்கும்படியான கடல் அலைகளைப்போன்று அலைகளையுடைய பரிசுத்தமான தீர்த்தநீர் பெருகியிருக்கும்.

(௯) பின்னு பின்னிக்கொண்டிருக்கும். மொழுப்பு அடர்ந்த சடைமுடி. பொறிவரி வண்டினம் - புள்ளிகளையும், கோடுகளையும் உடைய வண்டுக் கூட்டங்கள். தென்னதேன் அரும்பும் அழகிய தேன் வண்டுகள் தோன்றும்.

(௧௦) இம்பர் இவ்வுலகில். திருமணிச் சுடர்கான்று - அழகிய மாணிக்கங்களின் ஒளியைப் போன்ற ஒளியைக் கக்கி. சூழல் - இடம். இருட்பிழம்பு அற எறி இருட்கூட்டம் முழுதும் ஒழியச் செய்கின்ற. வம்பு உலாம் - வாசனை வீசுகின்ற.

இருந்திரைத் தரளப் பரவைசூ ழகலத் தெண்ணிலங் கண்ணில்புன் மாக்கள் திருந்துயிர்ப் பருவத் தறிவுறு கருவூரத் துறைவளர் தீந்தமிழ் மாலை பொருந்தருங் கருணைப் பரமர்தங் கோயிற் பொழிலகங் குடைந்துவண் டுறங்கச் செருந்திநின் றரும்பும் பெரும்பற்றப் புலியூர்த் திருவளர் திருச்சிற்றம் பலமே. கக

திருச்சிற்றம்பலம்

உ. திருக்களந்தையாதித்தேச்சரம்

பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

கலைகள்தம் பொருளும் அறிவுமா யென்னைக் கற்பினிற் பெற்றெடுத் தெனக்கே முலைகள்தந் தருளுந் தாயினும் நல்ல முக்கண்ணன் உறைவிடம் போலும் மலைகுடைந் தனைய நெடுநிலை மாட மருங்கெலாம் மறையவர் முறையோத் தலைகடல் முழங்கும் அந்தணீர்க் களந்தை அணிதிக ழாதித்தேச்சரமே.

(க) வரி 1. 2. பெரிய அலைகளால் முத்துக்களைக் கரைகளிற் சேர்க்கும் கடல் சூழ்ந்த உலகத்து அழகிய (அறிவாகிய) கண் இல்லாத எண்ணில்லாத அற்பமாந்தர் உயிர் திருந்தும்படியான தக் பருவத்தில் அறிவிலே சென்று பற்றும் தன்மை வாய்ந்த கருவூர்த் தேவர் இயற்றிய சைவத்துறையை வளரச் செய்யும் (அல்லது ருவூர் என்னும் இடத்தில் வளர்ந்த) இனிமை மிக்க தமிழ்ப் பாமாலை. பொருந்து அரும் கருணைப் பரமர் அருங்கருணை பொருந்திய மேலானவர்.

( ) கலை ள் தம் பொருளும் அறிவுமாய் - நூல்களால் உணர்த்தப்படும் பொருளும் அவற்றால் பெறப்படும் அறிவுமாகி. மு ற ஒத்து......ஆதித்தேச்சரமே - வேதங் ளை முறையாக ஓதுவதானது டலின் அலை ளைப் போல் சப்திக்கும்படியான அழகிய குளிர்ச்சி பொருந்திய நீர் வளப்பமுள்ள திரு களந்தை என்னும் தலத்தி லுள்ள ஆதித்தேச்சரம் என்னும் திரு கோயி ாகும்.போலும் அ ச.

சந்தன களபம் துதைந்த ன்மேனித் , வளவெண்
பொடி முழுதாடுஞ் செந்தழ லுருவிற் பொலிந்து நோக்
குடைய திருநுத லவர்க்கி ம் போலும் இந்தன விலங்கல்
எறிபுனந் தீப்பட் டெரிவதொத் தெழுநிலை மாடம் அந்தண
ரழலோம் பலைபுனற்களந்தை அணிதிக ழாதித்தேச் சரமே.

ரியரே இடம்தான் செய்யரே யொருபாற் கழுத்தி
லோர் தனிவடஞ் சேர்த்தி முரிவரே முனிவர் தம்மொடால்
நிழற்கீழ் முறைதெரிந் தோருட ம் பினராம் இருவரே முக்
கண் நாற்பெருந் தடந்தோள் இறைவரே மறைகளுந் தேட
அரியரே யாகில் அவரிடங் களந்தை அணிதிக ழாதித்தேச்
சரமே. ௩

பழையராந் தொண்டர்க் கெளியரே மிண்டர்க் கரி
யரே பாவியேன் செய்யும் பிழையெலாம் பொறுத்தென்
பிணிபொறுத் தருளாப் பிச்சரே நச்சரா மிளிருங் குழைய
ராய் வந்தென் குடிமுழு தாளு குழகரே பொழுகுநீர்க்
ங்கை அழகரே யாகில் அவரிடங் களந்தை அணிதிக
ழாதித்தேச் சரமே. ௪

---

(௨) களபம் - கலவைச்சாந்து. தவள வெண்பொடி - கர்ப்பூரம் போன்ற வெண்மையான திருநீறு. நோக்கு க . இந்தன விலங்கல் எறி புனம் தீப்பட்டு எரிவது ஒத்து......அழல் ஓம்பு விறகு மலைபோன்ற வெட்டப்ப ட காடு தீப் பற்றி எரிகின்ற தோற்றத்தைப் போன்று எழு அடுக்குள்ள ம ளிகைகளில் வேதியர் ள் ஓமாக்கினியை வளர்க்கின்ற. இந்தனம் - விறகு. விலங்கல் - மலை. புனம் - ாடு.

(௩) இடம் தா ரியரே உமாதே யார் இருப்பதால் இடப ் த்தில் ருமைநிறம் பொருந்தியவரே. ஒரு பால் செய்யரே ஒரு பக்கம் (வலப்பக் ம்) செந்நிறம் உடையவரே. வரி 2. முனிவர் தம்மொடு (கல்) ஆல் நிழற்கீழ் முறைதெரிந்து (மு றமையினை அறியச் செய்து, முரிவரே (தோற்றுபவரே.) ஆகில் என்ப தக் கரியரே செய்யரே முதலிய ற்றோடு கூட்டு .

(௪) மிண்டர் - துஷ்டர். பிச்சர் பித்தர். ச்சு அரா மிளிரும் கு ழயராய் நஞ்சையு டய பாம்பை ஒளிவீசும் கு ழய அணி தவராய். குழகர் - இளையர்.

பவளமே மகுடம் பவளமே திருவாய் பவளமே திருவுடம் பதனில் தவளமே களபம் தவளமே புரிநூல் தவளமே முறுவல் ஆடரவந் துவளுமே கலையுந் துகிலுமே யொருபால் துடியிடை யிடமருங் கொருத்தி அவளுமே யாகில் அவரிடங் களந்தை அணிதிக ழாதித் தேச்சரமே. ௫

நீலமே கண்டம் பவளமே திருவாய் நித்திலம் நிரைத்திலங் கினவே போலுமே முறுவல் நிறையஆ னந்தம் பொழியுமே திருமுக மொருவர் கோலமே யச்சோ அழகிதே யென்று குழைவரே கண்டவர் உண்டதாலமே யாகில் அவரிடங் களந்தை அணிதிக ழாதித் தேச்சரமே. ௬

திக்கடா நினைந்து நெஞ்சிடிந் துருகுந் திறத்தவர் புறத்திருந் தலச மக்கடா அனைய என்னையாள் விரும்பி மற்றொரு பிறவியிற் பிறந்து பொய்க்கடா வண்ணங் காத்தெனக் கருளே புரியவும் வல்லரே யெல்லே யக்கடா வாகி லவரிடங் களந்தை அணிதிக ழாதித் தேச்சரமே. ௭

---

(௫) பவளமே மகுடம் - சடைமுடி பவளம் போன்ற செந்நிறமுடையது. தவளமே வெண்ணிறமுடையது. களபம் - கலவைச் சாந்தாகப் பூசப்பட்ட திருநீறு. புரிநூல் முறுக்கோடு கூடிய பூணூல். ஆடு அரவம் துவளுமே ஆடுகின்ற பாம்பு தொங்கிக் கொண்டிருக்குமே. கலையும்......அவளுமே ஆகில் - மேகலையும் சேலையும் உடுக்கை போன்ற இடையில் தரித்த ஒரு பெண் இடப் பக்கத்தில் இருப்பாளாகில்.

(௬) நித்திலம் - முத்து. நிரைத்து இலங்கினவே - வரிசையாய் அமைத்துப் பிரகாசிப்பன. முறுவல் - பற்கள். அச்சோ - அதிசயச்சொல். ஆகில் என்பதை நீலமே, பவளமே, போலுமே, பொழியுமே, குழைவரே, ஆலமே என்பனவற்றோடு கூட்டுக.

(௭) திக்கடா (திக்கு+அடு+ஆ) எனப்பிரித்து, அடு திக்கு ஆ என மாற்றி சாரத்தக்க ஆதரவு நீயே ஆவாய் என - என்று பொருள் உரைக்க. இடிந்து நெகிழ்ந்து. அலச - வருந்த. மைக்கடா - எருமைக்கடா. பொய்க்கு அடா வண்ணம் பொய்ந்நெறியிற் சேராதபடி. எல்லே அக்கடாவாகில் - இருள் அங்கே நெருங்காமல் இருக்குமானால்.

மெய்யரே மெய்யர்க் கிடுதிரு வான விளக்கரே யெழுதுகோல் வளையாள் மையரே வையம் பலிதிரிந் துறையும் மயானரே உளங்கலந் திருந்தும் பொய்யரே பொய்யர்க் கடுத்தவான் பளிங்கின் பொருள்வழி யிருள்கிழித் தெழுந்த, ஐயரே யாகி லவரிடங் களந்தை யணிதிக ழாதித்தேச் சரமே அ

குமுதமே திருவாய் குவளையே களமுங் குழையமர்ந்த இருசெவி யொருபால் விமலமே கலையு முடையரே சடைமேல் மிளிருமே பொறிவரி நாகம் கமலமே வதனம் கமலமே நயனம் கனகமே திருவடி நிலைநீர் அமலமே யாகி லவரிடங் களந்தை அணிதிக ழாதித்தேச் சரமே.

(அ) மெய்யர்க்கு மெய்யரே - மெய்யடியவர்களுக்கு உண்மைப் பொருளாயிருப்பவரே. மெய்யர்க்கு இடுதிரு வான விளக்கரே உண்மையடியவர்க்கு வைப்பு நிதிபோன்ற சோதி வடிவினரே. மெய்யர்க்கு என்பதை மெய்யரே என்பதோடும் விளக்கரே என்பதோடும் கூட்டுக. எழுதுகோல் வளையாள் மையரே எழுதிய சித்திரம் போன்று அழகிய வளையல்கள் அணிந்த மாதேவியாரிடத்து மையலை (காதலை) உடையவரே. அல்லது உமாதேவியாரை ஒரு பக்கத்தில் உடைமையால் ருநிறம் வாய்ந்தவரே. பொய்யர்க்குப் பொய்யரே - மெய்யுணர்வு இல்லாதவர்களுக்கு வெளிப்படாது மறைந்திருப்பவரே. அடுத்த வான் பளிங்கின் பொருள்வழி-பக்கத்திலுள்ள மேலான பளிங்குக்கல் ஒளியைத் தன்வழிச் செலுத்துமாறு போல. இருள் கிழித்து எழுந்த ஐயரே - (அஞ்ஞான) இருளைப் போக்கி எழுந்தருளி வந்த ஆசாரியரே. ஐயன் - ஆசாரியன்; குரு.

(௯) குமுதமே திருவாய் - அழகிய வாய் செவ்வல்லி மலர் நிறமுடையது. குவளையே களமும் கண்டம் நீலோற்பல நிறமுடையது. ஒரு பால் விமல மேகலையும் ஒரு பக்கத்தில் அழகிய மேலாபரணமும். பொறிவரி நாகம் புள்ளிகளையும் கோடுகளையும் உடைய பாம்பு. கனகமே திரு வடி நிலை, நீர் அமலமேயாகில் திருவடியாகிய உயிர்கள் சென்று அடையுமிடம் பொன்னிறமுடையது; அதன் தன்மை மலம் இல்லாததாய் இருக்குமானால். இறைவன் அநாதியாகவே மலமில்லாதவன்.

நீரணங் கசும்பு கழனிசூழ் களந்தை நிறைபுகழ் ஆதித் தேச் சரத்து, நாரணன் பரவும் திருவடி நிலைமேல் நலம்மலி கலைபயில் கருவூர் ஆரணம் மொழிந்த பவளவாய் சுரந்த அமுதமூ றியதமிழ் மாலை ஏரணங் கிருநான் கிரண்டிவை வல்லோர் இருள்கிழித் தெழுந்தசிந் தையரே. க0

திருச்சிற்றம்பலம்

௩ திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலம்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

தளிரொளி மணிப்பூம் பதஞ்சிலம் பலம்பச் சடை விரித்(து)அலையெறி கங்கைத் தெளிரொளி மணிநீர்த் திவலை முத் தரும்பித் திருமுகம் மலர்ந்துசொட் டட்டக் கிளரொளி மணிவண் டறைபொழிற் பழனங் கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர் வளரொளி மணியம் பலத்துள்நின் றாடும் மைந்த னென் மனங்கலந் தானே. க

(க0) நீர்அணங்கு அ ம்பு - நீர் அழகாக இடையறாது பாய் கின்ற. நலம்மலி.........தமிழ்மாலை மிக்க நன் ம யத் தாத்தக்க நூல் ளைப் பயின்ற கருவூர்த்தேவருடைய வேதங் ளைச் சொல்லும் பவளம்போ ற வாயினிடத்துச் சுரந்த பேரின்பத்தைத் தரும் தமிழ்ப்பாடல். ஏர் அணங்கு அழகு பொருந்திய. இருநான்கு இரண்டு இ வ பத்துப் பாடல்களாகிய இவற்றை. இருள்கிழித்து- அஞ்ஞா த் தப் போக்கி.

இப்பதி ம் சிவபெருமானிடத்துக் காதல்கொண்ட தலைவி யின் மொழி ளா அ மந்துள்ளது.

( ) வரி 1 2. ஒளிவிட்டுப் பிரகாசி கும் மாணிக்கம் போன்ற அழகிய பாதங் ளில் சிலம்பு ள் ஒலிக்க, விரிந்த சடையின்மேல் அலை மோதும் கா நதியின் ஒளிவிளங்கும் அழகிய நீர்த்திவலை முத்து ள்போல் அரும்பித் திருமுகத்தினின்றும் சொட்டுச் சொட் டா விழ. ரி 3. ஒளிவீசும் இரத்தினம்போன்ற வ டுகள் சோலை களிலும் வயல்களிலும் தங் ள் ரீ கார ஒலியினால் மிகுந்த ஆரவாரத் ச் செய்யும் கீழ் கோட்டூரில். செழு - மிகுந்த.

துண்டவெண் பிறையும் படர்சடை மொழுப்புஞ் சுழியமுஞ் சூலமும் நீல கண்டமுங் குழையும் பவளவா யிதழுங் கண்ணுதல் திலகமுங் காட்டிக் கெண்டையுங் கயலும் உகளுநீர்ப் பழனங் கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர் வண்டறை மணியம் பலத்துள்நின் றாடும் மைந்தனென் மனங்கலந் தானே. உ

திருநுதல் விழியும் பவளவாய் இதழுந் திலகமும் உடையவன் சடைமேற் புரிதரு மலரின் தாதுநின் றூதப் போய்வருந் தும்பிகாள் இங்கே கிரிதவழ் முகிலின் கீழ்த்தவழ் மாடங் கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர் வருதிறல் மணியம் பலவனைக் கண்டென் மனத்தையுங் கொண்டுபோதுமினே. ந

தெள்ளுநீ றவன்நீ றென்னுடல் விரும்புஞ் செவியவன் அறிவுநூல் கேட்கும் மெள்ளவே அவன்பேர் விளம்பும் வாய் கண்கள் விமானமே நோக்கிவெவ் வுயிர்க்குங் கிள்ளைபூம் பொதும்பிற் கொஞ்சிமாம் பொழிற்கே கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர் வள்ளலே மணியம் பலத்துள்நின் றாடும் மைந்தனே யென்னுமென் மனனே. ச

(உ) சடைமொழுப்பு - சடைமுடி. சுழியம்-உச்சிக்கொண்டை. உகளும் - குதிக்கின்ற. வண்டறை - வண்டுகள் ஒலிக்கின்ற.

(ந) புரிதரு மலர் விருப்பத்தைத் தரும் பூக்கள். மலரின் தாது நின்றூத - பூக்களின் மகரந்தப் பொடிகள் மெல்லிதாக விழும்படி. கொண்டு போதுமினே - கொண்டுபோய் அவனிடம் சேர்ப்பியுங்கள்.

(ச) தெள்ளும் நீறவன் மனத்தைத் தெளியச் செய்கின்ற திருநீற்றைத் தரித்தவன். அறிவு நூல் - சிவஞானத் தப்பற்றித் தெரிவிக்கும் நூல். வெவ்வுயிர்க்கும் - பெருமூச்சுவிடும். கிள்ளை பூம்பொதும்பிற் கொஞ்சி - கிளிகள் அழகிய மரச்செறிவுகளில் மழலைமொழி பேசி. மைந்தன் வலிமையுள்ளவன். மனன் மனம்.

தோழியாம் செய்த தொழிலென் எம்பெருமான் துணை மலர்ச் சேவடி காண்பான் ஊழிதோ றூழி யுணர்ந்துளங் கசிந்து நெக்குநைந் துளங்கரைந் துருகுங் கேழலும் புள்ளு மாகிநின் றிருவர் கெழுவுகம் பலசெய்கீழ்க் கோட்டூர் வாழிய மணியம் பலவனைக் காண்பான் மயங்கவும் மாலொழி யோமே. ரு

என்செய்கோம் தோழி தோழிநீ துணையாய் இரவு போம் பகல்வரு மாகில் அஞ்சலோ வென்னான் ஆழியுந் திரையும் அலமரு மாறுகண் டயர்வன் கிஞ்சுக மணிவா யரிவையர் தெருவிற் கெழுவுகம் பலசெய்கீழ்க் கோட்டூர் மஞ்சணி மணியம் பலவனோ வென்று மயங்குவன் மாலையம் பொழுதே. சு

தழைதவழ் மொழுப்புந் தவளநீற் றொளியுஞ் சங்கமுஞ் சகடையின் முழக்குங் குழைதவழ் செவியுங் குளிர் சடைத் தெண்டுங் குண்டையுங் குழாங்கொடு தோன்றுங் கிழைதவழ் கனகம் பொழியுநீர்ப் பழனங் கெழுவுகம் பல

(ரு) தோழி - தோழியே. துணைமலர்ச் சேவடி - அழகிய இரண்டு பாதங்கள். வரி 2. அநேக ஊழிக்காலங்கள் நினைந்து மனம் இளகி நெகிழ்ந்து நைந்து உருகும் தன்மை வாய்ந்து. வரி 3. பன்றியாகவும் அன்னப் பறவையாகவும் திருமால் பிரமன் ஆகிய இருவரும் எம்பெருமான் துணைமலர்ச் சேவடிகளைக் காணும் பொருட்டு மிக்க ஆரவாரம் செய்கின்ற. வாழிய அ. ச. காண்பான் மயங்கவும் - காணும்பொருட்டு அறிவு கலங்கியும். மால் காதல்.

(சு) அஞ்சலோ - பயப்படாதே. ஆழி - கடல். திரை - அலை. அலமருமாறு கண்டு கலக்கும்படிச் செய்வதைக் கண்டு. அயர்வன் தளர்கின்றேன். கிஞ்சு மணிவாய் முருக்கம் பூப்போன்ற செந்நிறம் பொருந்திய அழகிய வாய். மஞ்சு - அழகு.

(எ) தழை தவழ் மொழுப்பு - வில்வம் அணிந்துள்ள திருமுடி. தவளம் - வெண்மை. சகடை - ஒரு வாத்தியம். சடைத்தெண்டு சடைக்கற்றை. குண்டை - எருது. குழாம் கொடு தோன்றும் - கூட்டமாகக் காணப்படும். கிழை தவழ் ஒளிவீசும்.

செய்கிழ்க் கோட்டூர் மழைதவழ் மணியம் பலத்துள்நின்
றாடும் மைந்தர்தம் வாழ்வுபோன் றனவே ௭

தன்னக மழலைச் சிலம்பொடு சதங்கை தமருகம் திருவடி திருநீறு இன்னகை மழலை கங்கை கோங்கிதழி இளம்பிறை குழைவளர் இளமான், கின்னரம் முழவம் மழலையாழ் விணை கெழுவுகம் பலைசெய்கிழ்க் கோட்டூர் மன்னவன் மணியம் பலத்துள் நின்றாடும் மைந்தனென் மனத்துள்வைத் தனனே. ௮

யாதுநீ நினைவ தெவரையா முடைய தெவர்களும் யாவையுந் தானாய்ப் பாதுகை மழலைச் சிலம்பொடு புகுந் தென் பனிமலர்க் கண்ணுள்நின் றகலான் கேதகை நிழலைக் குருகென மருவிக் கெண்டைகள் வெருவுகீழ்க் கோட்டூர், மாதவன் மணியம் பலத்துள்நின் றாடும் மைந்தனென் மனம் புகுந் தானே ௯

---

(௭) மழை - மேகம். மைந்தர்தம் வாழ்வு போன்றன - வலிமையுள்ள சிவபெருமானுக்குச் செல்வம் போன்றுள்ளன. மைந்தர் மைந்து (வலிமை) உடையவர்.

(௮) மழலைச் சிலம்பு - மழலை மொழி போன்று ஒலிக்கும் சிலம்பு. தமருகம் - உடுக்கை. இன் நகை மழலை கங்கை - இனிய புன்சிரிப்பும் மழலை மொழியும் உடைய கங்கையும். கோங்கு ஒரு மரம்; அதன் மலர். இதழி - கொன்றை. உ. நடை: கின்னரம் முழவம்......மைந்தன், தன்ன மழலை......வளர் இளமான் (ஆகிய இவற்றை) என் மனத்துள் வைத்தனன்.

(௯) வரி 1. மனமே. நீ நினைவதற்கு (அவனைத் தவிர) வேறு என்ன இருக்கின்றது. எவரை நாம் துணையாக உடையோம். எல்லா உயிர்களிலும், மற்றப் பொருள்களிலும் நிறைந்துள்ளவன். பாதுகை மிதியடி. கேதகை - தாழை. வரி 3. தாழையின் நிழலைக் கெண்டை மீன்கள் அணுகி அதனைக் குருகென்று நினைத்துப் பயப்பட்டு ஓடும். குருகு - நாரை. மாதவன் - பெருமை பொருந்திய தவக்கோலம் கொண்டவன்.

அந்திபோ லுருவும் அந்தியிற் பிறைசே ரழகிய சடை
யும்வெண் ணீறுஞ் சிந்தையால் நினையிற் சிந்தையுங்காணேன்
செய்வதென் தெளிபுனல் அலங்கற் கெந்தியா வுகளுங்
கெண்டை புண் டரீகங் கிழிக்குந்தண் பணைசெய்கீழ்க்
கோட்டூர் வந்தநாண் மணியம் பலத்துள் நின்றாடும் மைந்
தனை யறியுமென் மனமே. ௧௦

கித்திநின் றாடும் அரிவையர் தெருவிற் கெழுவுகம் பலை
செய்கீழ்க் கோட்டூர் மத்தனை மணியம் பலத்துள் நின்றா
டும் மைந்தனை ஆரணம் பிதற்றும் பித்தனேன் மொழிந்த
மணிநெடு மாலை பெரியவர்க் ககலிரு விசும்பில் முத்தியா
மென்றே யுலகரேத் துவரேல் முகமலர்ந் தெதிர்கொளுந்
திருவே. ௧௧

திருச்சிற்றம்பலம்

(௧௦) வரி 1. மாலைக்காலத்துச் செவ்வானம் போன்ற திருவுருவமும், பிறையையுடைய செவ்வானம் போன்ற அழகிய சடையும். சிந்தையால் நினையிற் சிந்தையும் காணேன் - மனத்தினால் நினைந்து பார்க்கும்போது நான் நினைக்கின்றேன் என்ற உணர்ச்சியும் இழந்து அவன் வயமாகின்றேன். தெளிபுனல் அலங்கல் கெந்தியா உகளும் - தெளிந்த நீரில் ஒளிவிட்டுக்கொண்டு நெளிந்து சென்று துள்ளிக் குதிக்கும். தண்பணைசெய் - குளிர்ச்சியான வயல் ள் சூழ்ந்த.

(௧) கித்தி மகளிர் விளையாட்டு. : கெழுவு கம்பலை செய் - நிறைந்த ஆரவாரம் செய்கின்ற. மத்தன் - ஊமத்த மலரை அணிந்தவன். மணிநெடு மாலை-அழகிய பெரிய பாமாலை. பெரியவர்க்கு...... திருவே - ஓதுகின்ற பெருமையுடையோர்க்கு அ ன்ற பெரிய தேவலோ த்தில் முத்தி சித்திக்குமென்று கருதி உலகத்தவர் (இப்பாமாலையினால்) துதிப்பாராயின், இலக்குமி முகமலர்ச்சியுடன் எதிர்கொண்டு தேவலோ த்தில் சேர்ப்பிப்பாள்.

௪. திருமுகத்தலை

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

புவனநா யகனே அகவுயிர்க் கமுதே பூரணா ஆரணம் பொழியும் பவளவாய் மணியே பணிசெய்வார்க் கிரங்கும் பசுபதீ பன்னகா பரணா அவனிஞா யிறுபோன் றருள்புரிந் தடியேன் அகத்திலும் முகத்தலை மூதூர்த் தவளமா மணிப்பூங் கோயிலும் அமர்ந்தாய் தனியனேன் தனிமை நீங்குதற் கே. ௧

புழுங்குதீ வினையேன் வினைகெடப் புகுந்து புணர்பொரு ளுணர்வுநூல் வகையால் வழங்குதேன் பொழியும் பவளவாய் முக்கண் வளரொளி மணிநெடுங் குன்றே முழங்குதீம் புனல்பாய்ந் திளவரால் உகளும் முகத்தலை அகத்தமர்ந் தடியேன் விழுங்குதீங் கனியாய் இனிய ஆனந்த வெள்ளமா யுள்ளமா யினையே. ௨

---

(௧) அக உயிர்க்கு அமுதே - உயிரினுக்குள் அமுதம் போன்று இன்பம் தருபவனே; அல்லது அகவு உயிர்க்கு அமுதே - (உன்னை அன்பினால்) அழைக்கும் உயிர்களுக்கு அமுதம் போன்று இன்பம் தருபவனே. ஆரணம் - வேதம். பன்னக ஆபரணா பாம்புகளை ஆபரணமாகத் தரித்தவனே. தவளம் - வெண்ணிறம்.

(௨) புழுங்கு தீவினையேன் - தீவினையினால் வரும் துன்பமுடையேன். புகுந்து - என் மனத்தினுட் புகுந்து. புணர் பொருள் அடையவேண்டிய மெய்ப்பொருளை. உணர்வு நூல் - ஞான நூல். வழங்குதேன் பொழியும் பவளவாய் - மழை பொழிவதுபோல் பேரின்ப உணர்ச்சியை மிகுதியும் விளைவிக்கின்ற பவளம் போன்று சிவந்த வாயினையும். முகத்தலை அகத்து அமர்ந்து - திருமுகத்தலை என்னும் தலத்தினில் தங்கி வீற்றிருந்து. உள்ளம் ஆயினை என் மனம் முழுமையும் நிறைந்து விட்டனை.

கன்னெகா உள்ளக் கள்வனேன் நின்கட் கசிவிலேன் கண்ணில்நீர் சொரியேன், முன்னகா ஒழியேன் ஆயினுஞ் செழுநீர் முகத்தலை அகத்தமர்ந் துறையும், பன்னகா பரணா பவளவாய் மணியே பாவியேன் ஆவியுள் புகுந்த தென்னகா ரணம்(ம்)நீ யேழைநா யடியேற் கெளிமையோ பெருமை யா வதுவே. ௮

கேடிலா மெய்ந்நூல் கெழுமியுஞ் செழுநீர்க் கிடையன் றுடை யவென் நெஞ்சிற் பாடிலா மணியே மணியுமிழ்ந் தொளிரும் பரமனே பன்னகா பரணா, மேடெலாஞ் செந்நெற் பசுங்கதிர் விளைந்து மிகத்திகழ் முகத்தலை மூதூர், நீடினா யெனினும் உள்புகுந்(து) அடியேன் நெஞ்செலாம் நிறைந்துநின் றாயே. ௯

அக்கனா வனைய செல்வமே சிந்தித் தைவரோ டென் றென்றும் விளைந்த, இக்கலாம் முழுதும் ஒழியவந் துள்புக் கென்னையா ளாண்ட நாயகனே, முக்கணா யகனே முழுதுல கிறைஞ்சு முகத்தலை யகத்தமர்ந்(து) அடியேன் பக்கல்ஆனந் தம் இடையறா வண்ணம் பண்ணினாய்பவளவாய்மொழிந்தே.

---

(௮) கல்நெகா உள்ளம் - கல்லைப்போன்று உருகாத மனம். முன்நகா ஒழியேன் - உன் முன்னே சிரித்தலை நீங்கேன்; விளையாட்டுப் புத்தியுடையேன். அமர்ந்து உறையும் - விரும்பிக் கோயில் கொண்டிருக்கும்.

(௯) கேடு இலா மெய்ந்நூல் - கேட்டை இல்லையாகச் செய்யும் மெய்யுணர்வைக் கொடுக்கும் நூல். கெழுமியும் - பழகியும். செழுநீர்க் கிடை அன்னார் உடைய என் நெஞ்சில் நீரிடத்துக் கிடந்தும் நீர் ஊறாத தக்கையைப் போன்று (மெய்ந்நூற் கருத்துகள் ஒன்றும் பதியாத) என் மனதில் (அமர்ந்த). கிடை - தக்கை. பாடு - அழிவு. மேடு - மேட்டு நிலங்கள். நீடினாய் நெடு காலமாக உறைகின்றாய்.

(௰) வரி 1. கனவைப் போன்று நிலையற்ற அப்பொருட் செல்வத்தையே ஈட்டுவதிலும் காத்தலிலும் மனதைச் செலுத்திய ஐம்புலன்களுக்கும் எனக்கும் நேரிட்ட இக் கலகம் முழுவதும் ஒழியும்படி. நீ என்னை ஆட்கொள்ளுமுன் ஐம்புலன்களுக்கும் எனக்கும் போராட்டம் நிகழ்ந்துகொண்டே இருந்தது. ஆட்கொண்ட பிறகு அப்போராட்டம் முற்றிலும் ஒழிந்தது. இடையறா வண்ணம் நடுவில் விட்டு நீங்காதபடி. பவளவாய் மொழிந்து - பவளம்போன்று சிவந்த வாயினால் உபதேசித்தருளி.

புனல்பட உருகி மண்டழல் வெதும்பிப் பூம்புனல் பொதிந்துயி ரளிக்கும் வினைபடு நிறைபோல் நிறைந்து வேதகத்தென் மனம்நெக மகிழ்ந்தபே ரொளியே முனைபடு மதில்மூன் றெரித்த நாயகனே முகத்தலை யகத்தமர்ந் தடியேன், வினைபடும் உடல் புகுந்துநின் றமையால் விழுமிய விமானமா யினதே. ௬

விரியுநீர் ஆலக் கருமையும் சாந்தின் வெண்மையுஞ் செந்நிறத் தொளியும் கரியும் நீறுடுங் கன லுமொத் தொளிரு கழுத்திலோர் தனிவடங் கட்டி முரியுமா றெல்லா முரிந் தழகியையாய் முகத்தலை யகத்தமர்ந் தாயைப் பிரியுமா றுளதே பேய்களோஞ் செய்த பிழைபொறுத் தாண்ட பேரொளியே. ௭

என்னையுன் பாத பங்கயம் பணிவித் தென்பெலாம் உருகநீ யெளிவந் தென்னையென் பார்வைத் தெங்குமெஞ் ஞான்றும் ஒழிவற நிறைந்தவொண் சுடரே முனைவனேயென் பாசம் முழுவதும் அகல முகத்தலை யகத்தமர்ந் தெனக்கே கன்னலும் பாலு தேனும்ஆர் அமுதங் கனியுமாய் இனியையாயினையே. ௮

---

(௬) வரி 1. 2, (சுடுவதற்குமுன்) நீர்பட்ட மாத்திரத்தில் கரைந்து போகும் தன்மை யுடையதும், (மண்டு+அழல்) மிகுந்த தீயிடையிட்டு சுட்ட பொழுது அழகிய நீரைத் தன்னிடத்து வைத்துக்கொண்டு உயிரைக் காப்பாற்றும் தன்மை வாய்ந்ததுமான, வேலைப்பாடமைந்த நீர்ச்சால் போன்று, மாறுபாடு அடைந்த என் மனத்துள் நிறைந்து மனம் உருக, மகிழ்ந்து அருள் புரிந்த பேரொளி வடிவினனே. நிறை - நீர்ச்சால். முனைபடும் - பகைத்து வந்த. வினைபடும் உடல் வினையினால் எடுத்த உடம்பு.

(௭) விரியும்நீர் ஆலம் கடலினிடத்து எழுந்த ஆலகாலவிஷம். சாந்து - கலவைச் சாந்துபோல அணிந்த வெண்ணீறு. வரி 2. கரியையும் நீறுபூத்த நெருப்பையும் ஒத்துப் பிரகாசிக்கும் கழுத்தில். விடம் தங்கிய இடத்திற்குக் கரி உவமை. முரியுமாறெல்லாம் முரிந்து - தோன்றும் வகையெல்லாம் தோன்றி நின்று. பிரியும் ஆறு உளதே - பிரியும் வழி உண்டோ? இல்லை.

(௮) பங்கயம் - தாமரை. கன்னல் சர்க்கரை கருப்பஞ்சாறு.

அம்பரா அனலா அனிலமே புவிநீ அம்புவே இந்
துவே இரவி உம்பரால் ஒன்றும் அறிவொணா அணுவாய்
ஒழிவற நிறைந்தஒண் சுடரே மொய்ம்பராய் நலஞ்
சொல் மூதறி வாளர் முத்தலை யகத்தமர்ந் தெனக்கே
யெம்பிரா னாகி ஆண்டநீ மீண்டே எந்தையுந் தாயுமா
யினையே. கூ

மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய் முகத்தலை யகத்
தமர்ந் தினிய பாலுமாய் அமுதாம் பன்னகா பரணன் பனி
மலர்த் திருவடி இணைமேல் ஆலையம் பாகின் அனையசொற்
கருவூர் அமுதுறழ் தீந்தமிழ்மாலை சீலமாப் பாடும் அடியவ
ரெல்லாஞ் சிவபதங் குறுகிநின் றாரே. க0

திருச்சிற்றம்பலம்

ரு திரைலோக்கியசுந்தரம்*

பண் . காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

நீரோங்கி வளர்கமலம் நீர்பொருந்தாத் தன்மையன்றே
யாரோங்கி முகமலர்ந்தா கருவினையேன் திறம்மறந்தின்

(கூ) அம்பரா - ஆகாயமாயுள்ளவனே. அனிலம் - காற்று. அம்பு - நீர். அணு - உயிர். சிவபெருமானுடைய அஷ்ட மூர்த்தங்கள். மொய்ம்பராய் - மன உறுதி உடையவராய். நலம்சொல் மூதறி வாளர் - நன்மையைச் செய்யும் சொற்களைப் போதிக்கின்ற பேரறி வுடையோர் (வாழ்கின்ற). எம்பிரான் எமக்குத் தலைவன்.

(க0) ஆலை அம்பாகு - கரும்பினின்றும் உண்டான இனிய பாற் கண்டு. உறழ் - ஒத்த. சீலமாப்பாடும் அழகாகப் பாடுகின்ற

*இத்தலம் சோழ நாட்டில் ஆடுதுறை என்னும் இருப்புப் பாதை நிலயத்திற்கு அருகில் உள்ளது. அதற்கு திரைலோக்கி என் னும் பெயர் வழங்குகின்றது.

(க) சீர்ஓங்கும் பொழில் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே. அருவினையேன் திறம் மறந்து இன்று ஊர் ஓங்கும் பழி பாராது

றாரோங்கும் பழிபாரா துன்பாலே விழுந்தொழிந்தேன்
சீரோங்கும் பொழில்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

கையாத மனத்தினை கைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுத லின்றுவரை
கையாரத் தொழுதருவி ண்ணுரச் சொரிந்தாலுஞ்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

அம்பளிங்கு பகலோன்பா லடைப்பற்று யிவள்மனத்தின்
முன்பளிந்த காதலும்நின் முகந்தோன்ற விளங்கிற்றால்
வம்பளிந்த கனியேயென் மருந்தேநல் வளர்முக்கட்
செம்பளிங்கே பொழிற்கோடைத் தி ரலோக்கியசுந்தரனே

ஆரோங்கி மு ம் மலர்ந்தாங்கு உன்பாலே விழுந்து ஒழிந்தேன். நீர் ஓங்கி வளர்கமலம் நீர் பொருந்தாத் தன்மையன்றே - உ ந ட.
பொழிப்புரை : சிறப்புற்று ஓங்கும் பொழில்களால் சூழப்ப ட கோடை என்னும் தலத்தில் திரைலோக்கிய சுந்தரம் ன்னும் திருக்கோயிலில் வீற்றிருக்கும் சிவபெருமானே . போக்குதற் கரிய தீவினையினேன் என்னுடைய மேன் மயை மறந்து, இன்று ஊரா ரால் பழிக்கப்படுதலையும் கவனியாமல், ஒளி மிகுந்து மு ம் மலர்ந்து, உன்னிடத்தே சரணடைந்தேன். அப்படியிருந் தும் நீரில் செழித் து வளர்கின்ற தாமரையில் நீர் ஒட்டாமல் இருக்கும் தன்மை யைப்போல் நீ என்னுடன் ஒட் ாமல் இருக்கின்றாய். ஆர் - ஒளி. ஆங்கு அசை.

(உ) கையாத - உரு ாத. உலாப்போந்த - பவனி வந்த முதல் இரண்டு பா ல்களும் தலைவி (உயிர்) தலைவனிடம் (டவுளிடம்) தன் காதலைப்பற்றிக் கூறிய மொழிகள் போன்றவை

(ங) இந்த பாடல் முதல் 10- து பாடல் வரை தோழி தலைவ னிடம் கூறிய மொழிகளாக அமைந்துள்ளன. ரி 1, 2. அழகிய பளிங் ானது சூரியன் முன்னிலையில் அடைகின்ற ஒளியைப்போல இவள் மனத்தில் முன்பு இருந்த முதிர்ந்த ாதலும் உன் முகத் தக் கண்டவுட விள மாய்த் தோன்றியது. வம்பு அளிந்த கனியே - ரசனையோடுங் கூடிய பழுத்த பழமே.

மைஞ்ஞின்ற குழலாள்தன் மனந்தரவும் வளைதாரா
திஞ்ஞின்ற கோவணவன் இவன்செய்த தியார்செய்தார்
மெய்ஞ்ஞின்ற தமர்க்கெல்லாம் மெய்ஞ்ஞிற்கும் பண்பினுறு
செய்ஞ்ஞன்றி யிலன்கோ டத் திரைலோக்கிய சுந்தரனே.

நீவாரா தொழிந்தாலும் நின்பாலே விழுந்தேழை
கோவாத மணிமுத்தும் குவளைமலர் சொரிந்தனவால்
ஆவாவென் றருள்புரியாய் அமரர்கணம் தொழுதேத்தும்
தேவாதென் பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே

முழுவதும்நீ ஆயினும்இம் மொய்குழலாள் மெய்ம்முழுதும்
பழுதெனவே நினைந்தோராள் பயில்வதும்நின் னொருநாமம்
அழுவதும்நின் திறம்நினைந்தே அது ன்றே பெறும்பேறு
செழுமதில்சூழ் பொழிற்கோடைத் திரைலோக்கியசுந்தரனே.

தன்சோதி யெழுமேனித் தபனியப்பூஞ் சாய்க்காட்டாய்
உன்சோதி எழில்காண்பான் ஓலிடவும் உருக் ாட்டாய்

(ச) மைஞ்ஞின்ற - ம+நின்ற; கருநிறமுடை ய. இஞ்ஞின்ற இ+நின்ற; இவ்விடத்தே நின்ற. மெய்ஞ்ஞின்ற மெய்ந்நெறியில் நின்ற. மெய்ஞ்ஞிற்கும் பண்பின் உறு - உண்மையா நடந்து கொள்ளும் தன்மையினால் உண்டாகின்ற. மனம் தரவும் வளைதாரா மையால், 'செய்ந்நன்றி இலன்'' என்றார். செய்ஞ்ஞின்ற நீலம்... ...மைஞ்ஞின்ற ஒண்கண்.........அபப .

(ரு) ஏழை நின்பாலே விழுந்து-இந் ப் பெண் உன்னிடத்து காதல் கொண்டு. வரி 2. கண்க ளாகிய நீலோற்பல மலர் கோக் ப் படாத அழகிய முத்துக்களை (கண்ணீரை)ச் சொரிந்தன.

(சு) முழுவதும்.........நினைந்தோராள் நீ எல்லாப் பொருள் களிலும் லந்து நின்ற போதிலும் இம்மொய்த்த கூந்தலையு டய பெண்ணிடத்து நீ ாராமையால் தன்னுடல் முழுதும் குற்றமுடை யது என்று எண் ணி மனம் தெ ரியாமல் இருக்கின்றாள். பயில்வதும் நின் ஒருநாமம் சதா சொல்லி கொண்டிருப்பதும் உன் ஒப்பற்ற நாமம் தவிர வே றொன்றுமில்லை.

(எ) வரி 1. தன்னுடைய சோதியுடன் கூடிய திருமேனியின் பொன் போன்ற அழகிய சாயலை (நிறத்தை)க் ாட்டமாட்டாய் ஓலிடவும் இவள் ஓலமிட்டு அழை வும்.

துஞ்சாகண் இவளுடைய துயர்தீரும் ஆறுரையாய்
செஞ்சாலி வயற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே. எ

அரும்பேதைக் கருள்புரியா தொழிந்தாய்நின் அவிர்சடைமேல்
நிரம்பாத பிறைதூவும் நெருப்பொடுநின் கையில்யாழ்
நரம்பாலு முயிரீர்ந்தாய் நளிர்புரிசைக் குளிர்வனம்பா
திரம்போது சொரிகோடைத் திரைலோக்கிய சுந்தரனே. அ

ஆறாத பேரன்பி னவருள்ளங் குடிகொண்டு
வேறாகப் பலர்சூழ வீற்றிருத்தி யதுகொண்டு
வீறாடி யிவளுன்னைப் பொதுநீப்பான் விரைந்தின்னந்
தேறாள்தென் பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

சரிந்ததுகில் தளர்ந்தஇடை அவிழ்ந்தகுழல் இளந்தெரிவை
இருந்தபரி சொருநாள் கண்டிரங்காயெம் பெருமானே
முரிந்தநடை மடந்தையர்தம் முழங்கொலியும் வழங்கொலியுந்
திருந்துவிழ வணிகோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

எ. துஞ்சா கண் - இவள் கண் உறங்காது. செஞ்சாலி வயல் செந்நெல் விளையும் வயல்.

(அ) அவிர் சடை - பிரகாசிக்கும் சடை. வரி 2, 3. முற்றாத இளம்பிறை சிந்துகின்ற நெருப்பினாலும், உன் கையிலிருக்கின்ற யாழ் நரம்பின் இசையாலும் இவளுடைய உயிரைப் பிளந்தாய். பெருமைமிக்க மதில்களாற் சூழப்பட்ட குளிர்ந்த நந்தவனம் பாதிரி மலர்களைச் சொரிகின்ற.

(௯) ஆறாத தணியாத. வீறாடி உன் பெருமையில் ஈடுபட்டு. பொது நீப்பான் - உன்னைப் பொதுத்தன்மையினின்று நீங்கித் தனக்கே உரியவனாகச் செய்யும்பொருட்டு. தேறாள் தேறுதலையடையா திருக்கின்றாள்.

(௧௦) வரி 1. நழுவின ஆடையோடும் தளர்ந்த இடையோடும், அவிழ்ந்த கூந்தலோடும் இந்த இளம் பெண் இருந்த நிலைமயினை. முரிந்த நடை - துள்ளிப் போகின்ற நடை. முழங்கு ஒலியும் வழங்கு ஒலியும் திருந்து விழவு அணி பாடல்களினால் எழுகின்ற ஒலியும் ஆடலில் சிலம்பு முதலிய அணிகளினால் எழுகின்ற ஒலியும், திருத்தமான முறையில் நிகழும் திருவிழாவினை அலங்கரிக்கின்ற.

ஆரணத்தேன் பருகிஅரும் தமிழ்மாலை கமழவருங்
காரணத்தின் நிலைபெற்ற கருவூரன் தமிழ்மாலை
பூரணத்தா லீரைந்தும் போற்றிசைப்பார் காந்தாரஞ்
சீரணைந்த பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

திருச்சிற்றம்பலம்

௬ கங்கைகொண்டசோளேச்சரம்

ப - பஞ்சமம

திருச்சிற்றம்பலம்

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட அங்ஙனே
பெரியநீ சிறிய என்னையாள் விரும்பி யென்மனம் புகுந்த
எளிமையை யென்று(ம்)நான் மறக்கேன் முன்ன(ம்)
மாலறியா ஒருவனும் இருவா முக் ணு நாற்பெருந் தடந்
தோள் கன்னலே தேனே யமுதமே கங்கை கொண்டசோ
ளேச்சரத் தானே. க

(கக) சிறப்பு வாய்ந்த சோலைகள் சூழ்ந்த கோடைத் திரை லோக்கிய சுந்தரனே. இந்த அரிய தமிழ் மாலை வேதங்களின் சாரமாகிய தேனைக் குடித்து, சிவமணம் கமழப்பெற்ற காரணத்தினால் அழியாத தன்மை வாய்ந்தது. கருவூர்த்தேவரால் இயற்றப்பட்ட தமிழ்ப்பாமாலையில் தொடுத்த பத்து பாடலையும் காந்தாரப் பண்ணினால் போற்றி இசையோடு ஓதுபவர் நிறைவை அடைவார்கள்.

(க) தேட அங்ஙனே பெரிய நீ தேடும்படி அவ்வளவு பெரிய உருவத்தைக் கொண்ட நீ. இருவா இருவடிவமாய் (ஆணும் பெண்ணுமாய்) இருப்பவனே . ன்னல் - கரும்பு.

உள்நெகிழ்ந் துடலம் நெக்குமுக் கண்ணா ஓலமென் றோலமிட் டொருநாள் மண்ணின்நின் றலறேன் வழிமொழி மாலை மழலையஞ் சிலம்படி முடிமேற் பண்ணிநின் றுருகேன் பணிசெயேன் எனினும் பாவியேன் ஆவியுள் புகுந்தென் கண்ணினின் றகலா னென்கொலோ கங்கை கொண்டசோ ளேச்சரத் தானே. உ

அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டே அன்பொடு தன்னையஞ் செழுத்தின் சொற்பதத் துள்வைத் துள்ளமள் ளூறுந் தொண்டருக் கெண்டிசைக் கனகம் பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும் பவளவா யவர்பணை முலையுங் கற்பகப் பொழிலும் முழுதுமாம் கங்கை கொண்டசோ ளேச்சரத் தானே. ங

ஐயபொட் டிட்ட அழகுவாள் நுதலும் அழகிய விழியும்வெண் ணீறுஞ் சைவம்விட் டிட்ட சடைகளுஞ் சடைமேல் தரங்கமுஞ் சதங்கையுஞ் சிலம்பும் மொய்கொளெண் டிக்குங் கண்டநின் தொண்டர் முகமலர்ந் திருகண்ணீர் அரும்பக் கைகள்மொட் டிக்கு மென்கொலோ கங்கை கொண்டசோ ளேச்சரத் தானே. ச

(உ) உள் நெகிழ்ந்து மனம் உருகி. வழி மொழிமாலை - சிவபெருமானை அடையும் வழியைப்பற்றிக் கூறும் பாமாலை, அல்லது சிவபெருமான் திருவருள் வழி நின்று மொழிந்த பாமாலை. மழலை... பண்ணி பாமாலை சூட்டப்பெற்ற மழலை மொழிபோல் ஒலிக்கின்ற அழகிய சிலம்புகள் அணிந்த திருவடிகளை என் முடியின்மேல் சூடி.

(ங) இதனின் மற்று உண்டே - இதைவிட வேறு உண்டோ? இல்லை. அள்ளூறும் - களிக்கும். பல் பதக் குவை - பலவகைப்பட்ட (நிதிக்) குவியல். முழுதும் ஆம் - இவை முழுவதும் ஆகும் (சுலபமாகக் கிடைக்கும்).

(ச) ஐய - அழகா. சைவம் விட்டிட்ட - சிவத்தின் தன்மையை வெளிப்படுத்துகின்ற. தரங்கம் - (கங்கையின்) அலை. எண் திக்கும் மொய்கொள் நின்தொண்டர் கண்ட முகம் மலர்ந்து இவற்றைக் கண்டு, எட்டுத் திக்குகளிலும் கூட்டமாகக் கூடியுள்ள உன் தொண்டர்களுடைய முகம் மலர்ந்து. மொட்டிக்கும் - குவியும்.

சுருதிவா னவனும் நெடுமா லாம் சுந்தர விசும்பின் இந்திரனும் பருதிவா னவனும் படர்சடை முக்கட் பகவனும் அகவுயிர்க் கமுதாம் எருதுவா கனனும் எயில்கள்மூன் றெரித்த ஏறுசே வகனுமாம் பின்னும் கருதுவார் கருதும் உருவமாம் கங்கை கொண்டசோ ளேச்சரத் தானே. ரு

அண்டமோ ரணுவாம் பெருமைகொண் டணுவோர் அண்டமாஞ் சிறுமைகொண் டடியேன் உண்டவூண் உனக்காம் வகையென துள்ளம் உள்கலந் தெழுபரஞ் சோதி கொண்டநாண் பாம்பாம் பெருவரை வில்லிற் குறுகலர் புரங்கள்மூன் றெரித்த கண்டனே நீல கண்டனே கங்கை கொண்டசோ ளேச்சரத் தானே. சு

மோதலைப் பட்ட கடல்வயி றுதித்த முழுமணித் திரளமு தாங்கே தாய்தலைப் பட்டங் குருகியொன் றாய தன்

(ரு) சுருதி வானவன் பிரமன். ஆம் - ஆகும்; ஆவான். பருதி வானவன் - சூரியன். அக உயிர்க்கு அமுதாம் - உயிரினுள்ளே அமுதம்போல் பேரின்ப வுணர்ச்சி தருபவனுவான். ஏறு சேவகனும் ஆம் ஆண் சிங்கம் போன்ற வீரனும் ஆவான். கங்கைகொண்ட சோளேச்சரத்தான் சுருதிவானவன் ஆவான், நெடிய திருமாலா வான்......என்று கூட்டுக.

(சு) வரி 1. சிவபெருமானை நோக்க அண்டங்களெல்லாம் அணுக்களாய்த் தோன்றுமாறு அத்தனை பெரியனும், சிவபெருமானை நோக்க அணுக்கள் அண்டங்கள்போலத் தோன்றும்படி அத்தனை சிறியனும். வரி 2. அடியேன் உண்ட ஆகாரம் உனக்கு ஆகும் வகையாக என்னுள்ளத்தினுள் அத்துவிதமாகக் கலந்து எழுகின்ற மேலான ஒளியே. வரி 3. (வாசுகி என்னும்) பாம்பை வில்லின் நாணாகக்கொண்டு, பெரிய மேரு மலையை வில்லாகக் கொண்டு பகைவருடைய முப்புரங்களை எரித்த. கண்டன் வீரன்

(எ) வரி 1. மோதும் தன்மையுள்ள அலைகளோடு கூடிய கடலினிடத்துத் தோன்றிய பூரணமான நவரத்தினக் கூட்டமும் அமுதமும் அவ்விடத்தே. தாய் தலைப்பட்டு - தாயைப்போன்ற தலையன்பினைக் காட்டி.

மையில் என்னைமுன் ஈன்ற நீதலைப் பட்டால் யானுமவ் வகையே நிசிசரர் இருவரோ டொருவர் காதலிற்பட்ட கருணையாய் கங்கை கொண்டசோ ளேச்சரத் தானே. எ

தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த தயாவைநூ றாயிரங் கூறிட், டத்திலங் கொருகூ றுன்கண்வைத் தவருக் கமருல களிக்குநின் பெருமை பித்தனென் றொருகாற் பேசுவ ரேனும் பிழைத்தவை பொறுத்தருள் செய்யுங் கைத்தலம் அடியேன் சென்னிமேல் வைத்த கங்கை கொண்டசோ ளேச்சரத் தானே. அ

பண்ணிய தழல்காய் பாலளா நீர்போற் பாவமுன் பறைந்துபா லனைய புண்ணியம் பின்சென் றறிவினுக் கறியப் புகுந்ததோர் யோகினிற் பொலிந்து நுண்ணிய யெனினும் நம்பநின் பெருமை நுண்ணிடை யொடுங்க நீ வந்தென் கண்ணினுண் மணியிற் கலந்தனை கங்கை கொண்டசோ ளேச்சரத் தானே. கூ

(எ) நீ தலைப்பட்டால் - நீ வெளிப்பட்டுத் தோன்றினால். யானும் அவ்வகையே - நானும் உன்னோடு உருகிக் கலந்து ஒன்றாய் விடுவேன். நிசிசரர் இருவரோடு ஒருவர் - திரிபுர சம்ஹார காலத்தில் தப்பிப் பிழைத்த மூன்று இராக்கதர்கள்; இவர்கள் சிவபெருமானிடத்து அன்பு பூண்டவர்கள். காதலிற் பட்ட கருணையாய் - அன்பிற்கு ஈடுபட்ட கருணையை யுடையவனே.

(அ) தத்தை அங்கனையார் கிளியைப் போன்ற அழகிய மடந்தையர். தயா - அன்பு. பிழைத்தவை - பிழைகளை. வரி 4. உன் கையை என் சிரத்தின்மேல் வைத்து தீட்சைசெய்த.

(கூ) வரி 1-2. பாலோடு கலந்த நீரானது மூட்டிய தீயினால் காய்ச்சப்பட்ட மாத்திரத்தில் பாலைவிட்டு நீங்கிவிடுவதுபோல, பாவம் முன்னே ஓட பாலைப்போன்ற புண்ணியம் பின்னே சென்று அறிவினால் அறியும் வகையா என்னுள்ளே புகுந்து, ஒரு யோக மார்க்கத்தில் விளங்கி. வரி 4. நீ மிக எளியையாகி வந்து கண்ணில் மணி கலந்து நிற்பதுபோல் என்னோடு கலந்து நின்றனை.

அங்கைகொண் டமரர் மலர்மழை பொழிய அடிச்சிலம்(பு) அலம்பவந் தொருநாள் உங்கைகொண் டடியேன் சென்னி வைத் தென்னை உய்யக்கொண் டருளினை மருங்கிற் கொங் கைகொண் டனுங்குங் கொடியிடை காணிற் கொடியளென் றவிர்சடை முடிமேற் கங்கைகொண் டிருந்த கடவுளே கங்கை கொண்டசோ ளேச்சரத் தானே. க0

மங்கையோ டிருந்தே யோகுசெய் வானை வளரிளந் திங்களை முடிமேற் றங்கையோ டணியுங் கடவுளைக் கங்கை கொண்டசோ ளேச்சரத் தானை அங்கையோ டேந்திப் பலிதிரி கருவூர் அறைந்தசொன் மாலையா லாழிச் செங் கையோ டுலகி லரசுவீற் றிருந்து திளைப்பதுஞ் சிவனருட் கடலே. கக

திருச்சிற்றம்பலம்

(க0) அங்கை - அழகிய க. அலம்ப - ஒலிக்க. மருங்கில்...... கொடியள் என்று - கொங்கையின் பாரத்தினால் துவளும் கொடி போன்ற இடையையுடைய, பக்கத்தில் இருக்கும் உமாதேவியார் கண்டால் கோபிப்பாள் என்று எண்ணி. அவிர்சடை - பிரகாசிக்கும் சடை.

(கக) மங்கையோடிருந்தே யோகுசெய்வானை உமாதேவியோ டிருந்தே யோகம் செய்பவனைப்போல் காணப்படுபவனை. வரி 4. சக்கரம் ஏந்திய கையுடன் சக்ரவர்த்தியாய் அரசு செலுத்தி சிவ பெருமான் திருவருட் கடலில் மூழ்கியிருப்பர்.

௬. திருப்பூவணம்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

திருவருள் புரிந்(து)ஆள் ஆண்டுகொண் டிங்ஙன் சிறி
யனுக் கினியது காட்டிப் பெரிதருள் புரிந்தா னந்தமே
தருநின் பெருமையிற் பெரியதோன் றுளதே மருதரா சிருங்
கோங் ககின்மரஞ் சாடி வரைவளங் கவர்ந்திழி வைகைப்,
பொருதிரை மருங்கோங் காவண வீதிப் பூவணங் கோயில்
கொண் டாயே. க

பாம்பணைத் துயின்றோன் அயன்முதல் தேவர் பன்
னெடுங் காலம்நிற் காண்பான் ஏம்பலித் திருக்க என்னுள்
புகுந்த எளிமையை யென்று(ம்)நான் மறக்கேன் தேம்புனற்
பொய்கை வாளைவாய் மடுப்பத் தெளிதரு தேறல்பாய்ந்
தொழுகும் பூம்பணைச் சோலை ஆவண வீதிப் பூவணங்
கோயில்கொண் டாயே. உ

(க) ஆள் ஆண்டுகொண்டு-அடியவனை ஆட்கொண்டு. இனியது காட்டி - இன்பத்தைத் தரும் பொருள் இன்னது என்று தெரிவித்து. உளதே - உண்டோ ? இல்லை. சாடி வரை வளம் கவர்ந்து இழி - அடித்துக்கொண்டு மலையின் மேலுள்ள வளப்பமாகிய பொருள்களை வாரிக்கொண்டு இறங்கி வருகின்ற. பொரு திர மருங்கு - அலைகள் மோதுகின்ற கரைகளின் பக்கத்தில். ஓங்கு ஆவண வீதி - பெரிய ை வீதி யயுடைய.

(உ) நிற்காண்பான் - உன்னைக் காணும் பொருட்டு. ஏம்பலித் திருக்க - பேராவல் கொண்டிருக்க. வரி 3. இனிப்பாகிய நீர குளங்களில் உள்ள வாளைமீன்கள் வாயினால் உட்கொள்ளும்படியா தெளிந்த தேன் பாய்ந்து (குளத்தில்) ஒழுகும்படிச் செய்யும். பூம்பணைச் சோலை - அழகிய உயர்ந்த சோலை.

ரைகட லொலியில் தமருகத் தரையிற் கையினிற் கட்டிய கயிற்றால் இருதலை யொருநா வியங்கவந் தொருநாள் இருந்திடா யெங்கள்கண் முகப்பே விரிதிகழ் விழவின் பின்செல்வோர் பாடல் வேட்கையின் வீழ்ந்தபோ தவிழ்ந்த புரிசடை துருக்கும் ஆவண வீதிப் பூவணங் கோயில்கொண் டாயே. ௫

கண்ணியன் மணியின் குழல்புக் கங்கே கலந்துபுக் கொடுங்கினேற் கங்ஙன் நுண்ணியை யெனினும் நம்பநின் பெருமை நுண்ணிமை யிறந்தமை யறிவன், மண்ணியன் மரபில் தங்கிருள் மொழுப்பின் வண்டினம் பாடநின் றாடும், புண்ணிய மகளிர் ஆவண வீதிப் பூவணங் கோயில்கொண் டாயே. ௬

கடுவினைப் பாசக் கடல்கடந் தைவர் கள்ளரை மெள்ளவே துரந்துன், அடியிணை யிரண்டும் அடையுமா றடைந்

---

(௫) வரி 1, 2. கடற்கரையில் எழுகின்ற அலைகளின் ஒலியைப் போல், உடுக்கையின் இடையில் பிடித்த கையில் கட்டிய கயிற்றின் நுனியில் உள்ள நாவினால் உடுக்கையின் இரண்டு பக்கங்களிலும் ஓசை உண்டாகும்படியாக ஒருநாள் வந்து எங்கள் கண்முன்பாக இருக்கமாட்டாயா. வரி 3. பரந்து விளங்குகின்ற திருவிழாவின் பின்னே செல்வோர், பாட்டினிடத்து மிக்க விருப்பத்தினால் மயங்கிக் கீழே வீழ்ந்தபோது அவிழ்ந்த முறுக்கோடு கூடிய சடையைக் கட்டுகின்ற. துருக்கும் - கட்டுகின்ற.

(௬) வரி 1, 2. நீ சோர்ந்த என்னிடத்து கண்ணிற் பொருந்திய மணியின் உள்ளிடத்தில் புகுந்து என்னுடன் கலந்து அவ்வாறு நுட்பமாயிருந்தாலும் இறைவனே . அணுவையும் கடந்து நின்ற உன் பெருந்தன்மையை அறிவேன். வரி 3. தரையினிடத்து இருள் தங்கும்படி அடர்ந்த சோலைகளில் வண்டுக் கூட்டங்கள் பாட, அவற்றின் அருகே தேவமாதர் நின்று ஆடுகின்ற.

(௭) கடுவினைப் பாசக் கடல் கடந்து - கொடிய வினை என்னும் கயிற்றினாற் கட்டப்பட்டு பிறவிக்கடலுள் வீழ்த்தப்பட்ட நான் அவற்றினின்றும் தப்பி. ஐவர் கள்ளரை மெள்ளவே துரந்து ஐம்புலன்களாகிய கள்வரை மெதுவாக ஓட்டி.

தேன் அருள் செய்வாய் அருள்செயா தொழிவாய் நெடுநிலை மாடத் திரவிருள் கிழிக்க நிலவிளக் கலகில்சா லேகம் புடைகிடந் திலங்கும் ஆவண வீதிப் பூவணங் கோயில் கொண் டாயே. ௫

செம்மனக் கிழவோ ரன்புதா வென்றுன் சேவடி பார்த்திருந் தலச எம்மனங் குடிகொண் டிருப்பதற் கியானார் என்னுடை அடிமைதான் யாதே அம்மனங் குளிர் நாட் பலிக்கெழுந் தருள அரிவையர் அவிழ்குழல் சுரும்பு பொம்மென முரலும் ஆவண வீதிப் பூவணங் கோயில் கொண் டாயே. ௬

சொன்னவின் முறைநான்(கு) ஆரண முணராச் சூழல் புக் கொளித்தநீ யின்று கன்னவின் மனத்தென் கண்வலைப் படுமிக் கருணையிற் பெரியதொன் றுளதே மின்னவில் கனக மாளிகை வாய்தல் விளங்கிளம் பிறைதவழ் மாடம்

---

(௫) அருள் செய்வாய் அருள் செயாது ஒழிவாய் நீ அருள் செய்தாலும் செய்யா விட்டாலும் எனக்குச் சம்மதம் தான். நெடுநிலை மாடம் - உயர்ந்த அடுக்குநிலையுடைய மாளிகைகள். அலகில் சாலேகம் புடைகிடந்து இலங்கும் - எண்ணில்லாத பலகணி (ஜன்னல்)களின் பக்கத்தில் கிடந்து விளங்கும்படியான.

(௬) செம்மனக் கிழவோர்-செம்மையான (திருந்திய) மனத்தை யுடைய பெரியோர். அன்பு தா - உன்னிடத்து அன்பை எனக்குக் கொடு. "இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்" பெரியபுராணம். அலச வருந்த. யான் ஆர் - நான் என்ன தகுதி யுடையவன். யாதே என்ன தகுதியுடையது. வரி 3. சிவ பெருமான் பிட்சை ஏற்க எழுந்தருளியபோது, அவரைக் கண்ட மாதர்கள் கூந்தல் (காதலினால்) அவிழ, அவர்கள் கூந்தலில் தரித்த மலர்களில் மொய்த்துக்கொண்டிருந்த வண்டுகள் பொம்மென்று சப்திக்கும். சுரும்பு வண்டு.

(௭) வரி 1. புகழ்ந்து சொல்லும்படியான தகுதியினையுடைய வேதங்களால் எட்டி உணரமுடியாதபடி உள்ள இடத்தில் ஒளித்துக் கொண்ட நீ. கல்நவில் மனத்து என் கண் வலைப்படும் இக் கருணை யில் - கல்லென்று சொல்லும்படி (கல்லைப் போன்ற) கடினமான மனத்தையுடைய என் கண்ணாகிய வலையிற் சிக்குண்டு கிடக்கின்ற இந்தக் கருணையைவிட. மின் நவில் மின்னல் என்று சொல்லும் படி அவ்வளவு பிரகாசத்தையுடைய. வாய்தல் - முற்றம்

பொன்னவில் புரிசை யாவண வீதிப் பூவணங் கோயில்
கொண் டாயே எ, அ கூ

பூவணங் கோயில் கொண்டனை ஆண்ட புனிதனை
வனிதை பாகனை வெண் கோவணங் கொண்டு வெண்டலை
யேந்துங் குழகனை யழகெலாம் நிறைந்த தீவணன் தன்னைச்
செழுமறை தெரியுந் திகழ் குரூரனேன் உரைத்த பாவணத்
தமிழ்கள் பத்தும்வல் லார்கள் பரமன தருவமா குவரே.

திருச்சிற்றம்பலம்

௬ திருச்சாட்டியக்குடி

பண் பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

பெரியவா கருணை யிளநிலா எறிக்கும் பிறைதவழ்
சடைமொழுப் பவிழ்ந்து சரியுமா சுழியங் குழைமிளிர்ந்
திருபால் தாழ்ந்தவா காதுகள் கண்டங் கரியவா தாழுஞ்
செய்யவாய் முறுவல் காட்டுமா சாட்டியக் குடியார் இருகை
கூம் பினகண் டலர்ந்தவா முகமேழ் இருக்கையி லிருந்தஈ
சனுக்கே. க

(எ) வரி 4. பொன் போலும் பிரகாசிக்கின்ற மதில்களையுடைய
டைவீதி. புரிசை - மதில். வாய்தல், மாடம், புரிசை, ஆவண வீதி
ஆகிய இவைகளையுடைய பூவணம் என்று முடிக்க

(கo) பாவணத் தமிழ் - பாட்டின் வண்ணமாயுள்ள தமிழ்
தமிழ்ப் பாட்டுகள். "ஆரூரன் சொன்ன பாவணத் தமிழ் பத்தும்
வ்லார்.' **சுந்தரர்.** (ஓவணமேல்).

(க) கருணை பெரியவா - உன் கருணை பெரியதாயிருக்கின்றது.
சடைமொழுப்பு சடை முடி. சுழியம் சரியுமா - உச்சிக்கொண்டை
சரிகின்றது. செய்யவாய் முறுவல் காட்டுமா - சிவந்த வாயில் புன்
னகை தவழ்கின்றது. ஏழ் இருக்கையில் இருந்த ஈசனுக்கே கருணை
பெரியவா, சுழியம் சரியுமா......என்று கூட்டுக. ஏழ் இருக்கை -
சாட்டியக்குடியிலிருக்கும் திருக்கோயிலுக்குப் பெயர். வரி 4.
இறைவனை வணங்கும்பொருட்டு, சாட்டியக்குடி அடியார் குவித்த
கைகளைக் கண்டு ஏழிருக்கையில் இருந்த ஈசனுக்கு முகம் மலர்ந்தது.

பாந்தள்பூ ணாரம் பரிகலங் கபாலம் பட்டவர்த் தனம்
எரு(து) அன்பர், வார்ந்தகண் அருவி மஞ்சன சாலை மலை
மகள் மகிழ்பெருந் தேவி சாந்தமுந் திருநீ றருமறை
கீதஞ் சடைமுடி சாட்டியக் குடியார் ஏந்திழில் இதயம்
கோயில்மா ளிகையேழ் இருக்கையு ளிருந்தஈ சனுக்கே. உ

தொழுதுபின் செல்வ தயன்முதற் கூட்டந் தொடர்
வன மறைகள்நான் கெனினுங் கழுதுறு கரிகா டுறைவிடம்
போர்வை கவந்திகை கரியுரி திரிந்தூண் தழலுமிழ் அரவங்
கோவணம் பளிங்கு செபவடஞ் சாட்டியக் குடியார் இழுது
நெய் சொரிந்தோம் பழலொளி விளக்கேழ் இருக்கையி
லிருந்தஈ சனுக்கே. ௩

பதிகநான் மறைதும் புருவு நாரதரும் பரிவொடு பாடு
காந் தர்ப்பர் கதியெலாம் அரங்கம் பிணையன்மூ வுலகிற் கடி
யிருள் திருநடம் புரியுஞ் சதியிலார் கதியி லொலிசெயுங்

(உ) வரி 1,2. ஏழ் இருக்கையில் இருந்த ஈசனுக்குப் பூண்கின்ற மாலை பாம்பு, உண்ணும் பாத்திரம் மண்டைஓடு, பட்டத்து யானை எருது, மஞ்சனசாலை (நீராடும் இடம்) அன்பர்கள் கண்களினின்றும் பெருக்கெடுத்து ஓடுகின்ற அருவி. வரி 4. சாட்டியக்குடி அன்பர்களுடைய அழகு மிக்க இருதயம் ஈசன் வசிக்கும் அரச மாளிகை போன்ற கோயில்.

(௩) வரி 2,3. ஈசனுக்கு உறைவிடமாயிருப்பது பேய்கள் வசிக்கும் சுடுகாடு, போர்த்துக்கொள்ளும் போர்வை யானைத்தோல், கவந்திகை (உண்ணும் உணவு) திரிந்து ஏற்கும் பிக்ஷை, கட்டியிருக்கும் கோவணம் நெருப்புபோன்ற விஷத்தைக் கக்கும் பாம்பு, செபமாலை பளிங்குமாலை. வரி 4. இளகிய நெய்யைச் சொரிந்து வளர்க்கின்ற ஓமத் தீயின் ஒளியானது ஈசனுக்கு விளக்காகும்.

(ச) பதிகம்......அரங்கம் ஏழிருக்கையில் இருந்த ஈசனுக்கு பாடும் பாட்டுகள் நான்கு வேதங்களாகும்; தும்புருவும் நாரதரும் அன்போடு பாடுகின்ற கந்தர் ராவர்; எல்லா உயிர்களுக்கும் பு லி மாயிருப்பது அவர் நடனசாலை. மூவுலகில் கடியிருள் பிணையல் திருநடம் புரியம் - மூன்று உலகங் ளிலும் மிகுந்த இருளில் இரண்டு கைகளினாலும் அபிநயம் காட்டித் திருநடனம் செய்வார். சதியில் ஆர்கதியில் கையில் தமருகம் ஒலி செயும் - தாளவொத்தோடு கூடிய அவருடைய நட த்தில் அவர் யில் பிடித்திருக்கும் உடுக்கை தானே ஒலி செய்துகொண்டிருக்கும். பிணையல் - இரண்டு கைகளாலும் அபிநயம் காட்டுதல். தமரு ம் - உடு .

யில் தமருஞ் சாட்டிய' குடியார் இதயமாங் கமல'
மலவர்த் தனையேழ் இருக்கையி லிருந்தா சனு'கே. ௪

திருமகன் முருகன் ே, விமேயல் உமையாள் திருமகள்
மருமகன் தாயாம் மருமகன் மதனன் மாமனேல் இமவான்
மலையுடை யரையர்தம் பாவை தருமலி வளனுஞ் சிவபுரன்
தோழன் தனபதி சாட்டியக் குடியார் இருமுகங் கழல்
மூன் றேழுந த் தலமேழ் இரு'ை யி லிரு'தா சனுக்கே. ௫

அனலமே புனலே யனிலமே புவனி அம்பரா அம்பரத்
தளி'குங் னகமே வெள்ளிக் குன்றமே யென்றன் களை
ணே களைகண்மற் றில்லாத் தனியனே னுள்ள' கோயில்
ெ ாண் டருளுஞ் சைவனே சாட்டியக் குடியார்க் கினியதிங்
கனியாய் ஒழிவற நிறைந்தே ழிருக்கையி லிருந்தவா
றியம்பே. ௬

(௪) வரி 4. சாட்டியக்குடி அடியார்க' இதயகமலம் கமலாசன மாகும்.

(௫) திருமகள் மரும ன் தாயாம் மருமகன் மதனன் - மன்மதன் சிவபெருமானுடைய மருமகனுவான்; இலக்குமி மன்மதனுக்குத் தாயாவாள். மலையுடை அரையர்தம் பாவை தரும் மலிவளன் ஆம் தனபதி சிவபுரன் தோழன் - பர்வதராஜன் புத்திரி (பார்வதி தேவியார்) தருகின்ற மிக்க செல்வத்தினுல் தனபதியாகிய குபேரன் சிவபெருமானுக்குத் தோழன் ஆவான். இருமுகம் கழல் மூன்று ஏழு த்தலம் இவை அக்கினி தேவனுக்கு உண்டு. இத்தலத்தில் சிவபெருமான் அக்கினிதேவன் வடி த்துடன் இருப்பதால் இரண்டு மு ங்களும் மூன்று ால் ளும் ஏழு கைகளையுமுடையவரா ச் சி பெருமானைக் கூறப்பட்டுள்ளது.

(௬) 'னலம் - நெருப்பு. அனிலம் காற்று. புவனி உலகம், ண். அம்பரம் ஆ ாயம். களைகண் - ஆதரவு. சாட்டியக்குடியார்க்கு - திருச்சாட்டியக்குடியிலுள்ள அடியவர்களுக்கு.

செம்பொனே பவளக் குன்றமே நின்ற திசைமுகன்
மால்முதற் கூட்டத்(து) அன்பரா னவர்கள் பருகும் ஆர்
அமுதே யத்தனே பித்தனே னுடைய சம்புவே யணுவே
தாணுவே சிவனே சங்கரா சாட் டியக் குடியார்க் கின்பனே
யெங்கும் ஒழிவற நிறைந்தே யிருக்கையி லிருந்தவா
றியம்பே. எ

செங்கணா போற்றி திசைமுகா போற்றி சிவபுர
நகருள் வீற்றிருந்த அங்கணா போற்றி அமரனே போற்றி
அமரர்கள் தலைவனே போற்றி தங்கள்நான் மறைநூல் சகல
மும் கற்றோர் சாட்டியக் குடியிருந் தருளும் எங்கள் நாய
கனே போற்றியே யிருக்கை இறைவனே போற்றியே
போற்றி. அ

சித்தனே யருளாய் செங்கணா அருளாய் சிவபுர நகருள்
வீற்றிருந்த அத்தனே யருளாய் அமரனே யருளாய் அம
ரர்கள் அதிபனே யருளாய் தத்துநீர்ப் படுகர்த் தண்டலைச்
சூழற் சாட்டியக் குடியுளே யிருக்கை முத்தனே யருளாய்
முதல்வனே யருளாய் முன்னவா துயர்கெடுத் தெனக்கே. கூ

(எ) கூட்டத்து அன்பரானவர்கள் பருகும் ஆரமுதே - கூட்டத்தினுள் சிவபெருமானிடத்து அன்புடையரா யிருப்பவர்கள் அனுபவிக்கின்ற பேரின்ப உணர்வாயிருப்பவனே. தாணு அழிவில்லாதவன்.

(அ) செங்கணா சிவந்த கண்ணையுடைய திருமாலே. திசைமுகா நான்கு முகங்களையுடைய பிரமனே. அங்கணா அழகிய கிருபா நோக்கமுடையவனே. அமரனே இறப்பில்லாதவனே. அமரர்கள் தலைவனே - தேவர்களுக்குத் தலைவனாயிருக்கப்பட்டவனே. சிவபெருமானே எல்லாத் தேவருமாய் இருக்கின்றார் என்று இச் செய்யுள் தெரிவிக்கின்றது.

(கூ) வரி 3. குதித்தோடுகின்ற நீரையுடைய வயல்களும் சோலைகளும் சூழ்ந்துள்ள சாட்டியக்குடி. படுகர் - குளம், வயல். தண்டலை - சோலை. முன்னவா துயர்கெடுத்து எனக்கு - எல்லாப் பொருளுக்கும் முன்னாயிருப்பவனே. என்னுடைய துன்பத்தைப் போக்கி; அல்லது எனக்கு முற்பட்டு நிற்கும் ஆசையையும் துன்பத்தையும் போக்கி.

தாட்டரும் பழனப் பைம்பொழிற் படுகர்த் தண்டலைச் சாட்டியக் குடியார் ஈட்டிய பொருளா யிருக்குமே யிருக்கை யிருந்தவன் திருவடி மலர்மேற் காட்டிய பொருட்கலை பயில் கருவூரன் கழறுசொன் மாலையீ ரைந்து மாட்டிய சிந்தை மைந்தருக் கன்றே வளரொளி விளங்குவா னுலகே. ௧௦

திருச்சிற்றம்பலம்

௯. தஞ்சை இராசராசேச்சரம்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

உலகெலாந் தொழவந் தெழுகதிர்ப் பருதி ஒன்று நூறாயிர கோடி அலகெலாம் பொதிந்த திருவுடம் பச்சோ அங்ஙனே அழகிதோ அரணம் பலகுலாம் படைசெய் நெடு

---

(௧௦) தாள்தரும் பழனம் - அருவிலை பாய்வதால் (நல்ல விளைவைக்) கொடுக்கும் வயல்; அல்லது உழைப்புக்குத் தக்க பலனைக் கொடுக்கும் வயல் என்னலுமாம். தாள் - அருவி முயற்சி. வரி 3-4. மேலான பொருளைக் காட்டும்படியான நூல்களில் பயிற்சியுள்ள கருவூர்த் தேவர் சொல்லிய பாமாலை பத்தும் சிந்தையிற் பதித்த வர்களுக்கு அல்லவா ஒளி வளர்ந்து பிரகாசிக்கின்ற சிவலோகம் (சித்திக்கும்).

(௧) பருதி - சூரியன். நூறாயிர கோடி ஒன்று - எண்ணில்லாதன ஒன்றுசேர்ந்த. அலகு எல்லாம் பொதிந்த - அழகு அல்லது பரப்பு எல்லாம் திரண்டதுபோன்ற மிக்க ஒளியுடைய. திருவுடம்பு அங்ஙனே அழகிது அச்சோ - திருமேனியனது அவ்விதமா அழகாயிருக்கின்றது. இது என்ன அதிசயம். ஓ - அசை. அரணம் - கோட்டை. பல குலாம் படைசெய் பல ஒன்றோடொன்று நெருங்கிக் காவல் செய்கின்ற.

நிலை மாடம் பருவரை ஞாங்கர் வெண்திங்கள் இலைகுலாய்ப்
பதணத் திஞ்சிசூழ் தஞ்சை இராசரா சேச்சரத் திவர்க்கே.

நெற்றியிற் கண்ணென் கண்ணினின் றகலா நெஞ்சினில்
அஞ்சிலம் பலம்பும் பொற்றிரு வடியென் குடிமுழு தாளப்
புகுந்தன போந்தன இல்லை மற்றெனக் குறவென் மறிதிரை
வடபாற் றிடுபுனல் மதகில்வாழ் முதலை எற்றுநீர்க் கிடங்கில்
இஞ்சிசூழ் தஞ்சை இராச ராசேச்சரத் திவர்க்கே. ௨

சடைகெழு மகுடம் தண்ணிலா விரிய வெண்ணிலா
விரிதரு தரளக் குடைநிழல் விடைமேற் கொண்டுலாப்
போதுங் குறிப்பெ(ன்)னே கோங்கிணர் அனைய குடைகெழு
நிருபர் முடியொடு முடிதேய்ந் துக்கசெஞ் சுடர்ப்படு குவை

---

(௧) நெடுநிலை மாடம் பருவரை ஞாங்கர் - உயர்ந்த அடுக்குகளோடு கூடிய உப்பரிகைகளான பெரிய மலைகளின் பக்கத்தில். ஞாங்கர் - பக்கம். வெண்திங்கள்............தஞ்சை இராசராசேச்சரத்து இவர்க்கே - இலைபோன்ற வெண் சந்திரன் சஞ்சரிக்கின்ற உயர்ந்த மேடையோடு கூடிய மதில்களால் சூழப்பட்டுள்ள தஞ்சை மாநகரில் இராசராசேச்சரம் என்னும் திருக்கோயில் கொண்டுள்ள இவர்க்கே. பதணம் - மதிலின் உள்மேடை. இஞ்சி - மதில். இராசராசேச்சரத்திவர்க்கு திருவுடம்பு அழகிது என்று கூட்டுக.

(௨) நெஞ்சில்........போந்தன இல்லை - அழகிய சிலம்புகள் ஒலிக்கின்ற பொன்மயமான திருவடிகள் என் குடும்பம் முழுவதையும் ஆளும்பொருட்டு என் நெஞ்சினுள் புகுந்த . வெளியே வரவில்லை. மற்று எனக்கு உறவு என் - வேறு உறவினர் எனக்கு எதற்கு? மறிதிரை வடபால் திடுபுனல்...இஞ்சிசூழ் - வடபக்கத்தில் மடங்கும்படியான அலைகளோடு கூடிய நீர் ஒலிசெய்து விழும்படியான மதகில் வாழ்கின்ற முதலை வாரி எறிகின்ற நீரையுடைய அகழியோடு கூடிய மதில்களாற் சூழப்பட்டுள்ள. இஞ்சி - மதில்.

(௩) சடைகெழு மகுடம் தண்நிலா விரிய - பிரகாசிக்கும் சடாமகுடத்தினின்று குளிர்ச்சி பொருந்திய நிலவொளி பரவ. தரளம் - வெண்மை, முத்து. உலாப்போதும் - பவனி வருகின்ற. குறிப்பு எ(ன்)னே கருத்து யாதோ. கோங்கு இணர் - கோங்கு மலர்க்கொத்து. நிருபர் - அரசர். முடி - கிரீடம். உக்க......இடைகெழு - சிந்திய சிவந்த ஒளியை வீசும் மணிக்குவியல்கள் உயர்ந்துள்ள இடம் பொருந்திய.

யோ' கிடைகெழு மாடத் திஞ்சிசூழ் தஞ்சை இராசரா சேச்சரத் தி ர்க்கே. ௩

வாழியம் போதத் தருகுபாய் விடையம் வரிசையின் விளக் வின் அடுத்த சூழலம் பளி'கின் பாசல ராதிச் சுடர் விடு மண்டலம் பொலிய' காழகில் மழூம் மாளிகை மகளிர் கங்குல்வா யங்குலி கெழும யாழொலி சிலம்பும் இஞ்சிசூழ் தஞ்சை இராசரா சேச்சரத் திவர்க்கே. ௪

எவருமா மறை ளவையும்வா னவர் ள் ஈட்டமுந் தாட்டிரு' கமலத் தவரும்மா லவனும் அறிவரும் பெருமை அடலழல் உமிழ்தழற் பிழம்பர் உவரிமா டலி னுலிசெய் மாமறுகி னுறு ளிற் றரசின திட்டம் இவருமால் வரைசெய் இஞ்சிசூழ் தஞ்சை இராசரா சேச்சரத் திவர்க்கே. ௫

---

(௪) அம்போதத்து அருகு பாய்விடை அம் வரிசையின் விளக்கலின் அடுத்த சூழல் அம் பளிங்கின் பாசலர் ஆதிச்சுடர் விடு மண்டலம் பொலியக் காழ் அகில் கமழும் மாளி கங்குல்வாய் ம ளிர் அங்குலி ழும யாழ்ஒலி சிலம்பும் - மேகங்களின் அருகே பாய் கின்ற இடபத்தை ஒத்த தோற்றத்தையுடைய அழகிய விளக்கு களின் வரிசையின் பக்கங்களில் சூழ்ந்துள்ள பளிங்குக் கற்களினின் றும் விடப்பட்ட ஒளியானது மண்டலங் ளில் பிரகாசிக் , வயிரத் தோடு கூடிய அகிற்கட்டைகளின் புகை யினுல் மணம்வீசும் மாளிகை களினிடத்து இரவில் பெண் ர் தங் ள் விரல்கள் விளங்கும்படி யாழை மீட்டுவதனுல் இன்னிசை ஒலிக்கும். இச்செய்யுளுக்குப் பொருள் நன்கு விளங் வில்லை. பாடபேதம் இருக்குமோ என்னும் ஐயப்பாடு உளது.

(௫) வரி 1 2. எப்படிப்பட்ட பெருமை உடையவராலும், பெரிய வேதங் ள் எவற்றாலும் தேவர்கள் கூட்' ங் ளாலும் த 'டினையுடைய தாமரைமலர்மேல் உ றயும் பிரமதேவனுலும் திருமாலாலும் அறியமுடியாத பெரு மயுடைய வலிய அ'கினி ய உமிழும்படியான நெருப்புத் தம்பமாய் நின்றவர். ரி 3 4. உவர்ப் பாகிய பெரிய டலின் ஒலியைப் போன்று சப்தி'கின்ற தெரு' ரில் சஞ்சரி'கின்ற அரசயானை ரின் கூட்டம் உலாவுகின்ற பெரிய மலையைப் போன்ற தோற்றத்தையுடையது. மறுகு வீதி. இவரும் உலாவும்.

அருளுமா றருளி ஆளுமா றாள அடிகள்தம் அழகிய விழியுங் குருளும்வார் காதுங் காட்டியான் பெற்ற குயிலினை மயல்செய்வ தழகோ தரளவான் குன்றில் தண்ணிலா ஒளியுந் தருகுவால் பெருகுவான் தெருவில் இருளெலாங் கிழியும் இஞ்சிசூழ் தஞ்சை இராசரா சேச்சரத் திவர்க்கே. சு

தனிப்பெருந் தாமே முழுதுறப் பிறப்பின் தளிரிறப் பிலைஉதிர் வென்றால் நினைப்பருந் தம்பாற் சேறலின்றேனும் நெஞ்சிடிந் துருகுவ தென்னோ சுனைப்பெருங் கலங்கற் பொய்கையங் கழுநீர்ச் சூழன்மா ளிகைசுடர் வீசும் எனைப் பெருமணஞ்செய் இஞ்சிசூழ் தஞ்சை இராசரா சேச்சரத் திவர்க்கே. எ

(சு) குருள் முன்கொண்டை 'சடை முடி. வார் காது - நீண்ட காது. யான் பெற்ற குயிலினை மயல் செய்வது அழகோ - நான் பெற்ற குயில்போலும் இனிய குரலையுடைய பெண்ணை மையல் செய்வது அழகாகுமோ? தரள வான் குன்றில்......இருளெலாம் கிழியும் - பெரிய தெருக்களில் உள்ள முத்துக்குன்றினை ஒத்த பெரிய குவியல்களினின்று வெளிவருகின்ற குளிர்ந்த நிலவு ஒளியினால் இருள் முழுமையும் நீங்கும்படியான. கிழியும் - நீங்கும்.

(எ) வரி 1, 2. ஒப்பற்ற பெருமையுடைய தாமே எல்லாப் பொருள்களிலும் பொருந்தியிருக்க, பிறப்பு இனிய தளிரைப் போன்றும் இறப்பு இலை உதிர்தலைப் போன்றும் ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்வதானால், மனதினால் நினைக்கமுடியாத தம்மிடத்துச் செல்லுதல் இப்போது நிகழாவிட்டாலும் மனம் உடைந்து வருந்துவது ன்ன ாரணம்? வரி 3 4. நீரூற்றினையும் நீர்பாயும் மதகினையுமுடைய தடாகத்திலுள்ள அழகிய கழுநீர் மலர்கள் சூழ்ந்துள்ள ஒளி பொருந்திய மாளிகையில் மிக்க வாசனையைச் செய்யும் 'மதில்களாற் சூழப்பட்ட அத்தன் ம வாய்ந்த மா ரி கூ யு டைய தஞ்சை இராசராசேச்சரத்து சி பெருமானுக்கு.

பன்னெடுங் காலம் பணிசெய்து பழையோர் தாம்பலர் ஏம்பலித் திருக்க என்னெடுங் கோயில் நெஞ்சுவீற் றிருந்த எளிமையை என்றும்நான் மறக்கேன் மின்னெடும் புருவத் திளமயி லனையார் விலங்கல்செய் நாடக சாலை இன்னடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை இராசரா சேச்சரத் திவர்க்கே.

மங்குல்சூழ் போதின் ஒழிவற நிறைந்து வஞ்சகர்நெஞ் சகத் தொளிப்பார் அங்கழல் சுடராம் அவர்க்கிள வேனல் அலர் கதிர் அனையவா ழியரோ பொங்கெழில் திருநீ றழி பொசி வனப்பில் புனல்துளும் பவிர்சடை மொழுப்பர் எங் களுக் கினியர் இஞ்சிசூழ் தஞ்சை இராசரா சேச்சரத் திவர்க்கே. க௰

(அ) ஏம்பலித்து: (உன்னைக் காணும் பொருட்டு) வருந்திக் கொண்டு. நெடுங்கோயில் என் நெஞ்சு- பெரிய கோயிலாக என் மனதினிடத்து. விலங்கல் செய் நாடகசாலை - மலையைப் போன்று உயர்ந்துள்ள நடனம் செய்யும் மாளிகை(யினிடத்து).

(க) ஒழிவற நிறைந்து மங்குல் சூழ்போதின் வஞ்சகர் நெஞ் சகத்தொளிப்பார் - நீக்கமற நிறைந்து மேகங்களாற் சூழப்பட்ட காலத்து சூரியன் ஒளி மறைந்திருப்பது போல வஞ்சகருடைய மனத்தினிடத்துக் காணப்படாமல் ஒளித்துக்கொண்டிருப்பார். அம் கழல் சுடராம் அவர்க்கு இளவேனில் அலர்கதிர் அனைய வாழியர் - அழகிய திருவடி ஒளியில் (அருளொளியில்) மூழ்கிய அடியவர் களுக்கு இளவேனிற் காலத்தில் உதித்த சூரியனைப் போன்று வாழ்விக்குந் தன்மையர். ஓ அசை. வரி 3. அழகு மிக்க திருநீற்றுக் கோலத்தை அழிக்கும்படி அழகிய கங்கை நீர் ததும்பிக் கசிகின்ற ஒளி விளங்கும் சடைக் கற்றையை யுடையவர். எங்களுக்கு இனியர் (வஞ்சகமற்ற) அடியார்களாகிய எங்களுக்கு இன்பத்தைத் தருபவர்.

தனியரேத் தனையொ ராயிர ருமாம் தன்மையர் எ
வயத் தினராம் கனியரத் தருதீ கரும்பர்வெண் புரிநூற்
ட்டியர் அட்டஆர் அமிர்தர். புனிதர்பொற் கழலர் புரிசடா
மகுடர் புண்ணியர் பொய்யிலா மெய்யர்க் கினியரேத் தனை
யும் இஞ்சிசூழ் தஞ்சை இராசரா சேச்சரத் திவர்க்கே கO

சாளமந் தார ச பக வகுள சந்தன நந்தன வனத்
தின் இருள்விரி மொழுப்பின் இஞ்சிசூழ் தஞ்சை இராசரா
சேச்சரத் திவரை அருமருந் தருந்தி 'ல்லல்தீர் கருவூர்
அறைந்தசோல் மாலை ரைந்தின் போருள்மருந் துடை
யோர் சிவபத மேன்னும் போன்னேடுங் குன்றுடை
யோரே க

திருச்சிற்றம்பலம்

(கO) வரி 1. ஒன்றுயிருப்பவர், ஆயிரம் வடிவம் கொள்ளும் தன்மையுடையவர் ; என் வசப்பட்டவராவர். கனியர் அத்து அருதிங் கரும்பர் - னியைப் போன்றவர். அரிய இனிய கரும்பு போன்ற ர். அத்து - சாரியை. வெண்புரிநூல் கட்டியர் - வெண்மையான முறுக்கிய பூணூலே அணிந்தவர். அ டஆர் அமிர்தர் ரய்ச்சின அரிய அமுதம் (பால்) போன்றவர். எத்தனையும் இனியர் மிகவும் இனியவர்.

(கக) சாளம் முதலியன வாசனைப் பூக் ளையுடைய மரங் ள். இருள் விரி மொழுப்பின் சாள......இஞ்சி சூழ் - இருளைப் பரப்பும் படி அடர்த்தியாயுள்ள சாளம் முதலிய மரங்களையுடைய நந்தன வனத்தாலும் மதில்களாலும் சூழப்பட்டுள்ள. வரி 3. அரிய (பிறவிப் பிணிக்கு) மருந்தாகிய சி பிரான் திருவருளைப் பருகித் துன்ப நீங்கப்பெற்ற கருவூர்த்தேவர் பாடிய பாமாலையாகிய இந்த பத்து பாட்டுகளின் பொருளாகிய மருந் த உண்பவர் ள் (உ ர்பவர் ள்). இராசராசேச்சரத்திவ ர அறைந்தசொல் என்று கூட்டு .

௬௦ திருவிடைமருதூர்

பண் - பஞ்சமம

திருச்சிற்றம்பலம்

வெய்யசெஞ் சோதி மண்டலம் பொலிய வீங்கிருள் நடுநல்யா மத்தோர் பையசெம் பாந்தள் பருமணி உமிழ்ந்து பாவியேன் காதல்செய் காதில் ஐயசெம் பொற்றோட் டவிர்சடை மொழுப்பின் அழிவழ கியதிரு நீற்று மையசெங் கண்டத் தண்டவா னவர்கோன் மருவிடம் திருவிடை மருதே. க

இந்திர லோக முழுவதும் பணிகேட் டிணையடி தொழு தேழத் தாம்போய் ஐந்தலை நாகம் மேகலை அரையா அகந் தோறும் பலிதிரி அடிகள் தந்திரி வீணை கீதமும் பாடச் சாதிகின் னரங்கலந் தொலிப்ப மந்திர கீதந் தீங்குழ லெங்கும் மருவிடம் திருவிடை மருதே. உ

(க) பொழிப்புரை. இருள் மிகுந்த நல்ல நடு இரவில் ஒரு படத்தையுடைய செந்நாகம் உமிழ்ந்த பெரிய மாணிக்கத்தால் உண்டாகும் பிரகாசம் பொருந்திய சிவந்த ஒளிவட்டம் போன்று பாவியேனால் காதலிக்கப்பட்ட சிவபெருமான் காதில் அணிந்த செம்பொன்னாலாகிய அழகிய தோடு விளங்குகின்றது. அத்தகைய தோட்டினையும், சடைமுடியினையும் மிக் அழகிய திருநீற்றுக் கோலத்தினையும், விஷத்தால் கருநிறம் பொருந்திய சிவந்த கழுத்தினையும் உடைய அண்டங்களில் வாழும் தேவர்களுக்குத் தலைவனாகிய சிவபெருமான் சேர்ந்திருக்கும்படியான இடம் திருவிடைமருது ஆகும். அழிவு அழகு - மிக்க அழகு.

(உ) ஐந்தலை நாகம் மேகலை அரையா ஐந்து தலை நாகத்தை இடுப்பில் மேகலை போன்று கட்டி. தந்திரி வீணை கீதமும் பாட வீணையின் நரம்பு இசையை எழுப்ப. சாதி கின்னரம் - ஒருவித இசைக் கருவி. மந்திர கீதம் தீங்குழல் மந்திர ரூபமான இசைப் பாட்டும் இனிய குழலோசையும்.

பனிபடு மதியம் பயில்கொழுந் தன்ன பல்லவம் வல்லியே யென்றிங்ஙன் வினைபடு கனகம் போலயா வையுமாய் விங்குல கொழிவற நிறைந்து துனிபடு கலவி மலைமக ளுடனாய்த் தூங்கிருள் நடுநல்யா மத்தென் மனனிடை அணுகி நுணுகியுள் கலந்தோன் மருவிடம் திருவிடை மருதே ௩

அணியுமிழ் சோதி மணியினுள் நலந்தாங் கடியனேன் உள்கலந் தடியேன் பணிமகிழ்ந் தருளும் அரிவைபா கத்தன் படர்சடை விடம்மிடற் றடிகள் துணியுமிழ் ஆடை அரையிலோ ராடை சுடருமிழ் தரஅத னருகே மணியுமிழ் நாக மணியுமிழ்ந் திமைப்ப மருவிடம் திருவிடை மருதே. ௪

பந்தமும் பிரிவும் தெரிபொருட் பனுவற் படிவழி சென்றுசென் றேறிச் சிந்தையுந் தானுங் கலந்ததோர் கலவி தெரியினுந் தெரிவுறா வண்ணம் எந்தையுந் தாயும் யானுமென் றிங்ஙன் எண்ணில்பல் லூழிக ளுடனாய் வந்தணு காது நுணுகியுள் கலந்தோன் மருவிடம் திருவிடை மருதே. ௫

(௩) வரி. 1 ௨. குளிர்ச்சி பொருந்திய சந்திரனுடைய கொழுந்து என்று சொல்லத் தகுந்த தளிர் கொடி போன்று பல பொருள்களாகச் செய்யப்படுகின்ற ஒரே பொருளாகிய பொன்னைப் போன்று எல்லாப் பொருள்களுமாய். விங்கு உலகு - பெரிய உலகம். துனிபடு கலவி - ஊடலோடு கூடிய இன்ப நுகர்ச்சி. ஊடுதல் காமத்திற் கின்பம் திருக்குறள். தூங்கு இருள் - பேரிருள்.

(௪) அணி உமிழ் - அழகு மிக்க. துணி உமிழ் ஆடை அரையில் ஓர் ஆடை சுடர் உமிழ்தர - ஒளி வீசுகின்ற உடையைத் தரித்த அரையின்மீது ஆடை ஒன்று ஒளியை[illegible]க்க. மணி உமிழ்...இமைப்ப மாணிக்கத்தைக் கக்குகின்ற நாகம் மிக்க அழகுடன் பிரகாசிக்க.

(௫) வரி 1. மலத்தோடு கட்டுப்பட்டிருக்கும் நிலையும், மலத்தை விட்டு நீங்கும் நிலையும் (முத்திப் பேற்றையும்) தெரிவிக்கும் பொருளையுடைய ஞான நூல் களிற் சொன்ன வழியிலே நடந்து சென்று சிறிது சிறிதாக மேல்நிலையை யடைந்து. கலவி - கலப்பு. தெரியினும் தெரிவுறாவண்ணம் - சிறிது அறிந்தாலும், முற்றிலும் அறியாதபடி; எந்தையும் தாயும் யானும் என்று இங்ஙன் - எனக்குத் தந்தையாகவும் தாயாகவும் இவ்வாறாக. வந்து அணுகாது - வெளிப்பட்டு வந்து நெருங்காமல். நுணுகி உள் கலந்தோன் - நுட்பமாகி என்னுள்ளே கலந்துநின்றவன்.

எரிதரு கரிகாட் டிடுபிணம் நிணமுண்டே ப்பமிட் டலங்கெயிற் றழல்வாய்த் துருமல் நெடும்பேய் கணமெழுந் தாடுந் தூங்கிருள் நடுநல்யா மத்தே அருள்புரி முறுவல் முகிழ்நிலா எறிப்ப அந்திபோன் றொளிர்திரு மேனி வரியரவு ஆட ஆடுமெம் பெருமான் மருவிடம் திருவிடை மருதே ௬

எழிலையாழ் செய்கைப் பசுங்கலன் விசும்பின் இன்துளி படநனைந் துருகி அழலையாழ் புருவம் புனலொடுங் கிடந் தாங்(கு) ஆதனேன் மாதரார் கலவித் தொழிலை யாழ்நெஞ் சம் இடர்ப்படா வண்ணந் தூங்கிருள் நடுநல்யா மத்தோர் மழலையாழ் சிலம்ப வந்(து)அகம் புகுந்தோன் மருவிடம் திரு விடை மருதே ௭

---

(௬) எரிதரு - எரிகின்ற. கரிகாடு - சுடுகாடு. எயிறு - பல். துரு - நெருங்கக் கட்டிய. அருள்புரி முறுவல் - அருள் செய்வதைக் குறிக்கும் புன்சிரிப்பு. முகிழ்நிலா எறிப்ப இளஞ் சந்திரனைப் போன்று ஒளிவீச. அந்தி - செவ்வானம். திருமேனி வரி அரவு ஆட திருமேனியில் அணிந்த கீற்றுகளோடு கூடிய பாம்புகள் ஆட.

(௭) வரி 1, 2. எழில் ஐஆழ் செய்கைப் பசுங்கலன் விசும்பின் இன்துளிபட நனைந்துருகி அழலை ஆழ்பு உருவம் புனலொடும் கிடந் தாங்கு ஆதனேன் மாதரார் கலவித் தொழிலை ஆழ் நெஞ்சம் இடர் படா வண்ணம் - அழகு மிக்க ஆழமாகச் செய்யப்பட்ட பச்சை மட் லங்கள் ஆகாயத்தினின்று மழைத் துளிகள் பட்ட அளவில் நனைந்து கரைந்துபோக, நெருப்பில் அம்மட் லங்கள் மூழ்கின பின்னர் நீரிற் கிடந்தாலும் கெடாதவாறு போல மாதர்களோடு கலவித் தொழிலில் ஆழ்ந்து கிடந்த மூடனேனுடைய நெஞ்சம் உன் அருட்பெருந்தீயில் மூழ்கிய பிறகு சிற்றின்ப அனுபவத்தால் விளையும் துன்பம் வந்து தாக்காதபடி. எழிலை ஆழ் செய்கை - அழகையும் தோற்கச் செய்யும் செய்கையையுடைய (மிக்க அழகு பொருந்திய) என்னலுமாம்.

வையவாம் பெற்றம் பெற்றமே றுடையார் மாதர்
காதல்வைத் தென்னை வெய்யவாம் செந்தீப் பட்டஇட்
டிகைபோல் விழுமியோன் முன்புபின் பென்கோ நொய்ய
வாறென்ன வந்துள்வீற் றிருந்த நூறுநூ றுயிரகோ டி
மையவாங் கண்டத் தண்டவா னவர்கோன் மருவிடம் திரு
விடை மருதே. அ

கலங்கலம் பொய்கைப் புனற்றெளி விடத்துக் கலந்த
மண் ணிடைக்கிடந் தாங்கு நலம்கலந் தடியேன் சிந்தையுட்
புகுந்த நம்பனே வம்பனே னுடைய புலன் கலந் தவமே
யென்றுநின் றுருகிப் புலம்புவா ரவம்புகா ரருவி மலங்
கலங் கண்ணிற் கண்மணி யனையான் மருவிடம் திருவிடை
மருதே. கூ

(அ) வரி 1. வையஅவாம் பெற்றம் பெற்றம் ஏறு உடையார் வைக்கோலை விரும்பும் எருதின்மேல் ஏறிக்கொண்டிருக்கும் சிவபெருமான். வரி 2. கொடிய செந்தீயினால் சுடப்பட்ட செங்கற்களைப் போல மாறுபட்ட வண்ணம் என்னைச் செய்து மேன்மை பொருந்திய சிவபெருமான் எனக்கு முன்னும் பின்னும் உள்ளான் என்று சொல்லும்படி. இட்டிகை - செங்கல். நொய்யவாறென்ன எளிமையாக. மை அவாம் கண்டம் - மை விரும்பும் (அஞ்சனம் போன்ற கரிய) கழுத்து. நூறு நூறாயிரகோடி அண்டவானவர் கோன் எனக் கூட்டுக.

(கூ) வரி 1, 2. கலங்கலாக உள்ள குளத்து நீரைத் (தேற்றாங் கொட்டை முதலியவற்றால்) தெளியச்செய்த விடத்து, நீருடன் கலந்திருந்த மண் அடியிற் கிடந்தவாறுபோல நன்மையைத் தரும் திருவருளை என்னுடன் கூட்டி அடியேனுடைய சிந்தையுட் புகுந்த கடவுளே. கலங்கல் நீர் ஆன்மாவிற்கும், மண் மும்மலத்திற்கும், திருவருள் நீரைத் தெளிவிக்கும் பொருளுக்கும் உவமை. வம்பனே ......அனையான் - துஷ்டனாகிய என்னுடைய அறிவினுட் கலந்தவனே. எக்காலத்தும் உன் தொண்டில் நின்று மனம் உருகிக் கதறுகின்றவர்கள் பயனற்றுப் போமாட்டார்கள் (நல்ல பலனை அடைவார்கள்). அப்படிப்பட்ட அடியவர்களுடைய அருவியைப் போன்று ஆனந்தக் கண்ணீரைச் சொரியும் கலங்கிய தோற்றத்தையுடைய அழகிய கண்களிற் கண்மணியைப் போன்ற சிவபெருமான். அல்லது அருவி மலங்கல் அம் கண் - அருவியிலிருக்கும் மலங்கல் மீன் போன்ற அழகிய கண்.

ஒரு கிருங் ண் ரின் என் ரில்புன் மாக்கள் உறங்
ருள் நடுநல்யா மத்தே, ரர் கருங்கண்ணின் றிமைக்குஞ்
செழுஞ்சுடர் ளி கங் கலந்தெனக் கலந்துணர் ருவூர்
தரு கரும் பனைய தீந்தமிழ் மாலை தடம்பொழில் மருதயா
ழுதிப்ப ரு ருங் கண்டத் தண்டவா னவர்கோன் மரு
விடம் திருவிடை மருதே. ௧௦

திருச்சிற்றம்பலம்

பூந்துருத்தி நம்பிகாட ம்பி அருளிய

திருவிசைப்பா

---

௧ திருவாரூர்

பண பஞ்சமம

திருச்சிற்றம்பலம்

கை குவான் முத்தின் சரிவளை பெய்து கழுத்தி
லோர் தனிவட ட்டி முக்கண்நா ய ராய்ப் பவனிபோந்

---

(௧௦) ஒருங்குஇரும் கண்ணின் - ஒன்று சேர்ந்து தொழிலைச் செய்யும் இரண்டு கண்களையுடைய. மாக்கள் - அறிவில்லாத மக்கள். வரி 2. கருநிறம் பொருந்திய ண்ணுனது பிரகாசிக்கும் சுடரொளியோடு கலந்து பொருள்களைப் பார்ப்பதுபோல், இறைவனுடைய அறிவோடு லந்து உணரும் தன் ம பெற்ற ருவூர்த் தேவர். தரும் - செய்த. தடம்பொழில் மருதயாழ் உதிப்ப வரும் - பெரிய சோலையினிடத்து மருதயாழுடன் லந்து பாட , அதனால் வெளிப்பட்டுத் தோன்றும். மருதயாழ் - ஒருவகை யாழ்.

(௧) வால்முத்து அல்லது நன்முத்து. நல் - வெண்மையா . வான் - பெருமையுள்ள. சரி வளை - கூட்டமாகிய வளையல் அல்லது ழலும் தன் மயு டய வளைய ், இது இடப்பா த்தில் உள்ள உமா தேவியார் அணிந்துள்ளது. பெய்து - அணிந்து. தனி வடம் ஒப்பற்ற மாலை.

இங்ஙன் முரிவதோர் முரிவுமை யளவுந் தக்கசீர்க் கங்கை
யளவுமன் றென்றே தம்மொருப் பாடுல கதன்மேல் மிக்க
சீராரூர் ஆதியாய் வீதி விடங்கராய் நடம்குலா வினரே ௧

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப் பருகுதோ(று) அமுதமொத் தவர்க்கே தித்தியா விருக்குந் தேவர்காள் இவர்தந் திருவுரு இருந்தவா பாரீர் சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த தனிமுழு முதலுமாய் அதற்கோர் வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி விடங்கராய் நடம் குலா வினரே. ௨

திருச்சிற்றம்பலம்

( ) இங்ஙன் முரிவதோர் முரிவு உமை அளவும்...ஒருப்பாடு - இவ்வாறு தோன்றுகின்ற அழகிய தோற்றமானது உமாதேவியார் இடத்தும் தக்க சிறப்பினையுடைய கங்காதேவி யிடத்தும் கூடக் கிடையாது. இப்படி அவர் கோலம் கொள்வதற்கு அவருடைய கருத்து தான் யாதோ? நடம் குலாவினர் - நடனம் செய்து விளங்குகின்றார். உரைநடை:- கைக்கு...பவனிபோந்து உலகதன் மேல் மிக்க சீராரூர்...நடங்குலாவினர்; இங்ஙன் முரிவதோர்...அளவுமன்று; தம் ஒருப்பாடு என்னோ?

(உ) வரி 1, 2. சிவபெருமானிடத்து அன்பு பூண்டு அவருடைய தன்மையை உணர்பவர்கள் திருவருளை நன்றாக உட்கொண்டு (திருவருளின் வசப்பட்டுத் தம் வசம் இழந்து) உணருந்தோறும் அவர்களுக்கு அத்திருவருள் அமுதம் போன்று பேரின்ப உணர்ச்சியைத் தருகின்றது. தேவர்களே. இவருடைய திருவுருவம் (அருள் வடிவம்) இருந்த விதம் இத்தன்மையது என்று அறியுங்கள். அதற்கோர் வித்துமாய் உலகங்கள் தோன்றுவதற்கு மூலகாரணமாகியும். சத்தியாய்ச்......நடங்குலாவினர்; பத்தியாய்......தித்தியாவிருக்கும் தேவர்காள். இவர்தம் திருவுரு இருந்தவா பாரீர். உ உரைநடை.

உ கோயில்

பண் - சாளர பாணி

திருச்சிற்றம்பலம்

முத்து வயிரமணி மாணிக்க மாலைகண்மேல்
தொத்து மிளிர்வனபோல் தூண்டு விளக்கேய்ப்ப
எத்திசையும் வானவர்கள் ஏத்தும் எழில்தில்லை
அத்தனுக்கும் அம்பலமே ஆடரங்கம் ஆகின்றதே. க

டியார் கணம்டல்லர் கண்ணப்பர் என்றுன்
அடியார் அமருலகம் ஆளநீ ஆளாதே
முடியாமுத் தீவேள்வி மூவாயி ரவரொடுங்
குடிவாழ்க்கை கொண்டுநீ குலாவிக்கூத் தாடினையே. உ

அல்லியம் பூம்பழனத்(து) ஆமூர்நா வுக்கரசைச்
செல்ல நெறிவகுத்த சேவகனே தென்தில்லைக்
கொல்லை விடையேறி கூத், ா டரங்காகச்
செல்வம் நிறைந்தசிற் றம்பலமே சேர்ந்தனையே. ௩

(க) தொத்து - பூங்கொத்து. போல் - போன்றும். தூண்டு விளக்கு ஏய்ப்ப - தூண்டப்பட்ட விளக்கின் ஒளியைப்போன்றும். அம்பலம் - தில்லைவெளி. மிளிர்வனபோல், விளக்கு ஏய்ப்ப என்பனவற்றை அம்பலமே என்னும் சொல்லோடு கூட்டி, பிரகாசிப்பன போன்றும், விளக்கைப் போன்றும் (இருக்கும்) அம்பலம் என்று பொருள் உரைக்க. ஆடு அரங்கம் நடனசபை.

(உ) கடிஆர் - சிறப்பு மிக்க. என்று உன் அடியார் - என்று பெயர்கொண்ட உன் அடியவர்கள். முடியா - அழியாத. குடி வாழ்க்கை கொண்டு - உடனுறையும் வாழ்க்கையினை மேற்கொண்டு. குலாவி - மகிழ்ந்து.

(௩) வரி 1. அகவிதழ்களோடு கூடிய அழகிய பூக்களையுடைய திருவாமூரில் அவதரித்த திருநாவுக்கரசு சுவாமிகளை. செல்ல நெறி வகுத்த - முத்தியை அடையும் பொருட்டு வழியினைக் காட்டிய. கொல்லை விடையேறி கொல்லையில் மேயும் தன்மையுடைய இடபம் ஏறினவனே. கூத்தாடு அரங்கு - நடனசபை.

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட் டெமைய ளும
சம்பந்தன் காழியர்கோன் தன்னையும்ஆட் கொண்டருளி
அம்புந்து கண்ணாளுந் தானும் அணிதில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை ஆயிற்றே. ௪

களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதமாறா வெள்ளானை மேல்கொள்ள
முளையா மதிசூடி மூவாயி ரவரோடும்
அளையா விளையாடும் அம்பலம்நின் ஆ ரங்கே ௫

அகலோக மெல்லாம் அடியவர் ள் தற்சூழப்
புகலோக முண்டென்று புகுமிட(ம்)நீ தேடாதே
புவலோக நெறிபடைத்த புண்ணியங் ள் நண்ணியசீர்ச்
சிவலோகம் ஆவதுவுந் தில்லைச்சிற் றம்பலமே. ௬

ள மணி மாடம் சூளிகை சூழ் மாளிகை மேல்
அள மதி நுதலார் ஆயிழையார் போற்றிசைப்ப
ஒளிகொண்ட மாமணிகள் ஓங்கிருளை ஆங்(கு)அகற்றுந்
தெளிகொண்ட தில்லைச்சிற் றம்பலமே சேர்ந்தனையே. ௭

---

(௪) பந்த வல்வினை - (உயிரைக்) கட்டியிருக்கும் கொடியவினை. சம்பந்தன் காழியர்கோன் - சீ ாழித் தலைவரான திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள். அம்பு உந்து கண்ணாள் - செலுத்தப்பட்ட அம்பு போன்ற கண்ணையுடைய உமாதேவியார்.

(௫) களையா உடல் - நீங்காத உடல். மதம் ஆறு விளையா - மத நீர் ஆறுபோலப் பெருகி ஓடுகின்ற. முளை ஆம் மதி - முளைபோன்று வளர்ந்த பிறைச்சந்திரன்; அல்லது, இப்போதுதான் முளைத்ததோ என்று சொல்லும்படியான இளம்பி ற. அளையா - அளைந்து, கலந்து. இச்செய்யுளில் உடலைவிட்டு நீங்காமல் சேரமான் பெருமாள் நாயனாரும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் கைலாயம் சென்ற வரலாறு குறிக்கப்பட்டுள்ளது. சுந்தரர் சிவபெருமானால் அனுப்பப்பட்ட வெள்ளை யானைமீது ஏறிக்கொ ண்டு கைலைக்குச் சென்றார்.

(௬) அகலோகம் - பூவுலகம். தற்சூழ - தன்னைச் சூழ்ந்துவர. ரி 2. அடையத்தக்க உலகம் வேறு உண்டென்று கருதி அவ்விடத்தைத் தேடிச் செல்லாமல். புவலோ ம் - மேலுலகம் ஏழின் ஒன்று.

(௭) களகம் - சழகம்; கல்வி பயிலும் இடம். சூளிகை - நிலா முற்றம். அளகம் - கூந்தல். ஆய் இழையார் - விசேஷ ஆபரணங்களை அணிந்த பெண்கள். போற்றிசைப்ப - வணங்க. தெளி - ஒளி.

பாடகமும் நூபுரமும் பல்சிலம்பும் பேர்ந்தொலிப்பச்
சூடகக்கை ல்லார் தொழுதேத்தத் தொல்லுலகில்
நாடகத்தின் கூத்தை நவிற்றுமவர் நாடோறும்
ஆட த்தால் மேய்ந்தமைந்த அம்பலம் நின் ஆடரங்கே. அ

உருவத்(து) எரியுருவாய் மூதோ றெத்தனையும்
பரவிக் கிடந்தயனும் மாலும் பணிந்தேத்த
இரவிக்கு நேராகி ஏய்ந்திலங்கு மாளிகை சூழ்ந்
தாவிக்கும் அம்பலமே ஆடரங்கம் ஆயிற்றே.

சேடர் உறைதில்லைச் சிற்றம் பலத்தான்தன்
ஆடல் அதிசயத் த ஆங்கறிந்து பூந்துருத்திக்
ாடன் தமிழ்மாலை பத்துங் கருத்தறிந்து
பாடும் இவைவல்லார் பற்றுநிலை பற்றுவரே க0

திருச்சிற்றம்பலம்

(அ) நூபுரம் - பாதகிண்கிணி. சூட ம் - வளை. தொல் ுல கில் ாடகத்தின் கூத் த நவிற்றுமவர் - பழமையான உல மாகிய நாட மேடையில் உயிர் ளை யெல்லாம் கூத்தாடச் செய்பவராகிய சி பெருமான். ' ளை ா ம் ஆடுவித்தவா ' திரு ாச ம. (வ ான டரும்) ஆட த்தால் மேய்ந்த மந்த பெ ன்னால் மூடப் பட்டுள்ள. மேய்தல் - மூடுதல்.

(கூ) உருவத்து எரி உருவாய் தீப்பிழம்பாகிய உரு த்துட . ரி 3. சூரியனுக்குச் சமமா ஒளி பொருந்தி விள ்குகின்ற ாளி ள் சூழ்ந்துள்ள. அரவிக்கும் - ஆரவாரஞ் செய்யும்.

(க0) சேடர் - அடியவர். பற்று(ம்) நிலை பற்றுவர் சி பெரு ாளை அ டயும் நிலைமை யப் பெறு ார்.

1

கண்டராதித்தர் அருளி

திருவிசைப்பா

கோயில்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

மின்னாருருவம் மேல்விளங்க வெண்கொடிமா ளிகைசூழப்
பொன்னார்குன்றம் ஒன்றுவந்து நின்றது போலுமென்னாத்
தென்னாவென்று வண்டுபாடுந் தென்தில்லை யம்பலத்துள்
என்னாரமுதை யெங்கள்கோவை யென்றுகொ லெய்துவதே

ஓவாமுத்தீ அஞ்சுவேள்வி ஆறங்க நான்மறையோர்
ஆவேபடுப்பார் அந்தணாளர் ஆகுதி வேட்டுயர்வார்
மூவாயிரவர் தங்களோடு முன்னரங் கேறிநின்ற
கோவேயுன்றன் கூத்துக்காணக் கூடுவதென்று கொலோ. உ

முத்தீயாளர் நான்மறையர் மூவா யிரவர்நின்னோ
டொத்தேவாழுந் தன்மையாளர் ஓதிய நான்மறையைத்
தெத்தேயென்று வண்டுபாடுந் தென்தில்லை யம்பலத்துள்
அத்தாவுன்தன் ஆடல் காண அணைவது மென்றுகொலோ. ௩

(க) மின்னார் - மிளிர். சூழ - சூழ்ந்து இருக்க. என்னா - என்று சொல்லும்படி. தில்லையம்பலம் பொன்னாலாகிய குன்றுக்கு உவமை.

(உ) ஓவா - அணையாத. அஞ்சு (ஐந்து) வேள்வியாவன பிரமயாகம், தேவயாகம், மானுடயாகம், பிதுர்யாகம், பூதயாகம். ஆவே படுப்பார் - பசுத்தன்மையை (மும்மலங்களால் கட்டப்பட்டிருக்கும் தன்மையை) ஒழிப்பார். ஆகுதி வேட்டு உயர்வார் - நெய் விட்டு ஓமாக்கினியை வளர்த்து மேம்பாடு அடைவார்.

(௩) நின்னோடு ஒத்தே வாழும் தன்மையாளர் - உன் திருவருள் வழி நின்று வாழும் வாழ்க்கையை மேற்கொள்பவர்.

மானைப்புரையும் மடமென்னோக்கி மாமலை யாளொடும்
ஆனஞ்சாடுஞ் சென்னிமேலோர் அம்புலி சூடுமரன்
தேனைப்பாலைத் தில்லைமல்கு செம்பொனின் அம்பலத்துக்
கோனைஞானக் கொழுந்துதன்னைக் கூடுவ தென்றுகொலோ.

களிவானுலகிற் கங்கை நங்கை காதலனே யருளென்
றொளிமால் முன்னே வரங்கிடக்க உன்னடியார்க் கருளுந்
தெளிவா ரமுதே தில்லை மல்கு செம்பொனின் அம்பலத்துள்
ஒளிவான் சுடரே உன்னைநாயேன் உறுவதும் என்றுகொலோ.

பாரோர்முழுதும் வந்திறைஞ்சப் பதஞ்சலிக்(கு) ஆட்டுகந்தான்
வாரார்முலையாள் மங்கைபங்கன் மாமறையோர் வணங்கச்
சீரான்மல்கு தில்லைச்செம்பொன் அம்பலத் தாடுகின்ற
காரார்மிடற்றெங் கண்டனாரைக் காண்பதும் என்றுகொலோ.

இலையார்கதிர்வேல் இலங்கைவேந்தன் இருபது தோளும்இற
மலைதானெடுத்த மற்றவற்கு வாளொடு நாள்கொடுத்தான்
சிலையால்புரமூன் றெய்தவில்லி செம்பொனின் அம்பலத்துக்
கலையார்மறிபொற் கையினானைக் காண்பதும் என்றுகொலோ.

(ச) புரையும் - ஒத்த. மடம் மென் நோக்கி - இளமையும் மென்மையும் உள்ள பார்வையையுடையவள் (ஆன). ஆன் அஞ்சு - பசுவின் பால் முதலிய பஞ்ச கவ்வியம். அம்புலி சந்திரன். அம்பலம் - நடனசபை.

(ரு) களிவானுலகில் கங்கை - இன்பம் நுகர்தற்குரிய தேவலோகத்தில் இருந்த கங்காநதி. வரி 2. பிரகாசிக்கும் மேனியுடைய திருமால் எதிரில் வரம் பெற விரும்பி வணங்கிக் கிடக்க, அவருக்கு அருள் செய்யாமல் உன் அடியவர்களுக்கு அருள் செய்யும். தெளிவு ஆர் அமுதே - தெளிந்த அரிய அமுதம் போல்பவனே.

(சு) பதஞ்சலிக்கு ஆட்டு உகந்தான் பதஞ்சலி முனிவருக்கு முன்னே மகிழ்ந்து நடனம் புரிந்தவன். கண்டனார் எசமானர் வீரர்; அல்லது கண்டு அ(ன்)னார் - கற்கண்டுபோல் இனியவர்.

(எ) இலை ஆர் கதிர்வேல் - இலை வடிவோடு கூடிய ஒளி பொருந்திய வேலாயுதம். இற - ஒடிய. கலை ஆர் மறி பொற்கையினான் - பெண் கலைமானை ஏந்திய அழகிய கையையுடையவன்.

வெங்கோல்வேந்தன் தென்னன்நாடும் ஈழமும் கொண்டதிறற்
செங்கோற்சோழன் கோழிவேந்தன் செம்பியன் பொன்னணிந்த
அங்கோல்வளையார் பாடியாடும் அணிதில்லை அம்பலத்துள்
எங்கோன்ஈசன் எம்மிறையை என்றுகொல் எய்துவதே. அ

நெடியானோடு நான்முகனும் வானவரும் நெருங்கி
முடியான்முடிகள் மோதியுக்க முழுமணியின் திரளை
அடியார்அலகி னால்திரட்டும் அணிதில்லை அம்பலத்துக்
கடியார்கொன்றை மாலையானைக் காண்பதும் என்றுகொலோ.

சீரான்மல்கு தில்லைச்செம்பொன் அம்பலத் தாடிதன்னைக்
காரார்சோலைக் கோழிவேந்தன் தஞ்சையர் கோன்கலந்த
ஆராஇன்சொற் கண்டராதித்தன் அருந்தமிழ் மாலைவல்லார்
பேராவுலகிற் பெருமையோடும் பேரின்பம் எய்துவரே. க0

திருச்சிற்றம்பலம்

(அ) வெங்கோல் - கொடுங்கோல். ஈழம் - ஈழநாடு. கோழி உறையூர். அம்கோல் வளையார் - அழகிய வளையல்களை அணிந்த மாதர்கள். பொன் அணிந்த (பொன்தகட்டினால் மூடிய) தில்லை அம்பலம் என்று கூட்டுக.

(கூ) நெடியான் - நீண்ட உருவங்கொண்ட திருமால். முடியான் முடிகள் கிரீடங்களோடு கிரீடங்கள். உக்க சிந்தின. அலகு-துடைப்பம். கடிஆர் மணம் நிறைந்த.

(க0) கார்ஆர் சோலை மேகங்கள் தவழும்படி உயர்ந்த சோலை அல்லது (மரங்கள் அடர்ந்திருப்பதால்) இருள் மிகுந்த சோலை. கோழிவேந்தன் தஞ்சையர்கோன் (ஆகிய) கண்டராதித்தன் கலந்த ஆரா இன்சொல் அருந்தமிழ் மாலை உறையூர் அரசனும் தஞ்சை மன்னனுமான கண்டராதித்தன் திருவருளோடு கலந்து பாடின தெவிட்டாத இனிய சொற்களோடு கூடிய அரிய தமிழ்ப்பாமாலை. பேரா உலகு - விட்டு நீங்குதல் இல்லாத முத்தி உலகம்.

வேணாட்டடிகள் அருளிய

திருவி சபபா

கோயில்

பண் - புறநீ

திருச்சிற்றம்பலம்

துச்சான செய்திடினும் பொறுப்ப ரன்றே ஆளுகப்பார்
கை ச்சாலுஞ் சிறு தலி இலைவேம்புங் கறிகொள்வா
எச்சார்வு மில்லாமை நீயறிந்தும் எனதுபணி
நச்சாய்காண் திருத்தில்லை டம்பயிலும் நம்பானே க

தம்பானை சாய்ப்பற்றார் என்னும் முதுசொல்லும்
எம்போல்வார் 'கில்லாமை யென்னளவே யறிந்தொழிந்தேன்
வம்பாளுர் பணியு த்தி வழியடியேன் தொழிலி றயும்
நம்பாய் ாண் திருத்தில்லை டம்பயிலும் நம்பானே உ

(க) துச்சான - இழிவான தொழில்கள். ஆள் உ ப்பார் - அடிமை ய விரும்புபவர். கை ச்சாலும் கை த்தாலும் சந்தாலும். சிறு தலி - இ ா வா ழக்காய். இலைவே ம்பு - வேப்பிலை. கறிகொ ா ார் கறிசெய்வதற்கு உபயோகிப்பார் ள். எச்சார்வு எவ்வித ஆதரவு. பணி - தொ டு. நச்சாய் விரும்பாய். நம்பானே டவுளே.

(உ) வரி 1 ?. யாரும் தம்மு டய பானையை சாய்த்துப் பிடிக் மாட்டார் ள் எ கி ற பழமொழியும் எம் மப்போன்றவர் குப் பொருந்தா ம எ ிடத்தே ண்டுகொண்டேன். முதுசொல் - பழமொழி. ம்பு ஆளுர் புதியராய் வந்த ர். பணி உகத்தி - அடிமைத் தொண்டினை விரும்புகிருய். வழி அடியேன் - பரம்ப ர அடியவன். தொழில் இ றயும் நம்பாய் - தொ டினைச் சிறிது விரு பமாட்டாய். எ ரும் தம்மு டய பானை யச் சாய்க்காமல் பிடித்து நீ ர நிரப்பிக் ொள்வதுபோல, உ அடியவனை தொண்டினை ஏற்று ன்னை உன் ருணையினுல் நிரப்பே டும் எ பது இப்பாட்டின் ருத்து.

பொசியாதோ கீழ்க்கொம்பு நிறைகுளமென் றதுபோலத்
திசைநோக்கிப் பேழ்கணித்துச் சிவபெருமா னேவெனினும்
இசையானால் என்திறத்தும் எனையுடையாள் உரையாடாள்
நசையானேன் திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே. ௩

ஆயாத சமயங்கள் அவரவர்கள் முன்பென்னை
நோயோடு பிணிநலிய இருக்கின்ற அதனாலே
பேயாவித் தொழும்பனைத்தம் பிரான்இகழு மென்பித்தாய்
நாயேனைத் திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே. ௪

நின்றுநினை திருந்துகிடந் தெழுந்துதொழும் தொழும்பனேன்
ஒன்றியொரு கால்நினையா திருந்தாலும் இருக்கவொட்டாய்
ன்றுபிரி கற்றாப்போல் கதறுவித்தி வரவுநில்லாய்
ன்றிதுவோ திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே. ௫

---

(௩) வரி 1. நிறைந்த குளத்தினருகிலிருக்கும் பள்ள வயலிலுள்ள பயிர் முளைக்குக் குளத்தின் நீர் கசிந்து பாயாதோ என்னும் பழமொழி எனக்குப் பொருந்தவில்லை; ஏனெனில் சிவபெருமானைச் சரணா அடைந்த நான் அவரை அணுகி முறையிட்டாலும் அருள் புரியாமல் இருக்கின்றார். நிறை குளம் - கருணை நிறைந்த சிவபெருமானுக்கு உவமை. பேழ்கணித்து - மருண்டு விழித்து. சிவபெருமான் ஓ எனினும் - சிவபெருமானே. ஓவென்று கதறினாலும். இசையான் - (என் வேண்டுகோளுக்கு) இணங்கமாட்டான். ஆல் - அசை. எனை உடையாள் - என்னை ஆளாக உடைய உமாதேவியார். உரையாடாள் பேசாதிருக்கின்றாள். நசை ஆனேன் ஆசைப் பட்டேன்.

(௪) ஆயாத - ஆராய்ச்சி இல்லாத. சமயங்கள் அவரவர்கள் - சமயத்தை அனுட்டிப்போர். வரி 2 3. என்னைப் பல நோய்கள் வருத்துகின்ற காரணத்தினால், “இத்தொண்டனைப் பேய் என்று கருதித் தம்பிரானே இகழ்கின்றான் (அருளாதிருக்கின்றான்)” என்று அவர் சொல்லிப் பரிகசிக்கும்படி நாய்போன்ற என்னைச் செய்தாய்.

(௫) வரி 1. நிற்கும்போதும், இருக்கும்போதும், கிடக்கும்போதும், எழும்போதும் உன்னை நினைந்து வணங்கும்படியான உன் அடியவனான நான். வரி 2. ஒரு சமயம் உன்னை ஒன்றி (ஐம்புலன்களும் ஒற்றுமைப்பட்டு) நினையாமல் இருந்தாலும், என்னை அப்படி இருக்க விடமாட்டாய் (எக்காலத்தும் உன்னை நினைக்கும்படி செய்வாய்.) கற்றா - கன்றையுடைய பசு. வரவு நில்லாய் - வந்து எதிரில் நிற்கமாட்டாய்.

படுமதமு மிடவயிறும் உ டய ளி றுடையபிரான்
அடியறிய உ ர்த்துவதும் அ த்தியனுக் ே ாத்தன்றே
இடுவதுபுல் லோரெருதுக் கொன்றினுக்கு வையிடுதல்
டுவிதுவோ திருத்தில்லை டம்பயிலும் நம்பானே ௬

ம ் ணோடு விண்ணளவும் மனிதரொடு வானவர்க்குங்
க ் ணாவாய் கண்ணாகா தொழிதலும்நான் மிகக் ல ் கி
அண்ணாவோ என்றண்ணாந் தலமந்து விளித்தாலும்
நண்ணாயால் திருத்தில்லை நடம்பயிலும் ம்பானே. ௭

வாடா வாய் ாப்பிதற்றி உனைநினைந்து நெஞ்சுரு
வீடாஞ்செய் குற்றேவல் எற்றேமற் றிதுபொய்யிற்
கூ ாமே கைவந்து குறுகுமா றியான்உன்னை
ாடாயால் திருத்தில்லை நடம்பயிலும் ம்பானே ௮

வாளாமால் அயன்வீழ்ந்து காண்பரிய மாண்பிதனைத்
தோளாரக் கையாரத் துணையாரத் தொழுதாலும்
ஆளோநீ யுடையதுவும் அடியேனுன் தாள்சேரும்
ாளேதோ திருத்தில்லை டம்பயிலும் நம்பானே.

---

(௬) படுமதமும் மிட யிறும் - ஒழுகுகின்ற மதநீரும் மிட (பானை) போன்ற வயிற் றயும். இட யிறு எனப் பிரித்து பெரிய யிறு எனவும் பொருள்கெ ாள்ளலாம். களிறு - விநாயகர். அடி - திருவடியின் தன்மை. ஒத்து - ே தம். வை - ே ால். நடு இதுவோ - இது நடுநிலை ம ஆகுமோ ?

(௭) ண் - ஆதரவு. அலமந்து துன்புற்று. நண்ணாய் - சமீபிக் மாட்டாய்.

(௮) வாடா ாய் நாப் பிதற்றி - வாய் வாட்டமடைந்து ாவினால் உளறி. வரி 2. வீடு ஆம் செய்குற்றே ல் மற்று எற்றே முத்தியத் தரும்படியான குற்றே ல் இ தத் தவிர ே று யாது உளது? ை வந்து - ை ெ டுத்து உதவி. யா ் உன்னைக் குறுகுமாறு. ாடாய் - விரும்பாய் அரு மாட்டாய ?

( ) துணை ஆர ஆதர ா. ஆளோ நீ உ டயது ம் நீ ் னை அடியானை உ டயதுவும் உ ் மைதானோ?

பா ர்'த தமிழ்மாலை பத்தரடி,' தொ 'டடு டுத்
தோவாதே அழை'கின்றான் என்றருளின் ன்றுமிகத்
தேவேதென் திருத்தில்லைக் கூத்தாட ரயடி'யேன்
சா ரயும் நினைக் ர ' டல் இனியுனை'குத் தடுப்பரிதே ௧௦

திருச்சிற்றம்பலம்

திருவாலியமுதனார் அருளிய

திருவி சபபா

௧ கோயில் - பாதாதிகே ம்

பண - பஞ் ம ம

திருச்சிற்றம்பலம்

மையன் மாதொருகூறன் மால்விடை யேறி மான்
மறி யே'தியதடங் கையன்கார் புரையுங் கறை' க ' டன்
னல் மழுவான் ஐயன் ஆரழ லாடு வான்அணி நீர்வயல்
தில்லை யம்பலத்தான் செய்ய பாதம் வந்தென் சிந்தையுள்ளி
ட' கொ ' டவே ௧

---

(௧0) ஓவாதே ஓயாமல். அருளின் மிக நன்று. வரி 4. ர '
சாரும் ரலத்திலும் நீ காட்சி கொடுக்காமல் தடைசெய்ய முடியாது.
'ப னெனும் நாமம் பிடித்துத் திரிந்து ப ' ளுள் அ ழுத்தால்
இவனெனைப் பண்ளுள் அ முப்பொழியா னென்றெதிர்ப்படுமே''
அபப (சி னெனு).

( ) மயல் ம தொருகூற ' - மிக் காதல் ெ ர ' ட உமா
தேவியா ரப் பா த்தில் வைத்த ன். மால்விடை யேறி - திருமாலா
கிய இடபத்தின்மீது ஊர்பவன். ரர் பு ரயும் ற 'கண்ட ' -
மே ம் போன்று கறுத்த விஷம் பொரு'திய ண்டத் தயு டய
'. செய்ய - சி ந்த.

சலம்பொற் றாமரை தாழ்ந் தெழுந்த தடமும் தடம் பு ல் ாய் மலர், பூஇ அலம்பி ண்ட ற யும்அணி யார் தில்லை அம்பலவன் புலம்பி வானவர் தானவர் பு ழ்ந் தேத்த ஆடுபொற் கூத்தனார்கழற் சிலம்பு கி கிணியென் சிந்தை யுள்ளிட ெ ாண்டனவே. உ

குருண்ட வார்குழற் ே ாதை மார்குயில் போன்மி ழற் றிய ே ாலமாளிகை திர ண்ட தில்லைத ுள் திரு மல்கு சிற் றம்பலவன் மருண்டு மாமலை யான்மகள் தொழ ஆடு கூ த மணிபுரைதரு திர ண் ான்குற ெ ன் சிந்தை யு ளிட ெ ாண்டனே . ங

போழ்ந்து யானை தன்னைப் பொருப்பன் மகளுமை யச்ச ண்டவன் தாழ்ந்த த புனல் சூழ், டம் மல்குசிற் றம்பலவன் சூழ்ந்த பாய்புலித் தோல்மிசைத் தொடுத்து வீ்கும் பொ நூல் தன்னிறைடு தாழ்ந் த ச்சதன்ே ற தமியேனைத் தளர்வித்ததே.

பந்த பாசமெலாம் அறப்பசு பாசம் நீ கிட பன்முனிவரோ டந்தணர் வண ்கும் அணியார் தில்லை அம்பலவன்

— — — —

(உ) வரி 1. நீர் தாழ்ந்திருப்ப அதில் பொற்றாமரை மேலெழுந்து நிற்கும் குளமும், குளத்து நீரினிடத்துள்ள தாம ர மலரை அணைந்து. அலம்பி வ டு அறையும் ாங ாரம் செய்துெ ாண்டு வண்டுகள் பூவினிடத்து மோதுகின்ற. புலம்பி (அன்பினால்) ஆ ந்த ணீர் சொரிந்து. சிலம்பு கிண்கிணி - ஒலிக்கும் சதங் .

(ங) குரு ட - சுருண்ட. மிழற்றிய ெ ாஞ்சிப் பேசுகின்ற. மணி பு ரதரு மாணி க்கத்தை யொத்த. வான் குறங்கு - பெரு ம யு டய தொ ட.

(ச) போழ்ந்து - பிளந்து. பொருப்பன் ம ள் - மலைய ரயன் ம ள் உமாதேவியார். வீக்கும் - கட்டிய. பெ ன் நூல் - அழகிய கயிறு. ச்சு இ ட கட்டு.

(ரு) வரி 1. ஆன்மாக் ளை கட்டியுள்ள ட்டு ர் (மும்மல ள்) அறுபட்டு ஒழியும்படி பசுபாசத் த (தற்போத உ ர்ச்சி ய) நீ கிய பல முனிவர் ளோடு.

செந்தழல் புரைமேனியுந் திகழுந் திருநீறும் விற்றினுள்
உந்திவான் சுழியென் னுள்ளத் துள்ளிடங் கொண்டவே.

குதிரை மாவொடு தேர்பல குவிந்தீண்டு தில்லையுள்
கொம்பனாரொடு மதுர வாய்மொழி யார்மகிழ்ந் தேத்து
சிற்றம்பலவன் அதிர வார்கழல் வீசிநின் றழகா நடம்
பயில் கூத்தன் மேல்திகழ் உதர பந்தனமென் னுள்ளத்
துள்ளிடங் கொண்டனவே. சு

படங்கொள் பாம்பணை யானொடு பிரமன் பரம்பரா
அருளென்று தடங்கை யால்தொழ வந்தழ லாடுசிற் றம்
பலவன் தடங்கை நான்குமத் தோள்களுந் தடமார்பினிற்
பூண்கள் மேற்றிசை விடங்கொள் கண்டமன்றே வினை
யேனை மெலிவித்தே. எ

செய்ய சேலொடுடன் கமல மலர்சூழ்தரு தில்லை மாமறை
யோர்கள் தாம்தொழ வையம் உய்ய நின்றுமகிழ்ந் தாடுசிற்
றம்பலவன் செய்ய வாயின் முறுவலும் திகழும் திருக்
காதும் காதினின் மாத்திரைகளோடைய தோடுமன்
றேயடி யேனையாட் கொண்டனவே. அ

(ரு) உந்தி வான்சுழி - வான் உந்திச் சுழி, பெருமை பொருந்திய கொப்பூழ்.

(சு) மா - யானை. குவிந்து ஈண்டு - சேர்ந்து நெருங்குகின்ற. கொம்பு அன்னார் - பூங்கொம்பு போன்ற மகளிர். மதுரவாய் மொழியார் - இனிய இசைப் பாடல்களைப் பாடுகின்ற அடியார். அதிர வார்கழல் வீசி - ஒலிக்கும்படியாக வீரக்கழலை அணிந்த நீண்ட பாதங்களை வீசி. உதர பந்தனம் - அரைப் பட்டிகை.

(எ) மேற்று இசை - மேற்பக்கத்தில் பொருந்திய. வினையேனை - தீவினையையுடைய என்னை.

(அ) செய்ய சேலொடுடன் மலமலர் சிவந்த வரிகளுடன் கூடிய தாமரை மலர். மாத்திரை - ஒருவகைக் காதணி. ஐய தோடு - அழகிய பெண் காதணி.

செற்று வன்புர ' தீயெழச்சிலை கோலி ஆரழல் ஊட்டினனவன்
எற்றி மாமணிக ளெறிநீர் தி 'லை யம்பலவன்
மற்றை நாட்ட மிரண்டொடு மலருந் திருமுகமும் முகத்தினுள்
ெ ற்றி நாட்டமன்றே நெஞ்சு ளேதிளைக் கின்றனவே கூ

தொறுக்கள் வா 'கமல மலருழக்கக் கரும்புநற் சாறு பாய்தர மறுக்கமாய் ' யல்கள் மடை பாய்தி 'லை அம்பலவன் மு றுக்கு வாசிை தன்னொடு முகிழ்த்தஅவ் வகத்திமொட் டொடுமத்தமும் பிறைக்கொள் சென்னியன்றே பிரியா தென்னுள் நின்றனவே. கo

தூவி ரோடு பூவ வைதொழு தேத்து கையின ராகி மிக்கதோர் ஆவி உள்நிறுத்தி யமர்ந்தூறிய அன்பின ராய்த் தேவர்தாந் தொழ ஆடிய தில்லைக் கூத்தனைத் திரு வாலி சொல்லிவை மேவ வல்லவர்கள் வி ை யானடி மேவுவரே. க

திருச்சிற்றம்பலம்

(கூ) செற்று - அழிக்கும் பொருட்டு. சிலைகோலி - வில்லை அல்லது மலை ய ளைத்து. ஆர்அழல் ஊட்டினன், அவன் - அரிய தீயை உண்ணும்படிச் செய்தவ '. எற்றி எறி வாரி எறிகின்ற. திளை ' கி ' ற பதிந்திரு 'கின்ற .

